உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனம் இரத்தினாசலம் மரகதாசலம்
என்னுமிம்மூன்று

தலங்களின் மான்மியங்கள்.

இவை,

கடம்பர்கோயில்-முத்துவீரப்பமுதலியாரென்னும்
பொன்னம்பலமுதலியாரவர்கள்
வேண்டுகோளின்படி
பிர்மஸ்ரீ. கு - சீனிவாசசாஸ்திரியாரவர்கள் முன்னிலையில்
யாழ்ப்பாணம் - வண்ணை
தாமோதரம்பிள்ளையவர்களியற்ற

அஷ்டாவதானம்
பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு
இவர்மாணாக்கரும் தணிகாசலபதியுபாசகருமாகிய
காஞ்சி - நாகலிங்கமுதலியாரவர்களது

சென்னை:
இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டன.

1891.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்


இயற்றிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

மணிவளர் கடல்சூழ் மாணிலந் தழீஇய
வணிவளர் கூல மனைத்து மருஉஞ்
சூழல் பஃறலை சூழ்ந்து களுறுஞ்
சோழ மென்னுந் தொன்மண் டலத்தி
லிம்மையு மம்மையு மெம்மையு புரக்கு
மம்மை யிடமா ரப்பன் றளிகளுண்
மடம்பல வொரீஇ மகிழ்வீ டருளுங்
கடம்ப வனத்தைக் கழறு மான்மியந்
தரத்தினிற் புகழத் தவம்வளர்ந் துறூஉ
மிரத்தின கிரியை யிசைக்குஞ் சரிதந்
தாங்கரு மின்பந் தருஉந் திவ்விய
வீங்கோய் மலையை யிறுத்த சரிதை
யாரியந் தன்னு ளறவோர் சொற்றவைச்
சீரியற் றேர்ந்து செவ்வே யாய்ந்தே
யமிழ்தமிழ் தென்ன வனைவரும் போற்றுந்
தமிழிற் பெயர்த்துத் தந்தன னன்கு
பரமன் பெருமை பரவ வுன்னிப்
பிரம வித்தியா பிரசுரஞ் செய்தங்
காணிய முழுது மரன்புகழ் பேசுஞ்
சீனி வாசச் சீரிய விப்பிர
னன்ன சரித்திர மழகுற நோக்கிச்

சிறப்புப்பாயிரம்.

சொன்னயம் பொருணயந் தொடைநய மேவப்
பைந்தேன் சொட்டும் பன்மொழி நிறீஇச்
செந்தமிழ் தன்னிற் செப்பி வைத்தனன்
பேழ்ப்பா வலர்கள் பிறங்கப் பெறூஉம்
யாழ்ப்பா ணத்தில் யாணர் விளைக்கும்
பண்ணை விளைவுள் பணில நிறைஇ
வண்ணை நகரில் வந்த கவிஞன்
கடன்மடை திறந்த காட்சியைக் கடுக்கு
மடல்பிர சங்க மாங்காங் கியற்றி
விவிலிய யானைகள் வீறிட் டோட
விவித வினவிடை விடுக்குஞ் சிங்க
மாமோ தைச்சிர வண்ண லடிபணி
தாமோ தரனெனுந் தகைவிற் பனனே
யிந்நா வலன்ற னியற்றிய நூல்களை
முந்நீர் வளைஇ முழுநிலம் பரவுபு
மெச்சிப் பெருமான் மேன்மை விளங்குவா
னச்சியி லிட்டிங் களித்தன னழகாய்த்
தடம்பல தாமரை தம்மிற் றழூஉங்
கடம்பர் கோயில் காணியாக் கொண்டோன்
தெய்வஞ் சிவமெனத் தேர்ந்த வைதிகச்
சைவவே ளாளர் தம்மில் வந்தோன்
சிவனடி யாரைச் சிவமென வெண்ணி
யவரடி பரவு மன்ப னுளன்
வாய்மை பொறுமை வண்மை பத்தி
தூய்மை யுண்மை தோன்றும் புண்ணியன்
கல்வி செல்வங் கருணை மிக்கோன்
நல்லவர் நாடு நற்குண மேரு
வித்தக விஞ்சையில் விருப்பங் கொளூஉ
முத்துவீ ரப்ப முதலியா ரென்னு
...னர் நாம நாட்டில் வழங்கும்
...ம் பலனும் புகழுடை யோனே.



க்

ரிசை

ததால் இங்

33/2

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முகவுரை.

சோழமண்டலத்திலே, திரிசிரபுரத்தினுக்கு இருபதுமயில் தூரத்திலே, அகண்டகாவேரிகரையின் இருபக்கத்திலே கடம்பவனம், இரத்தினகிரி, ஈங்கோய்மலையென மூன்று தலங்களுள. இவைத் தேவர்கள், முனிவர்கள் முதலியோரால் பூசிக்கப்பெற்றனவும், உண்மை நாயன்மார்களால்பாடப்பெற்றனவுமாகியமகிமையோடுங்கூடியவைகள். இத்தலங்களின் அற்புதச்சரித்திரங்கள் அடியார்கள் யாவருங்கண்டு களிக்கும்பொருட்டு, கடம்பர்கோயில் ஸ்தானிகர் சௌந்திர குருக்கள் குமாரர் சுப்பராயக்குருக்கள் விருப்பத்தின்படி, கண்ணூர்வட்டம் பேஷ்கார்வேலையிலிருந்த கந்தசாமிமுதலியார்குமாரர் முசிரிதாலுக்கா குமுஸ்தா கடம்பர்கோயில் முத்துவீரப்பமுதலியாரவர்கள், சிதம்பரம் பிரமஸ்ரீ- சீனிவாச சாஸ்திரியவர்களைக்கொண்டுபார்வையிடுவித்து அவரது அச்சுயந்திரசாலையிலேயே வடமொழியில் பதிப்பிக்கப்பட்டன. இந்நூல்கள் வடமொழியில் வல்லார்க்கேயன்றி மற்றையவர்கட்குப் பிரயோசனமின்மையினால் இந்

மூன்று தலங்களின் மான்மியங்களை ரிஷி சாஸ்திரியவர்களைக்கொண்டே மொழிபெயர்ப்பித்து, யாழ்ப்பாணம்-வண்ணை. தாமோதரம்பிள்ளை யவர்களால் செந்தமிழ் நடையில் கத்தியரூபமாக வியற்றுவித்து, சென்னையிலுள்ள அஷ்டாவதானம்- பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள் முன்னிலையில் அச்சிட்டு நிறைவேற்றப்பட்டன.

இவைநிற்க: இத்தலங்கள் சம்பந்தமாகவும் இவற்றைச் சமீபித்த அடியிற்குறித்த தலங்களின் சம்பந்தமாகவும் இவ்விடத்தில் ஒரு பெருந்திருவிழா மிகவைபவத்துடனடந்து வருகிறபடியால் அதனை மற்ற மண்டலங்களிலுமுள்ள அடியார்கள் யாவருந் தரிசித்து ஆனந்தமடையவேண்டுமெனும் பேரவாவுடன் அவ்வுற்சவமகிமையைச் சுருக்கமாக விங்கெழுதப்படும்.

புஷியவுற்சவசிறப்பு.

ஈங்கோய்த்தலத்திற்கும், கடம்பவனத்திற்கு மத்தியில் அகண்டகாவேரிநதியில், ஒவ்வொருவருடமு மகரமதியில் பூர்ணை புஷியநட்சத்திரமுங்கூடிய புண்ணியகாலத்தில், அடியில்கண்ட தலங்களில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானை அம்மையாருடன் இடபவாகனரூடராய் வெகுவிநோதமாய்ச்சித்திரித்து, அலங்கரிக்கப் [illegible] ஒதுக்குச்சப்பரத்தில் எழுந்தருளச்செய்து, தெ[illegible]ல் கடம்பவனேஸ்வரரும், வடகரையில் மா

கதேஸ்வரரும் அமர்ந்திருக்கும் சன்னிதானத்திற்கு எ
திரிலும் வாட்போக்கிச் சிகரம் தெரியும்படியான இடத்
தில் கடம்பன் சன்னிதிக்கு எதிரே சர்ப்பநதி சங்கமமு
ள்ள துறை அகண்டகாவேரியில் தீர்த்தங்கொடுக்கவரு
கையில் கச்சேரிப்பிள்ளையார் கோவிலுக்குச்சமீபத்தில்,
அதாவது கடம்பவனேஸ்வரர் ஆலயத்தின் தென்மேற்
குமூலையில் கடம்பவனேஸ்வரருக்கு முறையே ராஜே
ந்திரம் வெட்டுவாய்த்துறை, வாட்போக்கி, ஈங்கோய்,
கருப்பத்தூர் இந்தத்தலங்களின் சுவாமிகளுக்கும் சந்தி
ப்பு தீப ஆராதனை நடந்தபின் திருக்காவேரிக்கு முறை
யே, ராஜேந்திரம், வெட்டுவாய்த்துறை, கடம்பவனேஸ்
வரர், இரத்தினகிரியார், மரகதாசலேஸ்வரர், கருப்பத்தூ
ரார், இந்த முறையாக அகண்டகாவேரியின் நீரோடை
க்குச்சென்று அந்த இடத்திற்குவரும் முசிரி, வெள்ளூர்,
இந்தத்தலங்களின் சுவாமிகளுக்கும் கடம்பவனேஸ்வர
ருக்கும் சந்திப்பு நடந்து எண்மரும் ஒருங்குகூடி, இட
பலக்னத்தில் தீர்த்தம் கொடுத்து அந்த மகரநதியின்
நீரோடையை யடுத்து ஒவ்வொரு தலத்திற்கும் விநோ
தமாக அமைக்கப்பட்ட பந்தலில் எழுந்தருளச்செய்து
சாயரட்சைகாலஞ் சித்திரான்னங்களுடன் மகாநைவே
த்தியம் சோடச உபசார தீபாராதனை தரிசனமும் நடத்
தப்படும், அன்று இரவு முழுதும் ஆடல் பாடல் சங்கீத
முழக்கங்களும் ஷை தலங்களின் பந்தலையடுத்து வரிசை
வரிசையாகக் கடைகளின் சிறப்புகளைப்பார்த்தால் இங்

திரியகாட்சிக்கு வேறொன்றும் பார்க்கநாடாது. காவேரியின் மத்தியில் ஒருமயில் விசாலத்திற்குச் சூரியன் முன்சந்திரன் வெளிச்ச மெங்ஙன மழுங்குமோ அவ்விதம் கடைவீதிகளின் வெளிச்சத்தினுல் பூரணச்சந்திரன் வெளிச்ச மழுக்கமாகிவிடும். மறுதினம் உதயத்திற்குக் காலைசந்தி அலங்காரதீபம் நடப்பித்து மேலேசொல்லிய சப்பரத்தில் எழுந்தருளச்செய்து முறையே காவேரியாற்றிலேயே கடம்பவனேஸ்வரர்க்கும் வடகரையிலுள்ள மரகதகிரியார், முசிரி, வெள்ளூர், இந்தத்தலங்களின் சுவாமிகளுக்கும் சந்திப்பு தீபாராதனையானபின்பு தென்கரையிலுள்ள, ராஜேந்திரம், வெட்டுவாய்த்துறை இந்தக் சுவாமிகளுக்கு எழூர் பிடாரிகோவிலையடுத்தும், வைகநல்லூர் அக்கிரகாரம் கீழநாராசத்தில் இரத்தினகிரி, கருப்பத்தூர் இந்தத்தலங்களின்சுவாமிகளுக்கும் சந்திப்பு தீபாராதனை நடந்து ஜனங்களுக்குத் தெரிசனம் கொடுத்துவருகிறதை அன்புள்ளவர்கள் கண்டு களிப்புறுவதைச் சொல்லுவதிலளவுபடாது. இவ்விதம் சந்தியானவிடங்களிலிருந்தபடியே அந்தந்தத்தலங்களுக்குச் சேரும். இந்தப்பிரபலமான திருவிழாச்சிறப்பை அன்புள்ளவர்கள்ஒருதரம்பார்த்தால்திரும்பவருடந்தோறும் பார்க்கும்படிக் கவர்ச்சியை உண்டாக்கத்தக்கதாக விருக்கும்.

காவேரியின்தேன்கரையில்.

1. கடம்பர்கோவில் என்கிற கடம்பந்துறை.	சுவாமிதிருநாமம் கடம்பவனேஸ்வரர். தேவிதிருநாமம் முற்றிலாமுலையம்மை.
2. ராஜேந்திரம்	சுவாமிதிருநாமம் மத்தியார்ச்சுன ஈஸ்வரர். தேவிதிருநாமம் தேவநாகியம்மன்.
3. வெட்டுவாய் துறை.	சுவாமிதிருநாமம் மத்தியார்ச்சுன ஈஸ்வரர். தேவிதிருநாமம் தேவநாயகியம்மன்.
4. வாட்போக்கி.	சுவாமிதிருநாமம் இரத்தினகிரீஸ்வரர். தேவிதிருநாமம் சுரும்பார்குழலி.
5. கருப்பத்தூர்.	சுவாமிதிருநாமம் சிம்மபுரீஸ்வரர். தேவிதிருநாமம் சுகந்தகுந்தளாம்பாள்.

வடகரையில்.

6. திருஈங்கோய்.	சுவாமிதிருநாமம் மரகதாசலஈஸ்வரர் தேவிதிருநாமம் மரகதம்மாள்.

7. முசிரி. } சுவாமிதிருநாமம் சந்திரமௌளீஸ்வரர். தேவிதிருநாமம் கர்ப்பூரவல்லி.

8. வெள்ளூர் } சுவாமிதிருநாமம் திருக்காமீஸ்வரர் தேவிதிருநாமம் சிவகாமியம்மை.

முற்றிற்று.

இத்தலபுராணங்கள் வேண்டுபவர் குழித்தலை தாலுக்கா, கடம்பர்கோயில் கீழ்த்தெரு, முத்துவீரப்ப முதலியாரிடத்திலாவது, கடம்பர்கோவில் பழக்கடை சிதம்பரநாடா ரவர்களிடத்திலாவது பெற்றுக்கொள்ளலாம். வெளிதேசத்தார் மணியார்டராவது லேபிலாவது அனுப்பலாம். லேபில் அனுப்பினுல் ரூபாய்க்கு அரை அணு அதிகமாக அனுப்பவேண்டியது.

சமஸ்கிருதநூல் அணு	0—8—0
தமிழ்நூல் ரூபா	1—0—0

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனமான்மியம்.

இஃது,

கடம்பர்கோயில் - முத்துவீரப்பமுதலியாரென்னும்

பொன்னம்பலமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

பிர் மஸ்ரீ. கு - சீனிவாசசாஸ்திரியாரவர்கள் முன்னிலையில்

யாழ்ப்பாணம் - வண்ணை

தாமோதரம்பிள்ளையவர்களியற்ற

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

ஷை பொன்னம்பலமுதலியாரவர்களால்

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1891.

உ

கணபதிதுணை.

சாத்துகவி.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியார் மாணாக்கர்

வல்லை - சண்முகசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

தேசுமலி நித்திலங் கால்செயக் குமுதம்வாய்
திறந்திடுந் தில்லை தன்னில்
தெய்வமறை யோனெனுஞ் சீனிவா சக்குரிசில்
சீரியோ னவன் முன்னினில்
காசுமலி யீழநாட் டதனிலுறை வண்ணைநகர்க்
கவிவாண னாகி னின்ற
காவலநற் றாமோத ரப்புலவன் கவினுறக்
கடம்பவன மான்மி யத்தை
யாசியுறு கத்தியம தாயியற்றித் தந்தன
னவனியினி லன்ப தாக
வட்டாவ தானியெங் கலியாண சுந்தரகுரு
வழகதாய்ப் பார்வை யிட்டு
நேசித்து மன்பதையர் கண்டுவகை கொள்ளவே
நீட்டினன் வித்வ புகழை
நேயமுடன் பொன்னம்ப லப்பெயர்கொள் வேளாள
னீளவச் சிட்ட னனரோ.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

விடயசூசிகை.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கடம்பந்துறைத்தேவாரம்.

திருநாவுக்கரசு நாயனாரருளிச்செய்தது.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முற்றிலாமுலையாளிவளாகிலு
மற்றந்தீர்க்குமறிவிலளாகிலுங்
கற்றைச்செஞ்சடையான்கடம்பந்துறைப்
பெற்றமூர்தியென்றாளெங்கள்பேதையே. (க)

தனகிருந்ததொர்தன்மையராகிலு
முனகுதீரத்தொழுதெழுமின்களோ
கனகப்புன்சடையான்கடம்பந்துறை
நினையவல்லவர்நீள்விசும்பாள்வரே. (உ)

ஆரியந்தமிழோடிசையானவன்
கூரியகுணத்தார்குறிநின்றவன்
காரிகையுடையான்கடம்பந்துறைச்
சீரியபத்தர்சென்றடைமின்களே. (ங)

பண்ணினின்மொழிகேட்கும்பரமனை
வண்ணநன்மலரான்பலதேவருங்
கண்ணனும்மறியான்கடம்பந்துறை
நண்ணநம்வினையாயினநாசமே. (ச)

மறைகொண்டமனத்தானைமனத்துளே
நிறைகொண்டநெஞ்சினுள்ளுறவைம்மினோ
கறைகொண்டானுறையுங்கடம்பந்துறை
சிறைகொண்டவினைதீரத்தொழுமினே. (ரு)

நங்கைபாகம்வைத்தநறுஞ்சோதியைப்
பங்கமின்றிப்பணிந்தெழுமின்களோ
கங்கைச்செஞ்சடையான்கடம்பந்துறை
யங்கமோதியரனுறைகின்றதே. (சு)

அரியநான்மறையாறங்கமாயைந்து
புரியன்றேவர்களேத்தநஞ்சுண்டவன்
கரியகண்டத்தினன்கடம்பந்துறை
யுரியவாறுநினைமடநெஞ்சமே. (எ)

பூமென்கோதையுமையொருபாகனை
யோமஞ்செய்துமுணர்மின்களுள்ளத்தாற்
காமற்காய்ந்தபிரான்கடம்பந்துறை
நாமமேத்தநந்தீவினைநாசமே. (அ)

பாரணங்கிவணங்கிப்பணிசெய
நாரணன்பிரமன்னறியாததோர்

காரணன்கடம்பந்துறைமேவிய
வாரணங்கொருபாலுடைமைந்தனே. (௯)

நூலானன்றுநினைமின்கணோய்கெடப்
பாலானைந்துடனாடும்பரமனார்
காலானூன்றுகந்தான்கடம்பந்துறை
மேலானுஞ்செய்தவல்வினைவீடுமே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம் - கடம்பவனநாதர்.
தேவி திருநாமம் - முற்றிலாமுலையம்மை.

திருச்சிற்றம்பலம்.

ஐயடிகள் காடவர்கோனாயனார்
அருளிச்செய்த

க்ஷேத்திரத்திருவெண்பா.

அழுகு திரிகுரம்பை யாங்கதுவிட் டாவி
யொழுகும் பொழுதறிய வொண்ணா — சழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு.

திருச்சிற்றம்பலம்.

முருகக்கடவுடுணை.

அருணகிரிநாதசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

கடம்பந்துறைத்திருப்புகழ்.

தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனத் - தனதானா.

புணரியும னங்கனம் புஞ்சுரும் புங்கருங்
கயலினொடு கெண்டையுஞ் சண்டனுங் கஞ்சமும்
புதுநிலவ ருந்தியுந் துஞ்சநஞ் சும்பொருப் பெறிவேலும்
பொருவெனவி கன்றகன் றங்குமிங் குஞ்சுழன்
றிடைகடைசி வந்துவஞ் சம்பொதிந் திங்கிதம் [மோதி
புவியிளைஞர் முன்பயின் றம்பொனின் கம்பிதக் குழை
குழையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததம் [ஞர்பால்
கொடுமைசெய்து சங்கொடுஞ் சிங்கிதங் குங்கடைக் கணி
குலவுபல செந்தனந் தந்துதந் தின்புறுந்
த்ரிவிதகர ணங்களுங் கந்தநின் செம்பதங் [னே
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற் றமைவே
துணர்விரிக டம்பமென் தொங்கலும் பம்புறும்
புழுகுமச லம்பசுஞ் சந்தனங் குங்குமந் [தோளுந்
தொகுகளப முந்துதைந் தென்றுநன் கொன்றுபத் திரு
தொலைவில்சண்மு கங்களுந் தந்த்ரமந் த்ரங்களும்
பழனிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந் [ழ்வாய்
துதிசெயுமெ யன்பர்தஞ் சிந்தைசென் றன்புறப் பதிவா
கணபணபு யங்கமுங் கங்கையுந் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்பையுங் கொன்றையுங்
கமழ்சடில சம்புவுங் கும்பிடும் பண்புடைக் குருநாதா
கனகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குறுமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடும் [ளே.
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப் பெருமா

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனமான்மியம்.

காப்பு.

சீர்மலி யாரணச் சிரத்து வாழ்தரு
மோர்பிர ணவப்பொரு ளுலகந்தேறிடக்
கார்நிற வாரணக் கடவு ளாமிறை
யேர்மலி பதாம்புய மிதயத் தோங்குமே.

கடம்பவனநாதர் துதி.

இடம்பரவி யுமையம்மை யிருஞாலம் புரந்தருள
மடம்பரவு முயிர்களெலா மாறீர்ந்து வீடெய்த
நடம்பயிலு மொருதனிமெய்ஞ் ஞானவெளி யருளுருவாய்க்
கடம்பவனத் துறையமர்ந்த கண்ணுதலின் கழல்போற்றி.

முற்றிலாமுலையம்மைதுதி.

சிற்றிடையு மிருகரமுஞ் சேவடியு மலர்முகமும்
பற்றிடுவோர் வினையொழிக்கும் பரங்கருணைத் திருநோக்கு
முற்றடியார் பணிகடம்ப வனமேவு மொருதேவி
முற்றிலா முலையம்மை முளரிமல ரடிபோற்றி.

முதலாவது,

நைமிசச்சருக்கம்.

சிறப்புற்றோங்கி விளங்கும் இவ்வுலகத்தின் கண்ணேமிகுந்த புகழ்பொருந்திய நைமிசாரணிய வனத்திலே பிருகுகுல திலகராகிய சௌனகர் முதலிய முனிவர்கள் பலர் ஒருங்குகூடிச் சத்திரயாகமென்னும் ஓர் பெரிய யாகம்செய்து பரமேஸ்வரனது திருவருளைச் சிந்தித்து அருந்தவம் புரிந்திருந்தனர். அக்காலத்திலே சிவபத்தருள் மிகச் சிறந்தவரும் வைதிக சிகாமணியுமாகிய வேதவியாச முனிவரது மாணாக்கர்களுள்ளே தலைமைபெற்ற சூதமாமுனிவர் அவ்விடத்து எழுந்தருளுதலும், அவரது நல்வரவைக் கண்ட அம்முனிவர்கள் மிகுந்த ஆனந்த முடையவர்களாய் எழுந்து எதிர்கொண்டு அஞ்சலிசெய்து அழைத்துவந்து ஓர் ஆசனத்திருத்தி அர்க்கியபாத்திய ஆசமனீயமுதலிய உபசாரங்கள் செய்து வணங்கி அவரை நோக்கிச், "சுவாமி! முனிவர்பெருமானே, கிருபாநிதியே, சிவபெருமானது திருவடிகளை ஒருபோதும் மறவாத சிந்தையனே, தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய பதினெண்புராணங்களும் அவற்றுளடங்கிய க்ஷேத்திர மான்மியங்களும் தீர்த்த

விசேடங்களும், கன்மவேறுபாடுகளும், சுவர்க்க நரக வியல்புகளும், உபநிடதங்களின் உண்மைப்பொருள்களும், முத்திநிலையும், பல இதிகாசங்களும், வருணாசிரம தருமங்களும், மனிதர் பெறற்பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்த நான்கின் பெருமைகளும், பரமேஸ்வரனது மகிமைகளும், திருமால் அவதாரத் திருச்சரிதங்களுங் கேட்டுக் கேட்டுப் புனிதமுற்றோம். அண்டாதி பிண்டாந்தமான பொருள்களில் அறியற்பாலனவாகிய யாவும் அறிந்தோம். ஆதலின், நாங்கள் இவ்வுலகப் பொருள்களுள் ஒன்றையேனும் விரும்புந் தரத்தோமல்லோம். அறிவினிற் சிறந்த அருந்தவப்பயனே! தேவரீர் அடியேங்கள்மீது சிறிது கருணை கூர்ந்து, உயர் வொப்பில்லாது விளங்குந் திவ்வியக்ஷேத்திரமாகிய கடம்பவன மான்மியத்தை இனி அடியேங்களுக்குத் திருவாய்மலர்ந்தருளி எங்கள் புன்வாழ்வைப் புனிதப்படுத்த வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அது கேட்ட சூதமுனிவர் மிகுந்த சந்தோஷ மனத்தராய் அவர்கள் வேண்டுகோளுக் கிசைந்து அக்கடம்பவன மான்மியத்தை அம்முனிவர்களுக்கு எடுத் தோதுவாராயினர்.

நைமிசச்சருக்க முற்றிற்று.

இரண்டாவது,

பிரமன்கைலைசென்றசருக்கம்.

தவநெறியிற் சிறந்தமுனிவர்களே! நாம் இன்றுபெற்ற பெருமையே பெருமை; பாக்கியமே பாக்கியம். இம்மகா புண்ணியகாலத்திலே அருட்கடலாகிய கடம்பவன நாதரது திருவடிமலர்களை நினைக்கப்பெற்றேன். நீங்கள்விரும்பிய அக்கடம்பவன மான்மியத்தை அறிந்தவளவில் சிறிது உங்களுக்கு எடுத்துரைக்கின்றேம். நீங்கள் உள்ளும் புறமும் ஒருவழிப்படவிருந்து அன்பினோடு அதனைக் கேட்கக் கடவீர்கள்.

அந்தணர்மணிகளே! முன் ஓர் கற்பகாலத்தில் தவவலிமையினால் பரமேஸ்வரனது திருவருளிற் சிறிது கிடைக்கப் பெற்று அநேக அண்டகோடிகளைச் சிருஷ்டித்து ஆன்மாக்கள் கன்மபரிபாகத்திற்கேற்ப ஒவ்வோர் தனுகரணாதிகளை அவர்களுக்கு அமைத்துப் பரமேட்டியென உலகத்தார் புகழ்ந்தேத்த உயர்ந்தபதவிபெற்றிருந்த நான்முகனாகிய பிரமதேவன், எப்பொழுதும் ஓய்வின்றிச் சிருட்டித்தொழிலைப் புரிந்துவருதலினால் இளைப்புற்று மனம்வருந்தி, "இனி நான் துன்பத்துக்கிடமாகிய இப்படைத்தற் றொழிலையேனும் மற்றுள்ள போகங்களையேனுஞ் சிறிதாயினுஞ் விரும்புதல் செய்

யேன். நான் இன்றே இத்தொழிலைக் கைவிடுத்துப் பரமேஸ்வரனது திருவருளைப்பெற்று அவனது சிவானந்தப்பெருவாரியில் இரண்டறக்கலந்து சாயுச்சியவீட்டின் பேருகிய சிவமாந் தன்மைப் பெருவாழ்வு பெறுதற்கு ஏதுவாகிய சிவயோகத்தையே அன்பினேடுஇனிச் செய்யக்கடவேன்" என்று சங்கற்பித்துத், தன் இருப்பிடமாகிய சத்தியலோகத்தை விட்டகன்று அநித்தியமாகிய பொய்ப்போகங்களை வெறுத்துக் களங்கமற்ற மனத்தனுய், இளம்பிறை விளங்குஞ் சிவந்த திருச்சடைகள் அசைந்தாட ஆனந்தத் தாண்டவஞ் செய்தருளும் பரம்பொருளாகிய சிவபிரான் ஆன்மகோடிகள் உய்யும் பொருட்டு அவரது திருவருளே திருமேனியாகக் கொண்டு சித்தர், பத்தர், முத்தர், வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர், கருடர், காந்தருவர், சிவகணங்கள், தேவர், அசுரர், யக்ஷர், உருத்திரகணிகையர், நாடகமகளிர் முதலாய் நாகர் ஈருயுள்ள பலகோடி முத்தான்மாக்கள் புடைசூழ எழுந்தருளி யிராநின்ற திருக்கைலாய மலையை எய்தினன்.

அத்திருக்கைலை மலையின்கண்ணே நூறுவீதிகளையுடையதாய், நாற்புறத்துங் கற்பகம், சந்தானம், பாரிசாதம்முதலிய விருக்ஷங்கள் செழித்து அடர்ந்து ஓங்கிவளர, அதன் நடுவிலே பலவகைப்பட்ட மாணிக்கக்கற்களால் அணிபெற அமைக்கப்பட்டு ஒளிவீசாநின்ற மாட

மாளிகைகளும் கூடகோபுரங்களும் நிரைநிரையாகப் பிரகாசிக்க, உடுக்கை, சல்லரி, சின்னம், மிருதங்கம், முரசம் முதலாகிய பல வாச்சியங்கள் முழங்க, நாடகமகளிர் ஆனந்தங்கொண்டு ஆடிப்பாடி அரனடிபோற்றச் சிறந்து விளங்காநின்ற போகவதியென்னும் ஓர் திருநகரம் இருக்கின்றது. பிரமதேவன் அக் கைலைவெற்பின் திருக்கோலக் காட்சிகளையெல்லாம் தரிசித்துக்கொண்டு அதன் நடுநோக்கிச் செல்லும்பொழுது அவ்விடத்திலே கண்ணுதற்பெருமான் எழுந்தருளியிராநின்ற திருக்கோவிலும், அத்திருக்கோவிலின் வாயிலிலே கையிற் பிரம்பேந்திக் கண்ணிமையாது காத்துநிற்குந் திருநந்திதேவரும், பிரிங்கிரிஷிமுதலாகிய கணநாதர்களுந் தோன்றக் கண்டு அவர் திருவடிகளை வணங்கி அவர்களிடத்தில் தம்முள்ளக்கருத்தை விண்ணப்பஞ் செய்து விடைபெற்றுச் சிவபெருமானது திவ்விய தோத்திரங்களைப் பாடிக்கொண்டு திருக்கோவிலின் உள்ளேசென்றார். அங்ஙனம் செல்லுதலும் அவ்விடத்திலே ஸ்ரீமகாவிஷ்ணுமூர்த்தி முதலாகிய தேவர்கள் மங்களம் பாடவும், வேறுசில தேவர்கள் வெண்சாமரைவீசவும், அருந்தவத்து முனிவரர் பலர் அரஹர சிவசிவ என்று அடிபோற்றவும், அரம்பை, ஊர்வசி முதலோர் ஆடிப்பாடவும், சிர்மிகு யோகிகள் சிவானந்தமேவவும், கண்டவர்ஞா

னக் கதிரொளிகூடவும், அஞ்ஞானமென்னும் அழல் விடமகலவும் பேரானந்தப் பெருமழை பொழிந்து பச்சிளங்கொடியொத்த பார்வதி தேவியாரோடு பரமேஸ்வரன் இடபாரூடராய் எழுந்தருளியிருக்குந் திருக்கோலத்தை இருநான்கு கண்களும் களிப்பத் தரிசித்தான்.

பிரமன் கைலைசென்றசருக்க முற்றிற்று.

மூன்றாவது;

பிரமன்தவம்புரியச்சென்றசருக்கம்.

பிரமதேவன் அவ்வாறு சிவபிரானது திருக்கோலத்தினைக் கண்ணுற்ற மாத்திரத்திலே கைகளைச் சிரமேற்கூப்பி அஞ்சலிசெய்து கண்களில் ஆனந்த வருவி சொரிய நெஞ்சநெக்குருக உரோமஞ் சிலிர்ப்ப நாத்தழுதழுப்ப உரைதடுமாறப் பரமானந்த பரவசராய் அவரது திருவடித் தாமரைகளில் முடியுற விழுந்து, மங்கையோர்பங்கா, அடியார்க்கடியனே, ஆனந்தக்கடலே யோகிகள் உள்ளத்தே குடிகொள்ளும் ஈசனே, பேரின்பவீடருளும் பெருந்தயாநிதியே, வேண்டுவார் வேண்டியவாறு ஈந்தருளும் விமலனே, வேள்விகொள் கோவே, தக்கன் தலைதடிந்த தலைவனே. சலந்தரனைச்செற்றசங்கா

தேவே, காலற்குக் காலனே, அணுவினுக் கணுவாய் அப்பாலுக்கப்பாலாம் அளவிடற்கரிய அருமறைக் கொழுந்தே, அரியதோர் மருந்தே, நாயினேன் நின் திருவடிகளுக்கே அடிமையாயினேன்; தருக்களிற் கற்பகத்தவும், பசுக்களிற் காமதேனுவும், நான்மறைகளிற் சாமவேதமும், மலைகளில் கைலையும், அத்துவாயு சாகையில் அரியருத்திரமும், தேவரில் இந்திரனும், அகிலவருணதில் அந்தணரும், கடல்களிற்றிருப்பாற்கடலும், மணிகளிற் சிந்தாமணியும், விலங்குகளிற் சிங்கமும், மண்விண்ணுதியாம் மற்றுளபொருளும் நீயேயாகி நின்ற சின்மயனே, குணங்குறியிறந்து குறைவிலாநிறைவாய்க் கூருருதான வொருபரஞ்சுடரே, அடியர் நெஞ்சகமே ஆலயங்கொள்ளும் ஆனந்தமயனே, ஏழைபங்காளா, என்னருட்குன்றே, நான் உன்திருவடிகளுக்கு அடைக்கலம் புகுகின்றேன்உன் ஆணையைச் சிரமேற்கொண்டு இவ்வளவற்ற அண்டகோடிகளைச் சிருஷ்டித்துவருந் தொழில் மேற்கொடிருப்பேனுயின் நான் இச்சிருட்டியின் ஒழிவு பெறுவதுஎக்காலம்! எம்பெருமானே, போதும் போதும்! இனியான் இச் சிருட்டித்தொழிலை ஒரு கணப்பொழுதுஞ் செய்யும் விருப்பமுடையேனல்லேன். தேவரீர் அதனை வேறு யாருக்காயினும் ஆஞ்ஞாபித்து அடியேனுக்கு மெய்ஞ்ஞானச்சுடரேற்றி முத்தியின்பம் அருளல்

வேண்டும். இனித் தமியேன் நிர்க்குணனாய், நிராமயனாய், நிரஞ்சனனாய், நிர்விகாரியாய், நிர்மலனாய், நித்தியனாய்ச், சேதனனாய், ஞானாதீதனாய், ஒப்பிலா ஆனந்தசொரூபியாய் விளங்கு நின்திருவடிகளையேயன்றி வேறொன்றையும் விரும்பேன். எவ்விதத்திலாயினும் அடியேனை ஆண்டருளல்வேண்டும். ஐயனே, அடைக்கலம் அடைக்கலம்என்று இவ்வாறு பலமுறை வணங்கித் துதிசெய்வானாயினார்.

அப்பொழுது அகிலலோக நாயகராகிய சிவபிரான் முகமலர்ந்து புன்முறுவல்செய்து "ஓ பிரமதேவனே ! உன்கருத்தினை உணர்ந்து மகிழ்ச்சியெய்தினேன். அநாதிபந்தமாகிய மலமானது தவமியன்றி யார்க்கும் நீங்காது. ஆதலினால், நீயும் அவ்வாறு தவஞ்செய்வாயாயின் உனக்கு நாம் அப்பொழுது மெய்ஞ்ஞானம் தோன்றச்செய்வோம். அதனால் வீடு கைகூடும்" என்று திருவாய் மலர்ந்தருள, அதுகேட்ட பிரமதேவர் மிகுந்த ஆனந்தத்தோடு மீண்டும் நமஸ்கரித்து எழுந்துநின்று கிருபைக்கடலே, தேவரீருடைய ஆணையைச் சிரமேற்கொண்டு தவம்புரியச் செல்கின்றேன். ஆயின், அத்தவம் செய்தற்கும் அதன்பயனைப் பெறுதற்கும் வற்ற ஓர் இடத்தை இதுவென்று கட்டளையிட் டருளல்

வேண்டும் என்று பிரார்த்தித்தார். அப்பொழுது சிவ பிரான் மிகுந்த கருணையோடு "அன்பனே! பூவுலகத் தின்கண்ணே புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே காவேரியாற்றின் தென்கரையிலே தெற்கில் இரத்தின கிரியையும் வடமேற்கில் மரகதமலையையும் எல்லையாக வுடைய கடம்பவனமென்னும் ஓர் திவ்விய க்ஷேத்தி ரமிருக்கின்றது. அத்தலத்தின் மகிமை இப்படிப்பட்ட தென எவர்களாலும் சொல்லத் தக்கதன்று. நீ அவ் விடம்சென்று காவேரிநதியில் ஸ்நானஞ்செய்து புலன் களின்வழி மனதைச் செல்லவொட்டாது தடுத்து ஒரு வழிநிறுத்தித் தவம்செய்யக்கடவாய். அங்குநாம் உமை யவளோடு உன்முன் எழுந்தருளி உனக்கு மெய்ஞ்ஞா னமும் வீடுபேறும் தந்தருளுவோம்" என்று திருவாய் மலர்ந்தருளுதலும் பிரமதேவர் சிவபிரான் விதித்த கட் டளையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று நாரதர் முதலாகியமுனிவர்கள் புடைசூழப் பலவகைப் பட்ட வாத்தியங்கள்முழங்க அப்புண்ணியபதியை நோ க்கிச் செல்வாராயினர்.

பிரமன்தவம்புரியச் சென்றசருக்க முற்றிற்று.

நான்காவது;

பிரமன்முத்திபெற்றசருக்கம்,

அருந்தவரிற் சிறந்த முனிவர்களே! கைலையங்கிரியினின்று தேவர்கள் முனிவர்கள் புடைசூழத் திருக்கடம்பவன நோக்கிச் செல்கின்ற பிரமதேவர், இடையிலேயுள்ள குருக்ஷேத்திரம், பதரிகாச்சிரமம், திருக்கேதாரம், காசி, கங்காதீரத்திலுள்ள பலதிவ்விய ஸ்தலங்கள், மங்களம், சைலம், திருக்காளத்தி, திருமுதுகுன்றம், திருச்சிற்றம்பலம், மாயூரம், திருவிடைமருதூர், திருக்குடமூக்கு, திருவையாறு, திருவானைக்காமுதலிய பலதிருப்பதிகளிலே சிவபெருமானைப் பூசித்து வணங்கிக்கொண்டு சென்று, காவேரியாற்றின் தென்பாலிலே கண்ணுதலார் திருவாய்மலர்ந்த கடம்பவனக்ஷேத்திரத்தைக் கண்டு ஆனந்தங்கொண்டு அதன் எல்லையுட் புகுந்தவுடனே தேற்றான்கொட்டையை யுரைத்த சேற்று நீர்போலத்தெளிந்த மனத்தராய் நாம் தவஞ்செய்து உய்தற்கு ஏற்றவிடம் இதுவே யாமென மகிழ்ந்து கடம்பவனநாதர் சந்நிதியிற்றானே, பெருகியோடும் பொன்னிமாநதியில் ஸ்நானஞ்செய்து முனிவர்களிடத்தே விடைபெற்று அங்கு எழுந்தருளியிருக்கும் மகாலிங்

கத்துக்கு அருகிலுள்ள கடம்பவிருக்ஷ நீழலிலே தவம் செய்யக்கருதி ஆசனமிட்டு ஐம்புலன்களேயும் பொறிவழிபோகவொட்டாது அடக்கிச் சரீரத்தைச் சமப்படுத்தி வலக்காற் பெருவிரலேப் பூமியில் ஊன்றிக் கண்களிரண்டும் மூக்குநுனியை நோக்கக் கைகளிரண்டையும் சிரமேற்குவித்து நின்று திருவுள்ளத்திலே பஞ்சாக்ஷரத்தை இடைவிடாது சிந்தித்து, அதன்பொருளாய் நிர்மலமேனியன், நுதற்கண்ணன், வரமுத்திரையேந்தி, அபயந்தருவோன், புலியுரிபோர்த்தோன், கங்கைவாழ் சடையான், அரவாபரணன், மங்கையோர்பங்கன், கருணைத்தடங்கடல், தொண்டருள்ளங்கவரத் திருமேனி கொண்டவன் பரமபதிப்பொருள், எனநின்ற சிவபிரான் திருவடிகளே மனத்தில் இருத்தி அசைவற்ற மரம்போல் இன்பத் துன்பமறந்து சஞ்சலமின்றித் திடபத்தியோடு தேவகணக்கில் ஆயிரவருடம் தவம்புரிந்தனர். இவ்வாறு யாவராலும் செய்தற்கரிய கடியதவத்தினே நெடுங்காலம் புரிந்தும் சிவபிரானது திருவருள் கிட்டப்பெருது மனம்வருந்திப் பின்திடங்கொண்டு காவேரிக்கரையை அடைந்து ஸ்நானஞ்செய்து மீண்டுந் தவத்தானஞ் செல்லுதலும் அக்கடம்பகானத்திலே எம்மையாளும் பரமேஸ்வரனது திவ்வியதிருக்கோலம் தோன்றக் கண்டார்.

அறவர்கோமணிகாள்! அங்ஙனம் தோன்றநின்ற அப்பரமபதியினுடைய திவ்விய திருக்கோலக் காட்சியை யாதென்று கூறுவேன்! சந்திரனைத் தரித்த சடாபாரமும், மான்மழுவேந்திய திருக்கரங்களுங் காளகண்டமும் உடையராய் உமாதேவியார் ஒருமருங்கு வீற்றிருப்பக் கைலையங்கிரியையொத்த வெண்மையாகிய இடபவாகனத்தின் மீது எழுந்தருளிச் சுப்பிரமணியக் கடவுளோடு சிவகணநாதர்சூழ, வாக்குக்கு மனத்துக்கு மற்றெவ்வளவுக்கும் எட்டாத பரஞ்சோதி அப்பிரமதேவன் அன்புமுதிர்ந்து செய்த அருந்தவத்துக்கு இரங்கி இங்ஙனம் எளிதிலே தோன்றினர். அத்திருக்கோலத்தைக் கண்ணுற்ற கமலாசனன் ஆனந்த சாகரத்தில் மூழ்கி அங்கங்கள் எட்டும் அவனியிற் படியப் பலமுறை திருவடிகளிற் பணிந்து எழுந்து சிரசின்மேற் கைகளைக்கூப்பி நின்று அன்பினோடு தோத்திரஞ் செய்வாராயினர். அப்பங்கயோனிசெய்த அரியதவத்துக்குந் தோத்திரத்துக்குந் திருவுளமிரங்கிய பரமேஸ்வரன், தமது திருக்கரங்களைப் பிரமதேவன் முடிமேல்வைத்து அஞ்ஞான விருணீக்கி மெய்ஞ்ஞானச் சுடர்கொளுத்தித் திருவருள்புரிந்து "ஓ பிரமதேவனே! காவேரியைநோக்கி எதிர்முகமாக இங்கு இருக்கின்ற மகாலிங்கத்திலே நாம் எழுந்தருளி உமையவளோடு சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியத் திருநடனஞ் செய்கின்றோமாதலால், அவ்விடத்தி

லே நம்மை வழிபடும்ஆன்மகோடிகள் தாம் விரும்பிய பேறுகள் யாவற்றையும் தப்பாது எய்துவர். அதன் அக்கினிதிசையிலே நமது திவ்வியதீர்த்தம் ஒன்று இருக்கின்றது. நீ அதனைச் சீர்ப்படுத்தி ஓர் சிவயாகஞ்செய்து நமக்கும் நம்மோடு கிழக்குத்திசையை நோக்கியெழுந்தருளியிருக்கும் நமது தேவியாருக்கும் ஓர் ஆலயம் அமைத்துச் சித்திரைமாசத்திலே மஹோற்சவம் நடத்திச் சித்திரைநக்ஷத்திரத்திலே தீர்த்தோற்சவமும் செய்வித்துப் பின்பு எம்மோடு இரண்டறக்கலத்தலாகிய சாயுச்சியமென்னும் பரமானந்த வாழ்வினை எய்தக் கடவாய்'' எனத்திருவாய் மலர்ந்தருளினர். இவ்வாறு பிரமதேவனுக்கு அருள்புரிந்து சிவபிரான் அவ்விலிங்கத்தின் கண்ணே மறைந்தருளுதலும் பிரமதேவன் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு தீர்த்தக்கரையில் திருப்பணி செய்து சிவயாகம் புரிந்து தேவாலயம் அமைத்துத் திருவிழாவும் இயற்றி, பின்பு சிவபெருமானுடையதிருவடித் தாமரைகளை அடைந்து சிவானந்தப் பெருவாழ்வை மருவினர்.

முனிவர்களே! இவ்வாறு கடம்பவன க்ஷேத்திரமானது பிரமதேவர் விரும்பிய பெரும்பேற்றை எளிதில் அளித்துச் சிவானந்த முத்தியை அருளுமாயின், அதன்பெருமை எம்மால் அளவிடற் பாலதாமோ என்று சொல்லி அம்மட்டில் நின்றனர்.

பிரமன்முத்திபெற்றசருக்கமுற்றிற்று.

ஐந்தாவது
சத்தமாதர்பிரமஹத்தி நீங்கியசருக்கம்.

அப்பொழுது நைமிசாரணியவாசிகள் சூதமுனிவரை நோக்கி அருந்தவக் கொழுந்தாயெழுந்த அறவர் கோமானே! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய திவ்விய ஸ்தல மான்மியத் தெவிட்டாவமுதம் செவிமடுக்க உண்டு புனிதராயினேம். தேவரீர் அடியேங்கள்மேல் கிருபைகூர்ந்து இன்னும் உள்ள அத்தலமேன்மைகளை அருளிச் செய்யவேண்டும் என்று பலமுறை பணிந்து வேண்டுதலும், மிகுந்த சந்தோஷத்தோடு சூதமுனிவர் மேலும் சொல்லத் தொடங்கினர்.

கேளீர் முனிவர்களே! முன்பு ஓர் காலத்தில் துர்க்காதேவிக்கும் மிகுந்த வலிமையுடையவனாகிய தூமிரலோசனனென்னும் ஓர் அசுரனுக்கும் பெரும்போர் விளைந்து, அசுரன் துர்க்காதேவியைக் கொடுங்கணைகளினால் வாட்டுதலும் அதனால் துர்க்காதேவி சோர்வுற்றனள். அவள் அவ்வாறு சோர்ந்துவாடியதை அசுரர்கள் கண்ணுற்று அவன் வலிமைக்குவியந்து அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள். அதனைத் துர்க்கையின் மருங்கு சூழ்ந்து நின்ற சத்தமாதர்கள் அறிந்து, மிகுந்த கோபாவேசத்தால் மனங்கொதித்து அவ்வசுரனை எதிர்த்துப் போர்புரிந்தார்கள், அசுரர்களும் எதிர்த்தார்கள்.

அவ்வாறு இருதிறத்தாரும் முனைந்து கடுஞ்சமர் புரியுங்கால் தூமிரலோசனன் சினங்கொண்டு முன்விழுந்து எதிர்த்தும் தனதுவலி அவர்களிடத்துப் பயன்படாது குன்றத் தளர்வுடையனுய் நெஞ்சங் கலங்கிப்புறங்காட்டி ஓடினுன். அங்ஙனம் ஓடிய அசுரன் வெப்பமிகுதியால் கண்கள் சிவக்கச் சூரியனைநோக்கிக் கடுந்தவம் இழைக்கின்ற காக்கியாயன முனிவரது ஆசிரமம் தோன்றுதலும் அதனுள்ளே புகுந்து ஒளித்தான். அங்கு அவன் ஓடி ஒளித்தலும் துர்க்கையும் சத்தகன்னியர்களும் கொடிய பல ஆயுதங்களைக்கையில் எடுத்துக்கொண்டு பின் தொடர்ந்து முனிவர் ஆசிரமஞ் சென்று முனிவரைக் கண்டு மாயையால் அவ்வசுரனே இம் முனிவர்வேடந் தரித்தனனென்று எண்ணி அவரை நன்ருகப் புடைத்தார்கள், அதனுல் அம்முனிவர் உயிர் துறந்தனர். உடனே முனிவரைக்கொன்ற பாவத்தால் சத்தகன்னியர்களைப் பிரமஹத்தி பற்றிவருத்தியது. அதனுல் அச்சத்தமாதர்கள் பெருந்துன்பமடைந்து பிரமஹத்தியை ஒழித்துக்கொள்ளுதற்கு வேறு செயல் அறியாது பற்பல தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து பல க்ஷேத்திரங்களை வணங்கிக்கொண்டு திரிந்துந் தம்மெண்ணம் முற்றுப் பெருது முடிவில் இக்கடம்பவனத் திருப்பதியையடைந்து பொன்னிமாநதியில் நீராடித் திருக்கோவிலினுள்ளே புகுந்து கடம்பவன நாதர் திருவடிகளைத் தரிசித்த

லும், அவர்களைப் பற்றி வருத்திய பிரமஹத்தி நீங்கச் சுகமடைந்து புனிதராய், அதுமுதல் அத்தலத்தின்கண்ணே பரமபதியின்பக்க மேவித் தம்மை வணங்கும் உலகத்தார் பாவங்களை ஒழித்து இஷ்டசித்திகளை அருளிவருகின்றார்கள். முனி மணிகாள்! அத்தல மான்மியம் அம்மட்டோ! அது முத்தியை அருளும், புத்தியைவிளைவிக்கும், சித்தியையும் தரும். முன் ஓர்காலத்திலே தவத்தரிற் சிறந்த அகத்தியமுனிவர் மற்றுப் பலவிடங்களிலே தவம்புரிந்து மனம் நிலையுறப்பெறாது இத்தலத்தை அடைந்து தவம்செய்தனர். அவர் அவ்வாறு தவஞ் செய்தலை அங்குள்ள முனிவர்கள் கண்டு அவரிடம் சென்று வணங்கி "முனிவர்பெருமானே! இத்திருப்பதியின் கண்ணே ஒருவன் ஓர் கபிலைப்பசுவைத் தானஞ் செய்வானாயின் அதனால் அவன்செய்த பாவமனைத்தும் ஒழிந்துவிடுமென்று பெரியோர் சொல்லுகின்றார்கள். முனிவர்பெருமானே! கபிலையென்பது யாது? அப்பசுவின் இயல்பு எப்படிப்பட்டது? அதனை எவ்வாறு தானஞ்செய்வது? என்னும் இவைகளை அடியேங்களுக்கு உணர்த்தல் வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அதுகேட்ட குறியமுனி உளமகிழ்ந்து, தாபதர்களே! சர்வபாவங்களையும் போக்கும் அப்பசுவின்

மேன்மை சிறிது சொல்லுகின்றேன் கேளுங்கள் என்று சொல்லத் தொடங்கினர்.

சத்தமாதர்பிரமஹத்திநீங்கியசருக்கமுற்றிற்று.

ஆறவது
கபிலைமான்மியச்சருக்கம்.

நைமிசாரணிய முனிவர்களே! அகத்தியமுனிவர் அம்முனிவர்கட்கு இயம்பிய கபிலைமான்மியத்தை நான் இப்பொழுது உங்களுக்குச் சொல்லுகின்றேன். நாம் அதனைச் சொல்லினும் கேட்கினும் நற்கதிபெறலாம், அதனுல் நம்மனந் தெளிவுபெறும் என்று சொல்லுகின்ருர்.

கபிலையானது அக்கினிச்சுவாலையை யொத்த நிறமும், பருத்தகண்களும், சிவந்த உரோமமும், என்றுந் தம்மிலே அக்கினிதேவன் சந்நிதி அமையப் பெற்றதும் அக்கினியிற்ரேன்றி அதிற்ருனே நிலைபெற்றதுமாம். அக்காரணத்தால் அது ஆக்கினேயி என்னும் பெயர் பெறும். உலகத்திலே வறுமையால் யாரேனும் அதன் பாலை உட்கொள்வாராயின், அதனுல் அவர்க்கு அளவில்லாத பாவம் சம்பவிக்கும். அதன் பால் தயிர் நெய் என்னும் இவைகளைத் தாம் உபயோகிப்பவர் ரௌரவ

நரகத்திலே தப்பாது வீழ்ந்து அளவில்லாத காலம் வருந்துவர். அது மட்டோ! மற்றுள்ள பசுக்களைப்போல இதுவும் ஓர் பசுவாமென்று இலேசாக எண்ணி எவ்வந்தணன் அதனைத் தானம் வாங்குவனோ அவனும் அவனுடைய முன்னோர்களும் அசுத்தத்தை உண்ணுங் கொடிய நரகத்தை எய்துவர். அவனுடன்கூட ஓர் ஆசனத்திருப்பவனும், அவனோடுகூடச் சயனிப்பவனும், சாவகாசம் செய்பவனும் எக்காரியத்தும் எக்காலத்தும் உபயோகப்படாத இழிந்த நிலைமையை உறுவன். எவ்விதத்தினுலாவது ஒருவன் அவனோடு வசனிக்கநேரின், பின் அவன் அப்பாவம் நீங்குதற்பொருட்டுப் பிரஜாபத்தியம், கிருச்சிரம் என்னும் விரதங்களிருப்பினும் அப்பாவம் நீங்காது. உலகத்திலேயுள்ள பற்பல பொருள்களையும் சிருஷ்டித்த பிரமதேவன், வேள்விகள்யாவும் இடையூறின்றி நடத்தற்பொருட்டும், அந்தணர்கள் நித்தியாக்கினி ஹோத்திரமும் செய்து தேவர்களை மகிழ்வித்தற்பொருட்டுமே சர்வவஸ்துக்களின் சாரமாய் நின்று எல்லாவற்றினு முயர்வுபெற்ற இக்கபிலையைச் சிருஷ்டித்தார். கபிலைப்பசுவை ஒருவனுக்குத் தானஞ்செய்யின் அது மற்றெல்லாத் தானங்களினுஞ் சிறந்த உத்தமதானமாம். அநேக புண்ணியங்களையும் அநேகவிரதங்களையும் இயற்றும் பலன்களினும் இதன்பலன் எத்தனையோ கோடி மடங்கு அதிகமாம். மங்களங்கள் பலவற்றுள்ளும்

சிறந்த சுபமங்களம் இதுவேயாம். தவங்கள் பலவற்றிற்குந் தலையாய தவமும் இதுவேயாம். உலகத்திலேயுள்ள பற்பல புண்ணியதீர்த்த ஸ்நானங்களிலும் பற்பல தேவாலய சேவைகளினும் உள்ள புண்ணியசாரமே இக்கபிலை வடிவாய் எழுந்ததென் றறியக்கடவீர் கபிலையின் பாலைக்கொண்டு அக்கினிஹோத்திரம் செய்பவர் பிரமலோகத்தை எய்துவர். கபிலையினது இரண்டு கொம்புகளின் இடையே புண்ணிய தீர்த்தங்கள் யாவும் பிரமனது ஆஞ்ஞையால் குடிகொண்டிருக்கின்றன. விடியற்காலத்திலே நித்திரைவிட் டெழுந்தவுடன் கபிலையின் கொம்புகளைச் சலத்தினாற் கழுவிச் சிரத்திலே புரோக்ஷிக்கின் இஷ்டசித்திகளெல்லாம் பெற்று மேலான பதவியையும் எய்துவர். அதனால் மூன்று வருஷத்திற்செய்த பாவம் முற்றிலும் ஒழியும். ஒருவன் தினம் ஒருபிடி புல்லேனும் மூன்றுநாட்களுக்குக் கொடுப்பானாயின் அதனால் ஒருவருஷத்துத் தீவினையொழியும். கபிலையினிடத்தே உண்டாகும் பஞ்சகவ்வியத்தை ஒருவன் பத்தியோடு உட்கொள்வானாயின் அவன் பல்லாயிர அஸ்வமேதயாகம் புரிந்தபயனைப் பெறுவன். கபிலையின் கோசல புரோக்ஷணத்தால் முப்பது வருஷத்துப் பாவம் நீங்கும். அக்கபிலைப் பசுவைப் பிரதக்ஷணஞ்செய்யின் இக்கடல்சூழ்ந்த பெரியபூமி முழுதினையும் பிரதக்ஷணஞ்செய்த பலன் உண்டாம். அக்கபி

லையைக் கையினால் தொடினும் ஒருவன்செய்த தீவினை நீங்கிவிடும். ஓர்கபிலையைத் தானஞ்செய்த பலனும் ஆயிரம் பசுக்களைத் தானஞ்செய்த பலனும் சமத்துவம்பெறும். முனிவர்காள்! இனிக் கபிலையின் தன்மையைச் சிறிது வகுக்கின்றோம். கேளுங்கள்! அக்கபிலைப் பசுக்களிலே பொன்னிறம் பொருந்திய பசுவைப் பிரதமபசுவென்றும், வெண்மையோடு செம்மைபொருந்திய தாயின் அதனை இரண்டாந் தரத்ததென்றும், செந்நிற மணிபோல் இருவிழிகொண்டது மூன்றாந் தரத்ததென்றும், கருமையோடு செம்மையும் உடையதாயின் அதனை நான்காந்தரத்ததென்றும் சாம்பனிறம் பெறின் ஐந்தாந்தரத்த தென்றும், வெண்ணிறமும் மஞ்சணிறமும் உள்ளதாயின் ஆறாந்தரத்ததென்றும், முழுதும் செந்நிறமே பொருந்தின் ஏழாந்தரத்ததென்றும், அதன் அடிக்குளம்பு சிவந்ததாயின் அது எட்டாந்தரமுடையதென்றும், முற்றிலும் பொன்னிறமுடைய தாயின் ஒன்பதாந்தர முடையதென்றும், வால்மட்டும் பொன்னிற முடையதாயின் அதனைப் பத்தாந்தரத்ததென்றும் இங்ஙனம் பத்துவகுப்புகளாக ஆன்றோர் பாகுபாடுசெய்வர். ஒருவன் கபிலையின்மேல் ஏறுவானாயின் அவன் கொடிய நாகத்தில்விழுந்து வருந்துவன். வேதங்களை ஓதி உலகப்பொருள்களை வெறுத்து ஐம்புலன்களையும் ஒடுக்கித் தவம்செய்யும் ஒரு புருஷோத்தமனு

க்கு வேள்வியிலே யாகதக்ஷிணையாக ஓர்கபிலையை அளிப்பவன் அக்கினிலோகமடைவான். அன்றியும் அக்கபிலையின் சரீரத்திலே எத்தனை உரோமங்க ளிருக்கின்றனவோ அத்தனைகாலம் சுவர்க்கலோகத்திலே வாழ்வான் ஓர் கபிலையை அதன் கொம்புகளில் செம்பொன் அணிந்தும் இன்னும் பலவிதமான அலங்காரங்கள் செய்தும் அதன்கன்றோடு பால்கறத்தற்கு வெண்கலப் பாத்திரமும் சேர்த்துத் தானஞ்செய்பவன் முன்னேழு சந்ததி பின்னேழு சந்ததியாரோடு நற்கதிபெறுவன். அன்றி அக்கபிலைக் கன்று பிறக்குங்காலமறிந்து தலையுங் காலும் வெளியிற் றோன்றுங்க இருபக்கமுங் காலுமாய் நிற்கும் அத்திருக்கோலத்தில் அதனை அந்தணர்க்குத் தானஞ் செய்தவன் இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் விரும்பிய யாவற்றையும் பெறுவான். முனிவர்களே! அக்கபிலையின்பெருமை இத்தன்மையதாதலால் அதனை இத்திருப்பதியிலாயினும் அன்றிக் குருக்ஷேத்திரத்திலுள்ள மற்றைப் பதியிலாயினுந் தானஞ்செய்பவர் அருள் வள்ளலாகிய முக்கட்பெருமானுடைய திருவருளைப் பெற்று மேன்மை யெய்துவர் பாதகமாகிய விருட்சத்துக்குக் கபிலைமான்மியமானது ஓர் கோடரியாக விருக்கின்றது என்று குறியமுனி அவர்களுக்கு எடுத்தோதினர்.

கபிலைமான்மியச்சருக்க முற்றிற்று.

ஏழாவது

தேவசன்மருக்குத்

திருக்கோலங்காட்டியசருக்கம்.

நைமிசாரணிய முனிவர்களே! இவ்வாறு அகத்தியர் பெருமான் கூறியிருக்க, அதைக்கேட்ட முனிவர்கள் அனைவரும் அவர் பதங்களில் விழுந்து பன்முறை வணங்கி ஆனந்தப்பெருக்குமிகுந்த மனத்தராய்ப்பலவாறு தோத்திரஞ்செய்து, தவத்தர் தலைவனே! இவ்விடத்திலே தேவசர்மாவென்னும் ஓர் இருடி அளவற்ற பாவங்களைச்செய்து பின் இப்பொழுது அவற்றை ஒழித்தற்குவகையறியாது தவிக்கின்றனர். அவர் அப்பாவங்களை ஒழிக்கும்பொருட்டு ஓர் கபிலையைத் தானஞ்செய்யக் கருதியிருக்கின்றனர். அத்தானம் உத்தமபாத்திரத்தில் கொடுக்கப்பட்டாலன்றி அவர் செய்தபாவம் ஒழியாதாதலால், தேவரீர் தாமே கிருபைகூர்ந்து அக்கபிலைப்பசுவைத் தானமாக ஏற்றுக்கொண்டு அவர் பாவத்தைப் போக்கி அவரையும் எம்மையும் புனிதராக்கி யருளவேண்டும். அறிஞர் கோமானே! உமது தவவலிமையை யாவர் உணரவல்லார். உம்மின் மேம்பட்டார் உலகத்தில் யாவருளர், என்று இவ்வாறுபரிந்து வேண்டினின்றனர். அப்பொழுது அகத்தியமுனிவரு மனமகிழ்ந்து அவர்க்கு அநுக்கிரகம் செய்தருளத் திருவுளங்கொண்டு

அப்பொழுதே பிரசவிக்கத்தக்க நிலைமையிலிருக்கும் ஸலக்ஷணமான கபிலையொன்றைத் தேவசர்மன் கொடுக்க அதனைப் பெற்றுக்கொண்டார். உடனே அத்தேவசர்மனது பாவங்களெல்லாம் பிரளயத்திலிட்ட சிறு துரும்புபோல் முற்றிலும் இன்மையாயின உலகத்தை வளைந்து சூழாநின்ற சத்தசமுத்திரங்களையும் உள்ளங்கையில் எடுத்து உட்கொண்டவரும், வாதாபியென்னுங் கொடிய அசுரனை வயிற்றினுள்ளே வலிகுன்றி யொழியச்செய்த பேராற்றல் உடையவரும் ஆகிய அம்முனிவர் கோமானுக்கு இச்செயல் ஓர் வியப்புடையதாமோ. இன்னும் பற்பல அரிய அற்புதங்கள் செய்யத்தக்க பெருவலியினை அவர்க்குப் பரமேசுவரன் அருளியிருக்கின்றார். பாத்திரமோ தவத்திற்கு உறைவிடம். பதியோ *நிருபமம். பக்தியோ சொல்லத்தக்கதன்று. தானஞ்செய்த பொருளோ கபிலை. இத்தகைய மேன்மையெல்லாம் ஒருங்குகூடிய அத்தான பலனாகிய புண்ணியத்தால் வெண்மையாகிய இடபக்கொடியையுடைய கண்ணுதற்பெருமான் காட்சியெய்த அத்திருக்கோலத்தினைத் தேவசர்மன் தரிசித்து உய்திபெற்றான். ஆன்மாக்களது இருதய கமலமே கோவிலாகக் கொண்டருளும் ஞானசோதியாய், உத்தமராயினோர்க்கு உற்றதுணையாய் உலகெலாங் கடந்த உண்மைப்பொருளாய் விளங்

* நிருபமம் என்பது உவமையின்மையை.

கும் ஒரு தனிமுதல்வனைத் தன்னிரு கண்களாற்கண்டு தரிசிக்கப்பெற்ற தேவசர்மன் அருமறை மொழிகளால் அப்பரமேசுவரனைத் துதித்து அவர் பாதாரவிந்தங்களை முடியின்மேற் சூடி ஆனந்தவெள்ளம் அளவிறந்து பெருக அவனது திருவருளால் ஞானவொளியைப் பெற்றுத் தவப்பயன் கைகூடினன், அத்தேவசன்மன் துதி செய்த அருமறைமொழிகளைச் சிவபிரான் கேட்டவுடனே அகமிகமகிழ்ந்து அவனைநோக்கி அஞ்சற்க என அபயமளித்து " அன்பனே! நீ விரும்பிய யாவும் தருதற்கு இசைந்தோம். விரும்பியவற்றைக் கேட்பாயாக" என்னலும், அம்முனிவன் கண்ணுதற் பெருமானே, கற்பகக்கொழுந்தே, ஏழையாகிய தமியேனை ஆட்கொண்டு தமியேன்செய்த தீவினைகளைத் தீர்த்தருளல் வேண்டும். தேவாதிதேவனே! திருவாலவாயின் கண்ணே அறுபத்து நான்கு திருவிளையாடல் செய்து அடியாரை ஆட்கொண்ட அண்ணலே! அன்று தடாதகைப்பிராட்டியார் திருமணக்கோலங் கண்ட காட்சி கனவிலும் மறவேன், கருணைக்கடலே! கண்ணினுண் மணியே! இத்திருப்பதியும் திருவாலவாயும் இணையாமாதலின், அன்று அங்குசெய்த அத்திருமணக்கோலக் காட்சியை இன்று இங்குத் தமியேன் உய்யுமாறு காட்டி யருளவேண்டும்; எம்பெருமானே, என்று இங்ஙனம் தேவசர்ம முனிவன் பலவாறு பிரார்த்தித்தலும் அகத்தியமுனிவர்

முதலாகிய முனிவர்களும் சிவபெருமானைப் பணிந் துபோற்றி அவ்வாறே திருவருள்புரிய வேண்டுமென் றுவேண்ட இளமையாகிய சந்திரனைச் சடாபாரத்திலே தரித்த பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபிரான் அத ற்கிசைந்து அத்திருக்கோலக் காட்சியை அம்முனிவர்க ளுக்குத் தரிசிப்பித்துத் திருவருள்புரிந்தார். அம்ம ஹோற்சவத்தில் முற்றிலாமுலை யம்மையார் தடாத கைப் பிராட்டியாராக மும்முலைவாய்ந்து சிவபெருமா ன்கொண்ட திருக்கோலத்திற்கு இசைய எழுந்தருளிய காரணத்தால் அவ்வம்மையாரை மும்முலைநாயகியென் றும் ஓர் திருநாமமிட்டுத் துதிசெய்வார்கள். அருந்தவ ரிற் சிறந்த முனிவர்களே! இவ்வாறு அம்முனிவர்கள் வேண்டுகோளுக்கு இரங்கி எம்பெருமான் அக்கடம்பவ னத்தில் யாவராலும் காண்டற்கும் நினைத்தற்கும் அரி ய திவ்விய உருவந்தாங்கிக் காட்சிகொடுத்து, மீண்டும் அங்கு எழுந்தருளியிருக்கும் இலிங்கத்தின் கண்ணே கரந்தருளியபடியால் அந்தணர் பலரும் அங்குவந்து அத்திருக்கோலத்தை எப்பொழுதும் தரிசித்துச் செல் வார்கள் என்று சொல்லிச் சூதமுனிவர் பின்னும் சொ ல்லுகின்றார்.

தேவசன்மருக்குத் திருக்கோலங்காட்டிய
சருக்கமுற்றிற்று.

எட்டாவது

மாதவன்வேதோத்தாரணஞ்செய்த சருக்கம்.

நைமிசாரணிய வாசிகளே! இப்பொழுது நாம் உங்களுக்குச் சிவபிரான் திருவாலவாயிற்கொண்ட திருமணக்கோலத்தை இத் திருக்கடம்பவன க்ஷேத்திரத்திலே அகத்தியர் முதலாகிய பல முனிவர்கட்கும் அத் தேவசர்மனுக்குந் தரிசிப்பித்த வரலாற்றை எடுத்தோதினேம். இன்னும் அத்தலத்தின் மேன்மைகள் சிறிது சொல்லுகின்றேம் கேட்பீர்களாக. முற்காலத்திலே மிகுந்த வலிமையையுடைய சோமகன் என்னும் ஓர் அசுரன் இருந்தான். அவன் வேதியர் உயிராயுள்ள வேதங்கள் யாவற்றையும் ஒழித்துவிடக் கருதி அவ்வேதங்களைக் கவர்ந்துகொண்டு தன் மாயையால் மறைந்து பாதாளலோகஞ் சென்றான். அதைக்கண்ட தேவர்கள் மனங்கலங்கி மஹாவிஷ்ணுமூர்த்தியை அடைந்து சரணம்புகுந்து அவனைவென்று அவ்வேதங்களைக் கொண்டுவந்து தரவேண்டுமென்று வேண்ட, மஹாவிஷ்ணுமூர்த்தியும் அதற்கிசைந்து அதைப்பெறுமாறு இக்கடம்பவன க்ஷேத்திரத்தைச் சார்ந்து நினைத்தற்கரிய பெருந்தவம் புரிந்து அத்தவப்பயனால் சிவபெருமானது திருவருளைப்பெற்று மச்சாவதாரமெடுத்துப்பாதாளலோகஞ் சென்று அக்கொடியோனை

வென்று வேதங்களைக் கவர்ந்துகொண்டு வந்து உலகெ க்கும் தழைத்தோங்குமாறு இத்திருப்பதியிலே தாபித் தருளினர். அதுமுதல் அவரும் அத்தலத்தின் அக்கி னிதிசையிலே அநுதினமும் எழுந்தருளியிருந்து பதி தருமமெல்லாம் பகுத்தாராய்ந்து உலகத்தார் உய்யும் பொருட்டு மெய்ப்பொருள் தெளிவித்துக் குருமூர்த்தி யாய் அருள் செய்கின்றார். அக்காலமுதல் வேதங்கள் யாவும் ஒன்ருகி உலகர்கள் அறிய திருமேனி பூண் டு நித்தியமும் நீலகண்டனைத் தொழும் அடியார்கள் விரும்பிய பொருளைக் கைகூடச் செய்துவருதலால் இத்தலம் வேதபுரியென்றும் துதிக்கப்படும். சத்த முனிவர்கள் வசிப்பதால் இப்பதி சத்தபுரியெனவும் படும் முனிவர்களே!

வேதபுரீசபோற்றிவியன்சத்தபுரத்தாய்போற்றி
மாதுமைநாதபோற்றிமாண்பிரமேசபோற்றி
தீதுசேர்வினையிரண்டுந்தீர்த்தருளிறைவபோற்றி
யோதுநற்கடம்பவாரண்ணியமுறையொருவபோற்றி.

சீர்மிகுவாழ்வினேடுசெல்வநற்சுகங்களீய்ந்தே
யாருடல்புனிதமேவவாண்டருளமலசெம்மை
சேர்திருவடிகணீங்காச்சிந்தைதந்தருள்வாய்போற்றி
கார்மலிகாளகண்டக்கடவுளேபோற்றிபோற்றி.

என்னும் இம்மந்திரத்தைக் கடம்பவன நாதரது திருச்சந்நிதியிலே ஓதுபவர்க்கு அப்பெருமான் அவர்

கள்விரும்பிய வரமெல்லாம் அருளிச்செய்வார். இம்மந்திரத்திற்கு இருடி பிரமதேவன், சந்தம் அனுஷ்டிப்பு, தெய்வமோ ஸ்ரீவேதபுரீசரென்னும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும். இதனை ஆன்மார்த்தகாரியங்களில் விநியோகிக்கலாம். விஷுபுண்ணியகாலத்தும், அயனபுண்ணியகாலத்தும், சந்திரசூரியக்கிரகண புண்ணியகாலங்களிலும், மற்றைய புண்ணியகாலங்களிலும், அம்மஹாலிங்கசந்நிதியில் இம்மந்திரத்தை ஆயிரத்தெட்டுருவேனும் நூற்றெட்டுருவேனும் ஜபிப்பவர் யாவராலும் பெறுதற்கரிய பேறுகளனைத்தையும் இம்மை மறுமை இரண்டினும் தப்பாது எய்துவர் என்று அருளிச்செய்தார்.

மாதவன் வேதோத்தாரணஞ்செய்தசருக்க முற்றிற்று.

ஒன்பதாவது
அறுமுகக்கடவுளருள்பெற்றசருக்கம்.

இவ்வாறு கடம்பவனக்ஷேத்திரமகிமையையுரைத்துநின்ற சூதமுனிவரை நைமிசாரணியமுனிவர்கள் வணங்கி முனிவர்பெருமானே! தேவரீர் கிருபைகூர்ந்து எடுத்தோதியசரித்திரம்யாவும் எங்கள் செவியிற்பட்டமாத்திரத்தில் தீராப்பசியினால் வருந்தும் ஒருவனுவில் செவ்வியதேன்மாரி சொரிந்தாற்போலிருந்தது. ஆதலி

ஞல், சுவாமீ! இன்னும் உள்ள அத்தலமேன்மைகளை அடியேங்களுக்குக் கட்டளையிட்டருளவேண்டுமென்று வேண்டுதலுஞ்சூதமுனிவர் மனமகிழ்ந்து கூறுகின்ருர்.

முனிவர்களே! முன்னர் ஓர் சமயத்துப்பரமேஸ்வரன் தமது தேவியாருக்கு உபதேசித்தப் பிரணவப் பொருளை முருகக்கடவுள் குருவுபதேசமின்றி மறைந்து நின்றுகேட்டு ஒழுகியகுற்றத்தின்பொருட்டுக் கருணைநிதியாகிய சிவபிரான் அவனை ஊமையாய்ப்போம்படி சபித்தருளினர். முருகக்கடவுள் பரமேஸ்வரனல் தமக்குக்கிடைத்த அப்பெருங்குறைநீங்க உலகத்திலேயுள்ள அநேக திவ்வியஸ்தலங்களைச்சார்ந்து வணங்கியும் அவற்ருல் அம்மூகத்தன்மை அவனைவிட்டு நீங்கவில்லை. இவ்வாறு பலநாட்கழியப் பின் அம்முருகக்கடவுள் முடிவில் இத்திருக்கடம்பவனத்தையெய்தி அருமையாகியதவம் இழைத்தலும் அதனல் அச்சாபந்தீர்ந்து ஞானம்வளர்ந்துமூகத்துவம் நீங்கியது. அப்பொழுது அறுமுகப்பெருமான் சிவபிரானது திருவருள் அவ்விடத்து மிகவிளங்குதலைக்கண்டு ஆனந்தங்கொண்டு அருமறைமொழிகளால் தோத்திரஞ்செய்யச் சிவபிரான் உமாதேவியாரோடு திருவுளமகிழ்ந்து தமது அருமைப்புதல்வராகிய சுப்பிரமணியமூர்த்தியை எடுத்தணைத்து மடிமீதிருத்திப்பரமானந்த மெய்தினர். அக்காலத்தில் அம்முருகக்கடவுளுக்கு அங்கு ஞானம்விளங்கிய காரணத்தால் அப்

பதிஞானோதயபுரியென்னும் சிறப்புப்பெயர்பெற்றோங்கியது. அங்கு எழுந்தருளியிருக்குஞ்சோமாஸ்கந்தமூர்த்தியை அன்பினோடுதரிசிப்பவர் தாம் எடுத்த ஜன்மம் பயனுளதாகப்பெற்றுச் சர்வாபீஷ்டசித்தியையும் எய்துவர் கார்த்திகைமார்கழிமாசங்களில் அச்சந்நிதியில் எவரேனும் திருவிளக்கு ஏற்றிவைப்பாராயின் அவர் திருக்கைலாயமலையை ஒருபொழுதும் நீங்காத பெருவாழ்வு பெறுவர். அதுவன்றி ஐப்பசிமாசத்திலே இத்திருப்பதியில் ஸ்ரீ நடேசபெருமானுக்கு ஆவின்பாலால் அபிஷேகஞ்செய்வித்துப் பரமான்னமும் நிவேதிப்போர் குபேரனது சம்பத்துக்கு ஒப்பாகியசம்பத்தும் உலகமெல்லாம் துதிக்கும்பெரும்புகழும் எய்துவர். சித்திரைவைகாசிமாசங்களில் வரும்பூரணைகளிலே காவேரிநதியிலேனும் பிரமதீர்த்தத்திலேனும் ஸ்நானஞ்செய்பவர் அடையும்பலன் அளவிடற்பாலதன்று. அங்ஙனம் ஸ்நானஞ்செய்தலோடுகடம்பவனநாதர் முற்றிலாமுலையம்மையார் திருவடிகளைவணங்கிச் சன்மார்க்கநெறியிலே ஒழுகுமோர்அந்தணனுக்கு அத்தலத்திலே அமுதளிப்பவர் அளவில்லாதகாலம் பல்லாயிர வந்தணர்க்கு அமுதளித்த பெரும்பயனைப்பெறுவர். இன்னும், ஓர் விப்பிரன்வசித்தற்கு ஏற்ற சிறிதிடமேனும் அன்போடு அளித்துப் பிரமப்பிரதிஷ்டைசெய்பவன் இம்மையிலே மறுமையிலே

பெறத்தக்க சுகங்கள் அனைத்தையும்பெற்று மறுமையி லே பரமானந்தப் பெருவாழ்வாகிய மோக்ஷசுகத்தையுந் தப்பாது பெறுவானென்றுகூறினர்.

அறுமுகக்கடவுளருள்பெற்ற
சருக்க முற்றிற்று.

பத்தாவது
தலவிசேடச்சருக்கம்.

அங்ஙனஞ்சொல்லிநின்ற சூதமுனிவர் நைமிசாரணியமுனிவர்களைநோக்கி, விப்பிரோத்தமர்களே! நாம் இன்னும்சொல்லவேண்டிய அதன்பெருமைகளைச் சிறிது சுருக்கிச்சொல்லுகின்றோம்; அன்பினேடு கேட்கக்கடவீர்களென்று மீண்டுஞ் சொல்லுகின்றார். பிரமதேவனாலே சிருஷ்டிக்கப்பட்ட அண்டகோடிகள் எவற்றினும் இத்திருப்பதிக்கு இணையாகிய பதிவேறில்லை. வடதிசையைநோக்கிய இலிங்கம் வாரணாசியிலேயன்றி மற்றெங்குமில்லை. தென்றிசையில் வாழ்பவர்க்குக் காவேரியேகங்கையாமென்று அறிவுடையோர் கூறுவர். ஆதலினால் இத்திருப்பதியைத் தக்ஷிணகாசியென்பாருமுளர். இவ்விடத்திலே கங்கையே காவிரியாம். காசியே வேதபுரியாம். விசாலாக்ஷியே முற்றிலாமுலையம்மையாம். விசுவேசரே கடம்பவனநாதராம். இத்தக்ஷிணகங்

கையிலே நீராடி நித்தியகன்மம் நியமமாகச்செய்பவனும், இத்தலத்திலே சிவபெருமானது திருவடிகளைப்பணிபவனும், திவ்வியமந்திரங்களைத் தியானம்பண்ணுபவனும் தன்மனத்தில் நினைந்தயாவற்றையும் தவறாது எய்துவன். மனத்தில் அன்புடையவனாய்க் காவேரியாற்றிலே தீர்த்தம் எடுத்துச்சென்று கடம்பவனேசனுக்கு அபிஷேகம்செய்பவனும், நைவேதனம் சமர்ப்பிப்பவனும், கோபுரங்கள் மண்டபங்கள் கட்டிவைப்பவனும், உற்சவக்கோலம் உயர்வாகச்செய்பவனும் என்றும் திருக்கைலைமலையைவிட்டு நீங்காத பெருவாழ்வு பெறுவன். இத்திருப்பதியில் ஒருவர்க்குச்சிறிது அன்ன தானஞ் செய்யினும் அது ஒரு அக்ஷயப்பயனாம். அத்தானபலனால் தானஞ்செய்தவனும் சாயுச்சியபதவியைப்பெறுவான். சிறிதேனும் அறிவற்றமூடனாயினும் அக்காவேரியாற்றில் ஸ்நானஞ்செய்தாலும், எம்பெருமானது திருவடிகளை வணங்கினாலும், வறுமையினாலே வருந்தும் ஓர்விப்பிரனுக்குச் சிறிதுபொருள் கொடுப்பினும் அவன்செய்த சர்வபாவங்களும் நிவர்த்தியாம். இத்திருப்பதியிலே முன்செய்த புண்ணியமேலீட்டினால் இயல்பாகப்பிறந்த ஒருவன் பின்பு இதனைவிடுத்து மற்றோர் ஸ்தலத்தை நாடிச்செல்வானாயின், அவ்வறிவில்லான் தப்பாது கொடிய பாழ்நரகுக்கு இரையாவன். இத்தலத்திலே ஒருவன் சிறிது தவஞ்செய்யினும் அது

கண்ணுதற்பெருமானது திருவருளால் அநேகமடங்காகி வளரும். கங்கை, யமுனை, சரஸ்வதிமுதலாயினோர் இத் தலத்தடைந்து ஐப்பசிமாசத்திலே காவேரிநீராடிப் கருதியப்பயனைப்பெற்று உய்ந்தார். கயை, பிரயாகை முதலிய ஸ்தலங்களும் இத்தலமும் ஒத்ததாம். விஸ்வநாதனுக்கு நிகர் இந்நீபநாதனேயாம் என்று ஓதி, அறிவினும் அன்பினுஞ் சிறந்துவிளங்கும் அருந்தவரே! அளவிடற்கரிய எம்பெருமான் மகிமையையும் கடம்பவனமேன்மையையும் ஒருவாறு எடுத்து உங்களுக்குவிளக்கினேம். இனி எம்மாற் செய்யற்பாலது யாது? கூறக்கடவீரென்று சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளை நோக்கியிருந்தனர்.

தலவிசேடச்சருக்கமுற்றிற்று.

பதினொன்றாவது
மூர்த்திவிசேடச்சருக்கம்.

அப்பொழுது நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரைத் துதித்து ஐயனே! புராணங்களின் உண்மைக் கருத்துகள் யாவும் உணர்ந்த புண்ணியசிலனே! அன்பர்தம் உள்ளத்தே அமுதொத்த திருவாக்கால் ஆனந்த நிறைக்கும் அண்ணலே! இத்தலத்தின் கண்

ணே தேவியார் திருவேணியென்னுந் திருநாமந் தாங்கிய வரலாற்றினைச் சிறிது அருளிச் செய்யவேண்டுமென்று வேண்டச் சூதமுனிவர் கூறுகின்றார்.

முனிவர்களே! நாம் இப்பொழுது அளவிடற்கரிய கடம்பவன மான்மியத்தை என்னு லியன்றவரையில் ஒருவாறு சுருக்கி உங்களுக்குச் சொன்னோம். நீங்களும் அதனை அன்போடு கேட்டீர்கள். அதனால் நாமனைவரும் கிருதார்த்தராயினோம். இன்னும் இம்மான்மியத்தைப் படிப்பவரும் எல்லாப் பேறுகளையும் பெற்றுச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வை யெய்துவர். முனிவர்காள்! உலகத்திலே காயத்திரி மந்திரத்தடிகள் மூன்று. காலமு மூன்று, மூர்த்தியு மூன்று. ஆகலினால் அம்மை திருவேணியாயினள் என்று உரைசெய்தனர். அதுகேட்ட முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி, ஐயனே! எந்தெந்த யுகத்திலே யாவர்யாவர் பூசை புரிந்தனர். பிரமேஸ்வரன் என்னும் நாமம் யாதுகாரணத்தால் உண்டாயிற்று என்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுகின்றார்.

ஆதிகாலத்திலே கிருதயுகத்திலே பிரமதேவர் பூசித்த காரணத்தால் அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் பிரமேசுரர் என்னும் திருநாமம் பெற்றனர்.

இன்னும் அநேக நாமங்கள் அவர்க்கு இருப்பினும் உலகத்தார் பெருவழக்காக அவரைப் பிரமேசன் என்றே போற்றுவர். திரேதாயுகத்திலே கன்னியரெழுவர் தொழுது நற்கதி பெற்றார்கள், பின் துவாபரயுகத்திலே தவத்தர்க்குத் தலைவராகிய அகத்தியமுனிவர் அருச்சித்து அரும்பேறு பெற்றார். இக்கலியுகத்திலோ புண்ணிய சொரூபியாகிய அறுமுகக்கடவுள் பூசித்தனர், இவ்வாறு இங்கு திருவேணிதேவியையும் பிரமேசுர நாதரையும் பூசித்துச் சித்திகள் யாவும் பெற்றவர் அளவிறந்த அன்பினையுடைய அமரர்களாம். அச்சுவர்க்கலோகவாசிகளாகிய தேவர்கள் நித்தியம், பக்கம், மாசம், வருடம் முதலிய புண்ணிய காலங்களிலே செய்யவேண்டிய பூசை விழாமுதலிய யாவும் புரிந்து சுகம் பெற்றார்கள். ஆதலால், இத்திருத்தல வைபவம் வாக்கு மனாதீதமானதாம். திருவேணிநாதன் திருமான்மியத்தைத் தினந்தோறும் படிப்பவரும் கேட்பவரும் இம்மையிலே புத்திரமித்திர களத்திரர்களுடனே எல்லாச் சுகமும் பெற்று மறுமையிலே பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானது திருவடிமலரை எய்துவர் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மூர்த்திவிசேடச்சருக்க முற்றிற்று.

பன்னிரண்டாவது

யாத்திரைச்சருக்கம்.

பின்னும் சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களை நோக்கிச் சொல்லுகின்றார். முனிவர்களே! கடம்பவன க்ஷேத்திரமானது பிரமஹத்தி முதலிய அதிபாதகங்களையும் ஒழிக்கும். முற்காலத்திலே உலக கர்த்தாவாகிய சதுர்முகன் தான் சிருஷ்டித்தொழிலை விடுத்துச் சிவசாயுச்சிய முத்திபெற நினைந்து புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே இரத்தினகிரியைத் தெற்கிலும் மரகதமலையை வடக்கிலும் எல்லையாகப் பொருந்தப் பெற்றுக் காவிரியின் தென்கரையிலே யுள்ள கடம்பவன க்ஷேத்திரத்தை அடைந்து முற்றிலாமுலை யம்மையார் முகமலர்ச்சியோடு மருங்கு வீற்றிருக்க வடக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் திவ்விய இலிங்க வடிவையுடைய கடம்பவனநாதரைத் தரிசித்துக் காவிரி நீராடித் தவஞ்செய்து அக்கினிதிசையிலே ஓர்தீர்த்தமும் உண்டாக்கிச் சிவயாகஞ்செய்து திருவிழாநடத்தி முத்திபெற்றாரென்று முன் மொழிந்திட்டோ மல்லவா? இனி அந்த க்ஷேத்திரத்தில் யாத்திரைசெய்யும் வழியைப்பற்றிச் சிறிது எடுத்துரைப்பாம். அக்கடம்பவன நாதன் சந்நிதியில் பெருக்கெடுத்தோடும் அகண்ட காவேரியில் பத்தியோடு முறைப்படி ஸ்நானஞ்செய்பவர் எண்பது

திருச்சிரம பயன் பெறுவார். கார்த்திகை மாதத்துச் சோமவாரத்திலே இத்தலத்திற்கு யாத்திரைசெய்தல் மிகுந்த புண்ணியமென்று விதிக்கப்பட் டிருக்கின்றது. அக்காலத்தில் இங்கு யாத்திரைசெய்யும் முறைமையைப்பற்றிச் சிறிது சொல்லுகின்றோம். சூரியோதயத்திற்கு இரண்டு நாழிகையின் முன்னே தந்தசுத்திசெய்து அந்தணரைத் தொழுது காவேரியாற்றில் நீராடி நித்திய கன்மங்களை முடித்துக்கொண்டு அக்காலத்திற் கிடைக்கத்தக்க திவ்விய மலர்களைக்கொய்து புஷ்பாஞ்சலிசெய்து கடம்பவனநாதரது ஆலயத்தினுள்ளே புகுந்து பிரமேசன், முற்றிலாமுலை யம்மை முதலாயினோரைத் தரிசித்து, அங்கு யாத்திரா சங்கற்பஞ் செய்து நல்லொழுக்கமுடைய அந்தணர்க்குத் தன்னா லியன்ற பொருள் தானங்கொடுத்துக் காவேரிக்கரையை அடைந்து ஓர் குடத்திலே தீர்த்தமொண்டு அப்பூரண கும்பத்தைக் கையில் ஏந்தித் தெற்கில் உள்ள இரத்தினகிரியை நோக்கி நமஸ்கரித்து "ஓ பிரபுவே! இரத்தினகிரீசா! சிவபெருமானே! சங்கரதேவே! இலிங்கநாதனே! அடியார்க்கடியனே! தமியேனைக் காத்தருளவேண்டும். உனது திருப்பதிக்கு யாத்திரைசெய்கின்றேன். எனது கருத்தைக் கைகூடச் செய்யவேண்டும்" என னும் மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு அம்மலைக்குச் சென்று மேலே ஏறி க்ஷேத்திரபாலனைத் தரிசித்துக் கொண்டு சென்று இடையேயுள்ள சத்த கன்னியர்க

ளைத் தொழுது மஞ்சள் குங்குமம் என்பவற்ருல் அவ ர்களை அருச்சித்துச் சுரும்பார்குழ லம்மையார் திருச் சந்நிதியை அடைந்து வணங்கி அங்கும் மஞ்சள் குங்கு மங்களால் அருச்சனைபுரிந்து அதற்குமேலே அடியார் கள் தொழ மேற்றிசைநோக்கி எழுந்தருளியிராநின்ற சிவலிங்கப் பெருமானுகிய இரத்தினகிரீசர் சந்நிதானத் திற் சென்று அவரைத் தரிசித்துவணங்கிப் பன்னிரண் டுகுடம் காவேரித் தீர்த்தங்கொண்டு அபிஷேகஞ் செ ய்து முன் தான் கடம்பவனத்திலிருந்து கொண்டுவந்த பூரணகும்பத்தை அதன்மேல் அபிஷேகித்து நூற்றெ ட்டுமுறை வில்வார்ச்சனை செய்து தீபதூபங் காட்டிக் கர்ப்பூரவாத்திசெய்து தரிசித்து விபூதிப் பிரசாதம் பெ ற்றுக்கொண்டு திரும்புதல் வேண்டும். அவ்வாறு திரும்பி வருகையில் வழியிலேயுள்ள வீரப் பெருமாளென்னும் வீரவாகுவைத் தரிசித்து வணங்கிக்கொண்டு செல்லு தல் வேண்டும்.

பின்பு அவ்விடத்திலிருந்து காவேரியாற்றைக் கடந்து மரகதமலையை அடைந்து மரகத கிரீசரையும் மரகதவல்லியாரையும் முன் சொல்லிய முறைப்படி அருச்சித்து வணங்கிக்கொண்டு மீண்டும் கடம்பவனத் தை அடைதல் வேண்டும், பின் அங்கு முற்றிலாமுலை யம்மையார் சந்நிதானத்தையெய்தி அவ்வம்மையாரது திருவடிக் கமலங்களை மஞ்சள் குங்குமங்களா லருச்சி

த்து வணங்கிக் கடம்பவன நாதனையும் ஆயிரத்தெட்டு வில்வார்ச்சனை செய்து தீபாராதனம் புரிந்து தரிசித்து வணங்கல்வேண்டும். அன்றிரவு துயில்நீக்கி விழித்திருப்பது பெரும்புண்ணியமாம். அதன்பின் மறுநாள் அருணோதயத்திற்றானே காவேரியில் ஸ்நானஞ்செய்து சுமங்கலியப் பெண்களுக்கும் பிராமணர்களுக்கும் அன்னதானஞ்செய்து தன்னால் இயன்ற திரவியமும் தானஞ்செய்தல் வேண்டும், இவ்வாறு செய்பவர் க்ஷேத்திர யாத்திரையின்பலனை முற்றும் பெறுவார். நூறுமுறை கங்காயாத்திரை செய்தலும், ஆயிரமுறை சேது யாத்திரை செய்தலும், மேற்கூறிய இவ்வியாத்திரையை ஓர் தரஞ் செய்தலும் ஒருபடித்தான பயன்றரும் புண்ணியங்களாமென்பது சத்தியம். இப்புராணத்தைப் படித்தோர் கேட்டோர் யாவரும் நீடூழிவாழக்கடவர்! முனிவர்களே! இப்புண்ணிய மான்மிய சிரவணத்தால் நாமும் புனிதராயினோமென்று சொல்லிமுடித்தருளினர்.

யாத்திரைச்சருக்க முற்றிற்று.

ஸ்ரீகாந்தபுராணத்துள் உத்தரபாகத்திலே கூறப்பட்ட கடம்பவனமான்மியமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கடம்பவனநாதன்றிருவடிவாழ்க.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இரத்நாசலமான்மியம்.

இஃது,

கடம்பர்கோயில் - முத்துவீரப்பமுதலியாரென்னும்

பொன்னம்பலமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

பிர்மஸ்ரீ - கு. சீனிவாசசாஸ்திரியாரவர்கள் முன்னிலையில்

யாழ்ப்பாணம் - வண்ணை

தாமோதரம்பிள்ளையவர்களியற்ற

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

ஷை பொன்னம்பலமுதலியாரவர்களால்

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1891.

உ

சிவமயம்.

சாத்துகவி.

ஸ்ரீதணிகாசலபதி உபாசகராகிய

காஞ்சி - நாகலிங்கமுதலியாரவர்கள்

இயற்றிய

பதினான்கு சீர்க்கழிநெடில் விருத்தம்.

திருவார்ந்த ரத்னகிரிச் சரிதமதை மொழிபெயர்த்துத்
தென்னாடு முழுது மேத்தத்
திகழ்சினி வாசவிப் பிரர்கோமான் வைத்ததனைச்
செந்தமிழிற் கத்ய மாக்கிப்
பெருகார்ந்த கடல்சூழும் யாழ்ப்பாண வண்ணைநகர்
பெரிதுவக்கும் பெரிய ஞான
பெயர்தாமோ தரக்கவிஞன் பலவலங் காரமுடன்
பேசியதோர் பனுவ றன்னை
யருவார்ந்த நம்பெருமான் மகிமையெலா மெவ்வுலகு
மறிந்தேத்தி யன்பு பூண
வச்சியற்றித் தந்திட்டான் கல்விநல மிக்கோர்ந்த
வறிஞனும் வணியார் சோலை
முருகார்ந்த குழித்தலையாங் கடம்பர்கோ யிற்பெரிய
மூதுணர்வ னாகி வாழ்வோன்
மொழிபொன்னம் பலமுதலி யானெனவும் பெயர்கொளுஉம்
முத்துவீ ரப்பன் றானே.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

விடயசூசிகை.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

வாட்போக்கித்தேவாரம்.

திருநாவுக்கரசுநாயனாருளிச்செய்தது.

திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

காலபாசம்பிடித்தெழுதூதுவர்
பாலகர்விருத்தர்பழையாரெனு
ராலநீழலமர்ந்தவாட்போக்கியார்
சீலமார்ந்தவர்செம்மையுணிற்பரே. (க)

விடுத்ததூதுவர்வந்துவினைக்குழிப்
படுத்தபோதுபயனிலைபாவிகா
ளடுத்தகின்னரங்கேட்கும்வாட்போக்கியை
யெடுத்துமேத்தியுமின்புறுமின்களே. (உ)

வந்திவ்வாறுவளைத்தெழுதூதுவ
ருந்தியோடிநரகத்திடாமுன
மந்தியின்னொளிதாங்கும்வாட்போக்கியார்
சிந்தியாவெழுவார்வினைதீர்ப்பரே. (௩)

கூற்றம்வந்துகுமைத்திடும்போதினாற்
றேற்றம்வந்துதெளிவுறலாகுமே
யாற்றவும்மருள்செய்யும்வாட்போக்கியா
லேற்றுமின்விளக்கையிருணீங்கவே. (௪)

மாறுகொண்டுவளைத்தெழுதூதுவர்
வேறுவேறுபடுப்பதன்முன்னமே
யாறுசெஞ்சடைவைத்தவாட்போக்கியார்க்
கூறியூறியுருகுமென்னுள்ளமே. (ரு)

கானமோடிக்கடிதெழுதூதுவர்
தானமோடுதலைபிடியாமுன்ன
மானஞ்சாடியுகந்தவாட்போக்கியா
ரூனமில்லவர்க்குண்மையினிற்பரே. (சா)

பார்த்துப்பாசம்பிடித்தெழுதூதுவர்
கூர்த்தவேலாற்குமைப்பதன்முன்னமே
யார்த்தகங்கையடக்கும்வாட்போக்கியார்
கீர்த்திமைகள்கிளர்ந்துரைமின்களே. (எ)

நாடிவந்துநமன்றமர் நல்லிருட்
கூடிவந்துகுமைப்பதன்முன்னமே
யாடல்பாடலுகந்தவாட்போக்கியை
வாடியேத்தநம்வாட்டந்தவிருமே. (அ)

கட்டறுத்துக்கடிதெழுதூதுவர்
பொட்டதூக்கிப்புறப்படாமுன்னமே
யட்டமாமலர்சூடும்வாட்போக்கியார்க்
கிட்டமாகியிணையடியேத்துமே. (கூ)

இரக்கமுன்னறியாதெழுதூதுவர்
பரக்கழித்தவர்பற்றுதன்முன்னமே
யரக்கனுக்கருள்செய்தவாட்போக்கியார்
கரப்பதுங்கரப்பாரவர்தங்கட்கே. (க0)

திருச்சிற்றம்பலம்.

சுவாமி திருநாமம் - இரத்தினகிரிநாதர்.
தேவி திருநாமம் - சுரும்பார்குழலி.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இரத்திநசலமான்மியம்.

முதலாவது

நைமிசாரணியச்சருக்கம்.

முன்னர் ஓர்காலத்திலே மற்றெவ் விடங்களிலுஞ் சிறந்து விளங்காநின்ற நைமிச வனத்திலே கல்வியிலும் அறிவிலும் ஒழுக்கத்திலும் தவத்திலும் சிறந்த முனிவர்கள் பலர் ஒருங்குகூடிப் பரமேசுரனைத்தியானித்திருக்கையில், தவசிரேஷ்டராகிய சூதமாமுனிவர் அவ்விடத்து எழுந்தருளினர். அதுகண்ட நைமிசாரணியமுனிவர்கள் எழுந்து எதிர்கொண்டு வந்தனைசெய்து உபசரித்து அழைத்துவந்து ஆசனத் திருத்தி முகமன்கூறி "இவ்வுலகத்திலே சிதருண்டுகிடந்த மறைகளை வகுத்தருளிய வாதராயணமுனிவர் கோமானுடைய திருவருட்பிரசாதம்பெற்றுப் புராணங்களின் உண்மையுணர்ந்த சூதமாமுனியே! நீர்முன் இவ்விடம் எழுந்தருளி எங்கள் மனமுருகும்படி பற்பல புராண

வுண்மைகளை அருளிச்செய்தீர். உமது திருமுகத்திற் றோன்றும் அமுதொத்தவசனங்களைக்கேட்டு இரவென்றும் பகலென்றும் வேற்றுமையறியாது பேரானந்தக் கடலுள் மூழ்கினேம். பாசவலைப்பட்டுழலும் ஆன்மாக்களிடத்தே யுமது கருணைவெள்ளம் காரணநோக்காது தோன்றுமன்றோ? ஆகலின், எமக்கு இன்னும் சில புராணங்களின் உண்மைகளை எடுத்துபதேசித்தருளல் வேண்டும். முன் ஓர்பொழுது நைமிசவனத்தில் முனிவர்கள் கூடியிருக்கும்பொழுது பாத்மகற்ப சரித்திரங்களைச் சொல்லவெழுந்து, பலக்ஷேத்திரங்கள், தீர்த்தங்கள், பர்வதங்களின் மகிமைகளைப் பலவாறு அருளிச்செய்தீர். அப்பொழுது கங்கைமுதலாகிய புண்ணியநதிகளின் பெருமையைச் சொல்லுங்கால் ஆதிசேடனும் வாயுதேவனும் தத்தமாற்றலை யளவிடுமாறுசெய்த போரைக்குறித்து யாவரும் அதிசயிக்கும்படி விரிவாக எடுத்தோதினீர். அச்சரித்திரத்திலே பற்பல இரத்தின வடிவாய் விளங்கும் மேருமலைச்சிகரங்கள் உலகத்தாருய்யும்பொருட்டுப் பலபதிகளிலேவந்து சேர்ந்தனவென்றீர். ப்ார்த்தோர் பாபம்பாற்றும் பேராற்றல்பெற்ற அப்பதிகள்யாவை? வேதவியாசருக்கு நீர் சீடராயினும் புராணவுண்மைகளை உலகத்தார்க் குபதேசிப்பீராகவென்னும் ஆசிரியனுஞ்ஞைக்கிணங்கி அவ்வாறே யாவர்க்கும் உபதேசித்துவருதலால், நீரேநமக்கு வியாசரும் பரமகதியுமாம். அதுபற்றியே நாம் சிறிதும் அச்சமின்றி

உம்மிடத்தே துணிவோடு வினவலாயினேம். இன்னும் காவேரிமான்மியம் அருளிச்செய்யுமிடத்து இரத்தினசலமென நீர் குறித்துரைசெய்த திருப்பதியிலே சிவபிரானை முதற்கண் வழிபட்டவர் யாவர்? அங்குள்ள தீர்த்தங்களெவை? அவைகளின் பெருமையென்ன? கிருபைபுரிந்து இவைகளை எடுத்துரைத்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அது கேட்ட சூதமுனிவர் கைகளைச் சிரசில் ஏறக்குவித்துக் கண்களில் ஆனந்தவருவி சொரிந்து முனிவர்களைப் பார்த்து "ஓ அருந்தவத்தீர்! இதுவரையிற் சொல்லிய புராணங்களினும் இப்புராணத்தை இப்பொழுது சொல்லநேர்ந்தது நாம் முன்செய்த புண்ணியவசமேயாம். அதன் பெருமையனைத்தும் என்னாற் சொல்லி முடிவதன்று. ஆயினும் உங்கள் சந்நிதான விசேடத்தால் அறிந்தவளவிற் சொல்லுகின்றேன். அன்பினோடு கேட்கக்கடவீர்கள். என்று மேலே சொல்லுவாராயினர்.

நைமிசாரணியச்சருக்கமுற்றிற்று.

இரண்டாவது

தலவிசேடச்சருக்கம்.

முற்காலத்திலே ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நடந்த பெருஞ்சமரில் வாயுதேவன் வெளிப்படுத்திய ஐந்து முடிகள் வந்தமைந்த திருப்பதிகள் இவையி

வையென்று சொல்லுகின்றோம். பாண்டிநாட்டிலே தாமிரபரணி தீரத்தில் அகஸ்தியமுனிவரால் ஆதரிக்கப்பெற்ற நீலாசலமென்னும் ஓர் தலமுளது. அத்தலத்திலே வில்வமரநீழலில் எழுந்தருளிய பரமேசுரனுக்கு ஈசானதிசையிலே மூன்றுயோசனை யுயரமுள்ள ஓர் மலையிருக்கின்றது. இன்னும் காவேரியாற்றின் மேல்கரையிலே சுவேதாசலமென்னும் பெயரோடு கீழ்விழுந்தவேகத்தால் சிறிதுபாகம் பூமியினுள்ளே அமிழ்ந்தியும் யாவரும் அதிசயிக்கும்படி மேன்மையாக விளங்கியுள்ளதலம் ஒன்றுண்டு. அங்கு தேவதீர்த்தமும் வன்னிவிருக்ஷமும் இருக்கின்றன. இனி, இச் சுவேதாசலத்தின் மூன்று யோசனை தூரத்திலும் காவேரியின் தென்புறத்து அரையோசனை தூரத்திலும் இரத்தினகிரியென்னும் ஓர் திவ்விய க்ஷேத்திரமிருக்கின்றது. அத்தலத்திலே மகிமைபொருந்திய ஓர் வேப்பமரமும் உளது. அதன்பெருமை என்னுற் சொல்லுந் தரத்ததன்று. தேவேந்திரனுக்கு நேர்ந்த சாபம் அதனாலேயே நீங்கிற்று. மேலும் காவேரியின் வடபாலில் புளிவிருக்ஷமமைந்த மரகதாசலமென்னும் புண்ணியஸ்தலம் ஒன்றுளது. இவையன்றிக் கந்தநதிக்கரையிலே குண்டிகாசலத் தொடர்பில் வன்னிகர்ப்ப மென்னும் ஸ்தலமொன் றிருக்கின்றது. அதை நினைந்தவளவில் எல்லாப் பாவங்களும் நீங்கும். இவ் வைந்தனுள்ளே இரத்தினசல மென்னும் இத்திரு

ப்பதியின் மான்மியத்தை ஒருபான்மை சொல்லுகின்றேன்.

அத்தலத்திலே யெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானைத் தரிசனஞ்செய்யின் எல்லாப் பாவங்களும் உடனே ஒழிந்து விடும். அம்மலை பதினாறுயோசனை உயரமும் மூன்றுயோசனை அகலமும் உள்ளது. இது பூமியில் விழுந்த வேகத்தால் உள்ளமிழ்ந்திருக்கின்றது. இத்தலத்திலே நினைத்தவனைத்தையும் எளிதில் அருளத்தக்க மகிமைபொருந்திய தேவதீர்த்த முதலிய தீர்த்தங்களு மிருக்கின்றன. அங்கெழுந்தருளிய பெருமானுக்கு "இரத்தினலிங்கம்" என்று பெயராம். இவ்விலிங்கம் உமாதேவியாராற் பூசிக்கப்பட்டது. இவ்விலிங்கத்திலே அழகிய திருச்சடை காணப்படும். இத்தலத்தின் எட்டுத்திக்கிலும் எட்டுத்தீர்த்தங்க ளிருக்கின்றன. உச்சியிலே தேவதீர்த்தமென்னும் பேரற்புதமுள்ள தீர்த்தம் ஒன்றுண்டு. இப்பூமியில் ஒருநாவோடிருக்கும் எம்போலியரால் அதன் பெருமை சொல்லற்பால தன்று. எக்காலத்தும் தேவர் மனிதர் முதலிய எவரும் கண்டு களித்துத் தத்தம் போகங்களையிகழ்ந்து வெறுக்கச்செய்யும் அழகிய மலர்கள் பொலிந்து விளங்கும் விருக்ஷங்கள் அடர்ந்த சோலைகளும் அங்கு இருக்கின்றன. ஐம்புலன்களையொடுக்கி உணவொழித்துக் காற்றையே புசித்திருக்கும் கடுவிரதங்கொண்ட முனிவர்கள் பலர் சிவ

பிரானுடைய திருவருள் பெறும்பொருட்டு இவ்விரத்தினகிரியை விட்டகலாது தவம்புரிந் திருக்கின்றார்கள். இம்மலையின் முடிகளிலே பல இரத்தினங்கள் பிரகாசிக்கின்றன. சிங்கம், யானை, மான், எருமை, பன்றி, முயல், மஞ்ஞை முதலிய மிருக பக்ஷிகள் அம்மலையிலே சந்தோஷித்து வாழும். உலகவின்பங்களைத் துறந்து அநாதியே பந்தித்த மலம் பரிபாகமுற்றுச் சத்தினிபாதமெய்தி உலகப் பற்றறுத்து ஐந்தெழுத்தைப் பற்றி லயயோகம் பொருந்திப் பசுத்துவ நீங்கி விபுத்துவ முற்ற சீவன் முத்தர்களாகிய முனிவர்கள் பலர் இத்திருப்பதியிலே வசிக்கின்றார்கள். இவ்வாறு பற்பல அற்புதங்களும் அலங்காரங்களும் வாய்ந்து மேலோர் அருந்தவப் பயனாகிய அம்மலையின் பெருமை எடுத்துரைக்க எவராற்றான் முடியும். வேதபுருடனது பஞ்சப்பிராணன்போன்ற ஐந்தெழுத்தை அம்மலையின் வடிவமெனவும், பஞ்சகோசஅதீதனாயுள்ள அருமறைப்பொருளே அங்குள்ளவனெனவும், அவனே கருணைமேலீட்டினால் உயிர்களனைத்து முய்யுமாறு அம்மலையிலே இலிங்கவடிவாய்த் தோன்றினானெனவும், அருமறைப்பொருளை யுணர்ந்த முனிவர்களனைவரும் அவனை அன்போடுபூசித்திருக்கின்றாரெனவும் புகழ்ந்து போற்றலாமேயன்றி வேறெவ்வாறு அதன்பெருமைகளை எடுத்துரைப்பேன். பலகோடி பிறவிகளினும் பலபுண்ணியங்களைச்செய்து அருமறைக

ளிலும் அறநூல்களிலும் கண்டநெறிவழுவாது நடந்து அதன்பயனால் நற்குலத்திற்பிறந்த பரிபாகியொருவனுக்கே இத்திருப்பதியின்காட்சி கிடைக்குமென்பது உண்மையாம். எத்தேசத்திலே பிறந்தவனாயினும் இவ்விரதத்தினாசலத்தி னடியிற்சென்று முடியால்வணங்கித் தேவதீர்த்தத்தில் நீராடி இம்மலைக்கொழுந்தா யெழுந்தருளிய மாவினடியைத் தொழுது வண்டார் குழலம்மையார் சந்நிதியையடைந்து வணங்கி அங்குள்ளவேம்பை மும்முறை வலம்வந்து அதனிழலில் நிற்கப்பாக்கியம் பெற்றவன் எவனோ அவன் எப்பிறப்பில் எம்மகாபாதகங்கள் செய்திருப்பினும் அவை உடனே யொழியப்பெறுவான். விதிப்படி குருவினிடத்தே உபதேசம்பெற்று அவ்வேம்பினடியிலே ஸ்ரீபஞ்சாக்ஷர மகாமந்திரத்தை நியாசம் தியானமுதலியவற்றோடு கூட்டி ஆயிரத்தெட்டுருவேனும் நூற்றெட்டுருவேனும் இயன்றளவு ஜெபிப்பவன் அதன்பயனை ஒன்றுக்குக் கோடியாகப் பெறுவான். உருத்திராக்ஷமணி கொண்டேனும், தாமரைமணிமாலையாலேனும், முத்து, பவளம், ஸ்படிகம் முதலியவற்றாலேனும் உருசெபிக்கின் அது அளவிறந்தபயனைத்தரும். இவ்வாறு செய்பவர்களைத் தீண்டும் பிறனும் தான்செய்த கொலைப்பாவமுதலிய அதிபாதகங்களை விட்டொழிவான். அவ்வேம்பைத் தரிசித்தபொழுதே சர்வபாவங்களும் நீங்குமெனின், அதனடியிலே யிருந்து

தவம்புரிந்தவர் பெறும்பயன் இப்படிப்பட்டதென்று சொல்லவேண்டுமோ. வண்டார்குழலம்மையார் திவ்வியசந்நிதியில் வளர்ந்தோங்கிய அவ்வேம்பு எவ்வகைப்பட்ட கொடியநோய்களையும் ஒழிக்கும். வறுமையையொழிக்கும். தருமத்தைவளர்க்கும். ஞானத்தையுண்டாக்கும். உலகத்தார்க் கருள்புரியும்பொருட்டே அமுதத்தினின்று இது தோன்றிற்று. மாந்தர்களனைவருந்தரிசித்துத் தத்தம்பாவங்களை யொழிக்குமாறும், வேடர்முதலாகிய தீயோர் இங்கணுகாவாறும், வணங்குபவர் விரும்பிய சித்திகள் கைகூடுமாறும், கருணைமேலீட்டினாலே இந்திரன் இவ்விருட்சத்தை இம்மலையிலே தாபித்தான். முற்பிறவிகளிலே மேலாகிய பலபுண்ணியங்கள் செய்தவர்க்கே இம்மரத்தின் தரிசனங்கிடைக்கும் என்றுசொல்லி வரும்பொழுது முனிவர்கள் வணங்கின்று, முனிவர்பெருமானே இம்மலையிலே இவ்வேம்பைத் தாபித்தகாரணம் யாது? தேவதீர்த்தத்தின் வரலாறென்னை? இவ்விரண்டனையும் அருளிச்செய்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது சூதமாமுனிவர் அகமகிழ்ந்து முனிவர்களைப்பார்த்து "ஓ அருந்தவமுனிவர்காள்! அது மிக இரகசியமானது. ஆனாலும் பத்திமிக்க உத்தமர்களாகிய உங்களுக்கு அதன் உண்மையைச் சொல்கின்றேன். அதைக் கேட்பீர்களாயின் உங்கள் பாவங்களனை

த்தம் ஒழிந்துவிடும்" என்று கூறுகின்றார். முன்செய்த தபோபலத்தால் உயர்வுபெற்ற சத்தரிஷிகளுள் ஒருவ ரானவரும் தமது பாதங்களாற் பார்க்கும் பெருமை பெற்றவரும் சகலதர்மங்களையும் அறிந்து வேதங்களனை த்தையும் ஓதித்தெளிந்து இல்லறத்தில் நின்று தருமநெ றிவழுவாது ஒவ்வொரு கன்மங்களையும் நடத்தி மிகுந்த பக்தியோடு சிவபிரானுடைய திருவடிக்கமலங்களை எ க்காலமும் இடைவிடாது தியானிப்பவருமாகிய கௌ தமமுனிவருக்கு அகலிகை யென்னுமாது மனைவியா யினள். அவள் தேவர்களும் அசுரர்களுங்கூடித் திருப் பாற்கடல்கடைந்த காலத்து அதிலிருந்து உண்டான வள். சாமுத்திரிகா சாஸ்திரத்திற்சொல்லிய ஒவ்வோ ரவயவ விலக்கணங்களும் சரிவறப் பொருந்தியவள். பிறப்பிற்றானே சர்வாலங்காரங்களும் வாய்ந்தவள். அத் திருப்பாற்கடலிற் மற்றை அப்சரஸ்திரீகளினும் இவள் மிக அழகுள்ளவள். இவ்விதப்பெருமைதாங்கிய அம் முனிபன்னியைத் தேவர்க்கு அரசனாகிய இந்திரன்க ண்டு முன்செய்த தீவினைவசத்தால் மதிமயங்கி அவள் மேல்மையல்கொண்டு காமுகனாய்க் கௌதமமுனிவர் போல் வேடம்பூண்டு அம்முனிவரில்லாத சமயம்பார் த்துப் பன்னசாலையினுள்ளே நுழைந்து வலிந்து அப்ப திவிரதாசிரோன்மணியைக் கற்பழித்தான். அச்சமயத் திலே தெய்வவசத்தினாற் கௌதமமுனிவர் அங்குவந்த

னர். முனிவேடத்தோடிருந்த இந்திரன் அவர் வருதலை க்கண்டு பூனையுருவங்கொண்டு சாளரவாயில் வழியாக வெளியேயோடினன். கௌதமமுனிவர் இந்திரன்செயலையும் தம்பத்தினி கற்பழிந்ததையும் அறிந்து கோபங் கொண்டு ஸ்ரீராமன் உலகத்திலே திருவவதாரஞ் செய்துவருமளவும் சிலையாயிருக்கக்கடவையென அகலிகையையும், ஆயிரம் யோனியுடையவனுகவென இந்திரனையும் சபித்தனர். இவ்வாறு அம்முனிவர் சபித்தலும் இந்திரன் அச்சாபமேற்று வெட்கமடைந்து பிரபாசமென்னுந் தீர்த்தத்திலே சென்று தன்னுடம்பைமறைத்து அதனுள் முழுகியிருந்தான். தேவர்கள் அவன்போன வழியறியாது கவலைகொண்டு ஒருங்குகூடிப் பிரகஸ்பதியினிடத்தே சென்று அரசனில்லாதிருத்தல் நாட்டுக்கழகன் றெனமுறையிட, அவ்வியாழபகவான் தமது ஞானநோக்கால் இந்திரனடைந்த கதியையறிந்து அவனிருக்குமிடம்போய் அவனைத்துதித்தார். அதுகண்ட இந்திரன் மிகநாணித் தலைகுனிந்து தன்வறலாறனைத்தையும் அவர்பாற்சொல்லி வருந்திநின்றுன். பிரகஸ்பதி அவ்வார்த்தையைக்கேட்டு வியாகூலமுற்றுக் கருணையால் அவனைப்பார்த்து "ஓ இந்திரா! பரதாரகமனமென்னும் மகாபாவத்தைச் செய்பவன் எவ்வித உயிர்நிலையிருப்பினும் மிக இழிந்தகதியை யடைவானென்பதற்கு இது ஓர் சான்ருயிற்று. இது அரிதாகிய தவத்தாலன்றிப்

பிறிதொன்றால் நீங்கத்தக்கதன்று. தவத்தினாலேயே உலகம் நிலைபெற்றிருக்கின்றது. அதனாற்றான் புண்ணியங் கைகூடும். அதனாற்றான் பாவங்களொழியும். அதனாற்றான் நல்லறிவுதிக்கும். ஆதலால், எவனும் தவத்தையே செய்யவேண்டும். பூவுலகத்திலே சம்புத்தீபத்திலே பாரதவருஷத்திலே பலதலங்களும் பலபர்வதங்களும் இருக்கின்றன. கங்கை, கோதாவிரி, பயோஷ்ணி, மலஹருணி, காவிரி, துங்கபத்திரை, கிருஷ்ணவேணி, கௌதமி, சோணை, பம்பை, வேகவதி, பொருநை, மகாநதி, யமுனை, கண்டகிமுதலாகிய பலபுண்ணியநதிகள் நீராடினமாத்திரத்தே எவ்வகைப்பட்ட கொடியபாவங்களையும் போக்குவன. கைலாசம், மந்தரம், மல்லிகார்ச்சுனம், விர்த்தாசலம், சித்திரகூடம், வடமூலம், வனசைலம், கண்டசைலம், கோவர்த்தனம், காவிரியின்வடகரையிலுள்ள சுவாமிமலை, பிரமகிரி, அருணாசலம், சேஷாசலம், திருக்கழுக்குன்றம், அமுதமும் விஷமும் தன்னிடந்தீர்த்தமா யமையப்பெற்ற ஈங்கோய்மலை, மகாமேருவுக்குச் சமானமாகிய இரத்தினசலம் என்னும் இவை மிகச்சிறந்தனவாம். இவற்றுள் இரத்தினசலத்திலே யெழுந்தருளிய சிவலிங்கவடிவினையுடைய கண்ணுதலார் தம்மைத் தரிசித்தவர்க்குப் போகமோக்ஷங்களை உடனே அருளுவர். இத்திருப்பதி காவேரியின் தென்கரையிலுள்ளது மகாசித்திகளைத் தரவல்லது. ஆதலால்

நீ அவ்விடஞ்சென்று பஞ்சாக்ஷர வடிவாயுள்ள அம்மலையில் ஏறி அங்கெழுந்தருளி யிருக்கின்ற சிவலிங்கப்பெருமானுக்கு வடபால் ஒருதீர்த்தத்தையும் தேவியார்சந்நிதியில் ஓர் வேம்பையும் உண்டாக்கித் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வேம்படியிலிருந்து தவஞ்செய்வாயாக. அவ்வாறு செய்வையாயின் ஓராண்டினுள்ளே சிவபிரான் உமாதேவியாரோடு எழுந்தருளி உனது பாவத்தை நீக்குவார். ஓ இந்திரனே! பரமேசுரனுடைய கருணையே வடிவாகிய மூன்றுமுடிகளுள்ள அம்மலைக்குப் போகக்கடவாயென்று கூறினர். அவ்வுரைகேட்ட இந்திரன் ஆசாரியராஞ்ஞையைச் சிரமேற்கொண்டு நாணத்தோடு அவர்பாதங்களைவணங்கி விடைபெற்றுத் தென்றிசையில் அம்மலையிருக்குமிடத்தை நாடிச்சென்றான். இந்திரன்முதலாகிய தேவர்களும் இங்குதேடிவந்து துதித்துப் பூசிப்பார்களாயின் இதன்பெருமை சொல்லற்பாலதோ. இத்திருமலை பஞ்சாக்ஷரவடிவுபொருந்தி அன்பர்க்கபயமளிப்பது. பற்பலதீர்த்தங்களும் பலயோகிகளும் நிறைந்திருக்கப்பெற்றது. இனி அவ்வேம்பின்மகிமையை யுரைக்கின்றேன் என்று மேலேசொல்லுகின்றார்.

தலவிசேடச்சருக்கமுற்றிற்று.

மூன்றவது

இந்திரன்பூசித்தசருக்கம்.

தெய்வத்தன்மையுடைய வேப்பமரம்பொருந்திய அவ்விரத்தினகிரியைத் தேவராஜனடைந்து தேவியார் சந்நிதியில் ஓர் வேப்பமரத்தையுண்டாக்கி அதற்கு அமிர்தம்பெய்து வளர்த்து அம்மலையினுச்சியிலே தனது கையிலுள்ள வச்சிராயுதத்தாற்குடைந்து தன்பெயரால் ஓர் தீர்த்தமும் உண்டாக்கினன். நாடோறும் காலையில் எழுந்து "திரியம்பகம்" என்றுதொடங்கிய வேதமந்திரத்தை யுச்சரித்து அத்தீர்த்தத்திலே நீராடிக் காலைக்கடனமுடித்து இரத்தினகிரீஸ்வரரையும் சுரும்பார்குழலம்மையாரையும் வணங்கித் தேவலோகஞ்சென்று அங்குள்ள மணங்கமழும் அழகிய மலர்களைக்கொய்துவந்து அவற்றுல் சிவபிரானைப்பூசித்து விண்ணுட்டிலிருந்து கொண்டுவந்து கனிகளைநிவேதித்து மும்முறைவலம் வந்து நமஸ்கரித்து நின்று அன்பினேடு தோத்திரஞ்செய்தான். பின் வடபுறத்திலுள்ள தனதுதீர்த்தத்தின் அருகிலிருக்கும் ஓர்குகையுட்சென்று லயயோகம்பொருந்தி ஆசிரியனுபதேசித்தவழி ஸ்ரீபஞ்சாக்ஷர மகாமந்திரத்தை நியாசம் தியானங்களுடன் சேர்த்துச் செபித்து மூவாசைகளையுமொழித்துச் சிவபிரானுடைய திருவடிகளிலே மனத்தைச் செலுத்தியிருந்தான். இங்ஙனம்

முந்நூறாண்டளவும் அம்மலைச்சிகரத்திற்செய்த மகாதீர்த்த ஸ்நானத்தாலும் கடுந்தவத்தாலும் அவனுடைய பாவங்களனைத்து மொழிந்தன. அப்பொழுது கருணை வள்ளலாகிய கண்ணுதற்பெருமான் நாரணன் நான்முகன் முதலாகிய தேவர்கள்சூழ, சூலம், டங்கம் முதலாகிய ஆயுதங்களைக்கண்டு அசுரர்கள் ஓட, வெண்ணீறு திருமேனியிலிலங்க, செஞ்சடைபின்றாழ, இளம்பிறை முடிமிசைவிளங்க, நாகமாகிய உபவீதந்துலங்க, கங்கணமுதலியபணிகளும் பணிகளாய்நிற்ப, இடையிலே புலித்தோலிலங்க, வரதாபயங்களைத் திருக்கரங்களாற் காட்டி, வெள்ளிய இடபவாகனமேற்கொண்டு, கோடி சூரியப்பிரகாசமும் கோடி சந்திரசீதளமும் பொருந்தி, படிகமுதலிய பல இரத்தினங்களாற் பல அலங்காரங்களைப்பெற்றுச் சுந்தரவடிவத்தோடு கண்டோர் ஆனந்த சாகரத்தழுந்த, அவனுக்குத் தரிசனங்கொடுத்து அவனைப்பார்த்து "ஒ இந்திரனே! உன்குறை நீங்கிற்று. நீகருதியவரத்தைக் கேட்கக்கடவை. நீசெய்ததவத்தாலும் பூசையாலும் தியானயோகத்தாலும் மூலமந்திர செபத்தாலும் நாம்மகிழ்ச்சியெய்தி இங்குவந்தோம். இதோசர்வலோகமாதாவும் சர்வமந்திரரூபியும் மெய்ஞ்ஞான மருளுபவளும் சர்வதேவரூபியும் சர்வலோகாநுக்கிரகியுமான சுரும்பார்குழலாளும் உன்துதிக்குமகிழ்ந்து நீ விரும்பிய வரந்தரும்படி இங்கெழுந்தருளினள். உனது

தியானயோகபலன் கைகூடிற்று. இனி நீ எதற்கும் அஞ்சவேண்டாம். இவ்விரத்தினகிரியில் எவர் தவம்புரியினும் அவர் இஷ்டத்தை நிறைவேற்றுவது நங்கடமையாம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகண்ட இந்திரன் யோகத்தைவிட்டெழுந்து சிவபிரானையும் அம்மையாரையும் தரிசித்து வணங்கி மெய்மறந்து ஆனந்தக்கண்ணீர்பொழிந்து நின்று தோத்திரஞ்செய்வானாயினன்.

இந்திரன்பூசித்தசருக்கமுற்றிற்று.

நான்காவது

இந்திரன்பழிநீங்குசருக்கம்.

சச்சிதானந்தரூபியே! ஆனந்தமென்னும் அமுதங்கலந்தபேரறிவே! கிருபாசமுத்திரமே! இரத்தினகிரியில்விளங்கும் ஈசனே! மறைமுடிகளில் விளங்கு மாமணியே! நெற்றிக்கண்ணுடையானே! கையிற்கபாலம் இடையிற் புலித்தோலுடையானே! நித்தியனே! அநாதிமல முத்தனே! முக்குணங்கடந்த முதல்வனே! உயர் வொப்பில்லாதவனே! விந்துநாதமாய் ஓங்காரமாய் ஐந்தெழுத்தாய் மற்றும் பற்பலவடிவங்களையுடைத்தாய் நின்றும் உண்மையில் ஓர்வடிவமற்ற உயர் பராப

ரப்பொருளே! யோகிகளுடைய இருதயகமலங்களில் வீற்றிருப்பவனே! நற்குணங்களுக்கு இடமானவனே! கங்காதரா! காளகண்டா! வித்தையளிக்கும் விமலனே! பஞ்சாக்ஷரப்பொருளை உலகத்தாருய்யுமாறு உபதேசித்தருளிய புண்ணியனே! புண்ணியத்தின் இருப்பிடமே! புராணத்தைத் தந்தவனே! அர்த்தநாரீசுரா! அன்பர்கருதியவற்றை யளிப்பவனே! அபயந்தருபவனே! வெண்ணீறிலங்குந் திருமேனியுடையாய்! மங்களசொரூபியே! சூரியமண்டலத்தில் விளங்கிவணங்கும் அடியார்க்கு முத்தியளிப்பவனே! திவ்வியரூபா! திகம்பரா! தேவதேவனே! காமற்காய்ந்தவனே! அசுரகாலனே! சகளமூர்த்தி! பரமேஸ்வரா! பஞ்சாக்ஷரப்பொருளே! பவத்தையொழிக்கும் பரம்பொருளே! ஏழையாகிய என்சாபத்தை யொழிக்க இத்திருமேனிகொண்டு இங்கெழுந்தருளிய தேவனே! உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்" என்று இவ்வாறு தோத்திரஞ்செய்த இந்திரனிடத்தே கருணைகொண்டு சிவபிரான் அவனைப்பார்த்து "ஓ தேவராஜனே! உன்சரீரத்தில் கௌதமசாபத்தால்வந்த ஊறுநீங்கி ஆயிரம்யோனியும் ஆயிரங்கண்களாய்மாறிச் சகஸ்திராக்ஷன் என்னும்பெயரோடு திவ்வியசரீரியாய்த் தேவசபைசென்று சிறப்புடனிருப்பாயாக, நீசொல்லிய தோத்திரங்களைச் சிவபூசாமுடிவிலே எவன்படிப்பனோ அவன் ஐஸ்வரியம் பெறுவான். கா

லையிலாதல் மாலையிலாதல் வேம்படிசென்று சுத்தனாயி ருந்து இரத்தினலிங்கத்தைத் தியானித்து நீசெய்ததுதி யை உருச்செபிப்பவன் எவ்விததீயநோய்களுக்கு மாளா கான். நோயுள்ளவன் அதுநீங்கப்பெறுவான். அரசனா யின்யுத்தத்தில் வெற்றியுறுவன். அந்தணனாயின் முத்தி யடைவான். மற்றெவ்வித பக்தான்மாக்களும் இதைப் படிப்பார்களாயின் முத்தியுறுவார். ஆதலால் எதற்கும் ஐயமுறவேண்டாம்'' என்று திருவாய்மலர்ந்து அவனு க்குக் காட்சிகொடுத்து அநுக்கிரகஞ்செய்து அங்குவிள ங்கும் சோதிமயமான சிவலிங்கத்திலே மறைந்தருளி னார். பின்பு இந்திரன் குருபக்தியாலும் கடுந்தவத்தா லும் பஞ்சாக்ஷர செபத்தாலும் சிவபிரானுடைய திரு வருளாலும் பிராமணசாபம் நீங்கப்பெற்று ஆயிரங்கண் ணார்ந்த அழகியசரீரத்தோடு பரமசாம்பவகோடிகளுள் ஒருவனாயினான். இந்திரனால் உண்டாக்கப்பட்ட இவ்வே ம்பைத் தரிசித்தவர்க்குப் பிரமசாபம் நீங்கிச் சிவலோ கங் கிடைக்குமெனின், வேறெவ்வித பெருமை இதற்கு ண்டாகவேண்டும். தக்ஷிணோத்தராயணம், விஷுபுண் ணியகாலம், சூரியசந்திர கிரகணம், அமாவாசை, சோ மவாரம், சன்மநக்ஷத்திரம், சிரார்த்ததினம் என்னுமிப் புண்ணிய காலங்களிலே "தேவதீர்த்தத்தில் "ஆயா கி" என்று தொடங்கிய மந்திரத்தை மும்முறை யுச்சரி த்து நீராடி வேம்புக்கு அபிஷேகஞ்செய்து தன்னாற்ற

லுக்கேற்றபடி அந்தணர்களைப் பூசித்துக் கடவுளையும் தேவியாரையும் வணங்கிப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து அவ்வேம்படியிலே அந்தணர்களுக்கு அன்னதானஞ் செய்தவன் கயாசிரார்த்த பலனைப் பெறுவான். வேம்பினடியிலே கன்னிகாதானஞ் செய்தவனுடைய பிதுர்க்க ளனைவரும் சிவலோகஞ் சேர்வார்கள், இரத்திநுசலத்தைச் சுற்றியுள்ள ஐந்து குரோசவிடத்தில் எவ்வரசன் பிராமணர்களுக்கு வீடும் விளைநிலங்களும் தானஞ்செய்வனோ அவன் சிவரூபம் பெறுவான், அப்புண்ணியபலனைச் சிவபிரானொருவ ரறிவாரன்றி மற்றையோரளவிடற் பாலரல்லர். கன்னிகை, கபிலை, பூமி, தாசி, திரவியம், அஸ்வம் என்பவைகளை அவ்வேம்படியிலே தானஞ்செய்பவன் சிவலோகத்திலே எக்காலத்தும் நீங்காத பெருவாழ்வைப் பெறுவான். ஓர் மாதம் அல்லது இரண்டுமாதம் தேவதீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து வேம்பைப் பூசித்துவருபவன் குஷ்டம் வாதம் குன்மம் முதலாகிய கொடுநோய்கள் நீங்கப்பெறுவான். வேற்றுத் தேசங்களி லிருப்பவரும் தானேயுதிர்ந்த அவ்வேம்பின் இலைகளை அன்பினோடு புசிக்கின், குருடர் கண்களையும், செவிடர் காதுகளையும், பற்களற்றவர் பற்களையும் பெறுவார்கள், ஊமையாயுள்ளவர் நல்வாக்கையும், குளறுவாயர் நற்கல்வியையும், அங்கவீனர் அழகிய சரீரத்தையும் அடைவார்கள். மந்திரங்கள் யாவும்

இவ்விடத்தே சித்திக்கும்! அரசரனைவரும் வசப்படுவர். பெண்கள் எக்காலத்தும் கற்புநிலை தவறாது அடிமைபூண்டொழுகுவர். புத்திரரில்லாதவர் புத்திரப்பேறடைவார்கள், மனைவியை யிழந்தோர் மறுமணம் பெறுவர். எவ்விருப்பத்தோடு அவ்வேம்பை வழிபடினும் அவ்விருப்பஞ் சித்தியாம், இவ்வேம்பின் பெருமையை இரத்தினலிங்கத்தின் முன்னே படிப்பவரும் சிவபெருமானுடைய திருவருளால் புத்திமுத்திகளைப் பெறுவர். இதன்பெருமை அநாதியேயுள்ளது. இரத்தினசலநாதரது கருணையைத் தருவதாகிய. இம் மான்மியத்தைப் படிப்போரும் கேட்போரும் சிவபிரானுடைய திருவருளைப் பெறுவார்கள்.

இந்திரன்பழிநீங்குசருக்க முற்றிற்று,

ஐந்தாவது

வாயுதேவன்பூசித்தசருக்கம்.

தவத்தருள்ளே தலைமைபெற்ற நைமிசாரணிய முனிவர்காள்! இனி வாயுதேவன் அச்சிவலிங்கப்பெருமானைப் பூசித்தவரலாற்றைச் சொல்கின்றேன்.

முன்னாளில் வாயுபகவான் தன்வலிமையை அளவிடும்படி மேருமலைச்சிகரங்களைப் பிடுங்கியகுற்றத்தை

ஒழித்துக்கொள்ளும் பொருட்டுக் கைலாசபதியாகிய சிவபிரானுடைய திருவடிகளைச் சரணமடைந்து அவர் கட்டளைப்படி இரத்தினகிரியையடைந்து நாடோறும் அன்றலர்ந்த மல்லிகை, சாதி, குருந்தை, மகிழ், குவளை, மற்றுள்ள அழகியபுஷ்பங்களும், சண்பகம், வில்வம் முதலியவைகளும், தாழையொழிந்த மற்றுள்ள நறுமணங்கமழுமலர்களும் கொய்துவந்து இரத்தினலிங்கத்தைப்பூசித்து அவ்விலிங்கத்தின் கீழ்ப்புறத்திலே சூரிய காந்தங்கள்நிறைந்த கற்களின்மேல் தன்பெயருள்ள கற்களால் ஓர் தீர்த்தத்தையுங் கட்டினான். பின் சித்தசுத்தியோடிருந்து "தபோவாய" என்றுதொடங்கிய மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு வாயுதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சிவபிரானையும் தேவியாரையும் வணங்கி, கணபதி, க்ஷேத்திரபாலர் முதலாகிய பரிவாரதேவர்களைப் பூசித்து, சிவலிங்கப்பெருமானுக்கு வேதமந்திர உச்சாரணத்தோடு அபிஷேகமுஞ்செய்தான். வாயுதேவன் பூசித்தகாலம் துலாமாச பூரணையன்று மத்தியானமாம். இங்ஙனம் வாயுதேவன் தினந்தோறும் அஷ்டோத்திர பூசையும் கந்தமூலநிவேதனமும் தவறாதுசெய்து வருங்காலத்தில் ஒருநாள் பூசைமுடித்து அன்பினோடு இரண்டுகைகளையும் சிரமேற்கூப்பி ஆனந்தக்கண்ணீர்பொழிந்து நின்று "சிவசம்போ மகாதேவா, தேவதேவ, கருணாநிதியே, வேண்டுவார் வேண்டியவண்ணம் அருள்புரி

யும் வித்தகனே, உலகப்பொருளனைத்துமாய் அவைக ட்கு நாதனுயுள்ளவனே, கங்காதரா, சங்கரா, பிறப்பும் வினையும் அற்று இரத்தினகிரியிற்ருேன்றிய பரம்பொரு ளே, உமதுதிருவடிகளை ஒருபோதும் மறவேன், ஆதி ரைநாளில் அருச்சிப்பேன், உலகத்தாருய்யும்பொருட் டுக் குருமூர்த்தியாயெழுந்தருளி வேதப்பொருளை யுப தேசிக்கும் உத்தமனே, க்ஷேத்திரங்களுக்கு நாதா, அ ன்னங்களுக்கு அதிபதீ, கிராதவேடங்கொண்ட கிரு பைக்கடலே, திருடர்க்குத் தலைவனே, மலைகட்கு அதி பதீ, சிறியேன் உமது இடமாகிய மேன்மைதங்கிய மே ருவரையின் முடிகளைப்பிடுங்கிய குற்றம் என்னைவிட்ட கலுமாறு திருவருள்செய்து நற்கதி தரல்வேண்டும். தேவரீரே தமியேற்கு உற்றதுணையாம்" என்று இவ் வாறு தோத்திரஞ்செய்து தண்டம்போற் கீழ்விழுந்து திருவடிகளைப்பற்றி ஆனந்தக்கண்ணீர் பெருகவிருந்தா ன். அப்பொழுது அடியார்க்கு எளியராகிய சிவபிரான் உமாதேவியாரோடு தோன்றி "வாயுவே, நீவிரும்பிய வரத்தைக்கேட்குதி" என்று திருவாய்மலர்ந்தருளினுர்.

முனிவேந்தர்காள்! கொடிதாகிய சிவத்துரோக பாவம் பிறிதொன்ருல் நீங்கத்தக்கதன்று. தீமையைப் புரிந்தும் நன்மையைவிடுத்தும் இருக்கின்ற எவனும் பரமேசுரனுடைய திருவருளாலன்றி பரிசுத்தமுருன். தண்ணீரால் உண்டாகிய சேறுதண்ணீரால் நீங்குந்தன்

மைபோலச் சிவத்துரோகத்தால் உண்டாகியபாவம் சிவனருளாலேயே நீங்கவேண்டும். இவ்வுண்மையையுணர்ந்த வாயுதேவன் இவ்விரத்தினகிரியிலே சிவபிரானைப் பூசித்தமையால் அவன் தான்செய்த கொடும்பாவநீங்கிப் பெரும்புகழ்பெற்ருன். அக்கடவுளின் ஆணையால் வாயுதேவன் உலகெங்கும்வியாபித்து ஒவ்வோர் சரீரத்தினும் சென்று பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்துப்பெயரோடு அவ்வச்சரீரங்கட்கு இன்றியமையாத உபகாரங்களைச் செய்து வருகின்ருன். இவ்வாயுதேவனுடைய சரித்திரத்தைப் படிப்போர் எவ்வகைப்பட்ட குற்றங்களைச்செய்திருப்பினும் சிவபிரான் அவற்றைப் பொறுத்தருளுவார். ஐப்பசிப்பூரணையிலே வாயுதீர்த்தத்தில் நீராடுபவர் பரதாரகமனம் பிறர்பொருள் கவர்தல்முதலாகிய மகாபாவங்களினின்றும் உடனேநீங்குவர். இனி ஆதிசேடன்பூசித்து அருள்பெற்றசரித்திரத்தைச் சொல்கின்ரும்.

வாயுதேவன்பூசித்தசருக்க முற்றிற்று.

ஆறவது

ஆதிசேடன்பூசித்தசருக்கம்.

மேற்புகன்றவாறு இரத்தினகிரியிலே வாயுதேவன் தன்னைச் சூழ்ந்த சிவத்துரோகபாவத்தை நீக்கிக்

கொண்ட வரலாற்றை நாரதமுனிவர் ஆதிசேடனிடத் தேசென்று தெரிவிக்க, அதையறிந்த ஆதிசேடன் தன் பாவத்தையும் அவ்வாறு ஒழிக்கக் கருதி, பூலோகத் தையடைந்து பற்பல திருப்பதிகளிலே சிவபிரானைப் பூசித்துவணங்கி முடிவில் இரத்தினகிரியைச்சார்ந்தான், அவ்வாதிசேடன் பூசித்த தலங்களிலே சிலவற்றைச் சொல்கின்ருேம். அவையாவன ; மேற்கடற்கரையிலே புகழ்பெற்ருேங்கும் கோகரணம், சங்குகரணம், பாவபு ண்ணியமாகிய பிரபாசம், மந்தாரசலம், உத்தமம் பொருந்திய பிரமபுரி, அனந்தசயிலம், சோமேசுவரம், கபிலேசுவரம், கேரளநாட்டிலுள்ள சுசீந்திரம், சகியமலை, ஒப்பற்ற ஸ்ரீகண்டம், வில்வாரணியம், தர்மேசுவரம், வியாசாசிரமம், வேதநதி, கோமயேசுரம், காவிரிநதிக்கரையிலுள்ள அவிநாசி, அதன் அக்கினிதிக்கிலுள்ள மாதவவனம், பவானிகூடல், வராகிகூடல், வில்வாரணியம், விசாலம், பிரமேசுரம், சுவேதாசலம், வேணிநாதம், ஸ்ரீகூடம், வில்வாரணியம், அம்பரோதா நதிக்கரையிலுள்ள கருவூர், அம்பரோதாநதி கூடலிலுள்ள அகத்தீசுவரம், வாலீசுவரம், கன்னியாகிரி, திருவையாறு, அறப்பளீசுரம், மச்சதீர்த்தம், கொழுந்துவிட்டெரியும் அனலேசுவரம், சர்ப்பநதிதீரத்துள்ள ஈங்கோய்மலை, சத்த மாதர்கள்பூசித்த கதம்பவனம், காவேரியின் தென்கரையிலுள்ள சங்கராசலம் என்பவைகளாம், ஆதிசேடன்

இத்தலங்களைத் தரிசித்தபின் முன்செய்த புண்ணிய விசேடத்தால் பெருமைபொருந்திய இரத்தினகிரியை யடைந்து அவ்விடத்திலே தவஞ்செய்திருக்கும் வியாசர், அத்திரி, பரத்துவாசர், ஜமதக்கினி, காத்தியாயனர், வேகவந்தர், அமிதாசனர், குரூராசனர், அதிசிருங்கர், விருஷாகவி, அன்னதானர், சோமவாரர், மயூரமுகர், வாதாசனர், பூர்ணுசனர், பலாசனர், திரிகால ஸ்நான மான்மிய மறிந்தநிம்பர் முதலாகிய முனிவர்களையும் வேம்படியில் வசிக்கும் அவர் பன்னியர்களையும் வணங்கி அவரநுமதிபெற்று அந்தணவடிவம்பொருந்தி அவ் விலிங்கத்தின் தென்புறத்திலே தன்பெயரால் ஓர் தீர்த்தத்தையுண்டாக்கி அதற்குக்குறியாகக் குங்குலியமரத்தை அதனருகேவைத்து "நமோஸ்து சர்ப்பேப்யோ" என்றுதொடங்கிய மந்திரத்தால் தனதுஞாதிகளைப் பூசித்து, தீர்த்தத்தின் நடுவிலே சங்கமுதலாகிய நிதிகளை ஆவாகனஞ்செய்து சத்தியோசாதமாகிய பஞ்சப்பிரமமந்திரங்களால் தீர்த்தரக்ஷைசெய்து, அறுகு அக்ஷதை திலமுதலியவற்றைச் சிரத்திலிட்டு ஸ்நானஞ்செய்து "ப்ரம்மஜக்ஞானம்", என்றுதொடங்கிய மந்திரத்தையும் பஞ்சாக்ஷரத்தையும் முறையே ஆயிரத்தெட்டுமுறை செபித்து, சோலைகளிலே தானேமலர்ந்த பூக்களைக்கொய்து ஆலயத்துட்சென்று துவாரபாலர்களை நமஸ்கரித்து விக்கினேசுரர், க்ஷேத்திரபாலர் முதலாயினோ

ணா விதிப்படி பூசித்து இலிங்கத்துக்குத் தென்மேற்கு மூலையில் சூரியனால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கங்காசலம் போன்ற தீர்த்தத்தில் நூற்றெட்டுக்குடம் எடுத்து அபிஷேகஞ்செய்து சிவலிங்கப்பொருமானுக்கு நூற்றெட்டு முறை அருச்சனையும்புரிந்து பலவகைச் சித்திரான்னங்களை வெவ்வேறாக நிவேதித்து மனதிலேமிகுந்த அன்புபூண்டு பலமுறை நமஸ்கரித்து எழுந்துநின்று கைகளைச் சிரமேற்கூப்பி ஆனந்தக்கண்ணீர் பொழிந்து "ஓ உலகநாதா, அருளுருவே, அன்பர்க்கடியவனே, இரத்தினகிரியில் விளங்கும் எம்பெருமானே, கரியுரியைப் போர்வையாகக்கொண்ட கடவுளே, பிறைமதி புனைந்த பெருமானே, திருமேனியின் ஓர்பாகத்திலே பெண்வடிவையுடையவனே, சிறியேனுக்கும் வாயுதேவனுக்கும் நடந்த பெரும்போரால் உமது இருப்பிடமாகிய மேருமலையின் சிகரங்கள்பல அசைக்கப்பட்டன. சிறியேன் அறிவின்மையாற் செய்த அக்குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும், அடியார்கள்செய்த குற்றங்களைக் கிருபையினால் நீக்குவது தேவரீர்க்கு இயல்பன்றோ" என்று இவ்வாறு தோத்திரஞ்செய்து சிவபிரானுடைய திருவடிகளை வணங்கிநின்றான். அப்பொழுது அருட்கடலாகிய எம்மையன் அவன்முன்னே தோன்றி "சேட! நாம் உனது குற்றத்தை நீக்கியருளினோம். இனி நீ பரிசுத்தனாய் உன்னிருப்பிடம்சென்று சுகித்து வாழக்கடவாய்"

என்று அருளிச்செய்து திருமூலலிங்கத்திலே கரந்தருளினர்.

இவ்வாறு ஆதிசேடன் அவ்விடத்திற் செய்த தவத்தால் சிவத்துரோக மகாபாவத்தை யொழித்துக் கண்ணுதற் பெருமானுடைய திருவருள்பெற்று நித்திய நைமித்திக கன்மங்களை அங்கேமுடித்து அநேககோடி சூரியப் பிரகாசமுள்ளதும் அமிர்தத்திற் பிறந்ததுமான தன் சிரோரத்தினங்களில் ஒன்றை அங்குள்ளபடியே தீபம்போல் விளங்கவைத்து ஆனந்தப்பெருக்கால் அகிலேசனையும் அம்மையாரையும் வணங்கி அத்திருப்பதியின் மகிமையை யாவரும் அறியும்படி கானஞ்செய்து கொண்டு தன்னிருப்பிடமாகிய நாகலோகத்தை யடைந்தான்.

ஆதிசேடன் இவ்வண்ணம் உய்திபெற்ற செயலையறிந்த முனிவர்கள் பலர் அவ்விடத்தை ஒருபொழுதும் விட்டகலாது தவஞ்செய்து கொண்டிருந்தார்கள். அருமறையாகமப் பொருளையுணர்ந்த அந்தணசிரேஷ்டர்கள்! உலகத்திலே மற்றெவ்வித பாவங்களொழியினும் சிவத்துரோக மகாபாவம் எவ்விடத்து மொழியாது. இத்திவ்வியத்தலமொன்றே அதனையொழிக்கவல்லது. மந்திரங்களுட் காயத்திரிபோலவும், ரசங்களுள் அமிர்தம்போலவும், இருகாலுள்ள பிறவிகளுள் வேதவுண்மையுணர்ந்த அந்தணர்கள்போலவும், மேருமலையின்கோ

டிமுடிகளுள் இந்தஐந்துமுடிகள் சிறந்தன. அவற்றுள்ளும் இரத்தினசிருங்கமானது மிகச்சிறந்தது. வேறிடங்களிலே செய்தபாவங்கள் இவ்விடத்துவந்தால் ஒழியும். இங்குசெய்தபாவம் இங்கன்றி மற்றெங்கு நீங்காது. இத்தலம் எவ்வகைப்பட்ட பாவங்களையும் போக்கும் வலிமையுள்ளது. இப்பெருமைபெற்ற இரத்தினகிரீசரது சந்நிதியிலே அந்தணருக்கு ஓர்பொருளைத் தானஞ்செய்பவனும், இம்மலையைக்கண்டவுடனே பணிந்து அன்போடு கடவுளைத்துதிப்பவனும் தன்னைக்காண்பவர் செய்திருந்த பிரமஹத்திமுதலாகிய மகாபாவங்களையும் போக்குவான். அப்பதியிலே திருநந்தனவனம் வைப்பவரும், திருவிளக்கேற்றுபவரும், திருமெழுக்கிடுபவரும், சிவசாருப்பியத்தைப் பெறுவார்கள். தேசாந்திரத்திருப்பினும் தீபாந்தரத்திருப்பினும் இம்மலையைச் சிந்தையிலேபணிந்து துதிப்பவர்கள் எவராலும் பெறுதற்கரிய முத்தியையடைவார்கள். புரட்டாசிமாச சுக்கிலபக்ஷத்துச் சதுர்த்தசித்திதியில் நாகதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்பவர்கள் சிவாபராத தோஷத்திலிருந்து நீங்குவதுமன்றித் தாம்விரும்பிய பேறுகளும் சித்திக்கப்பெறுவார்கள். சர்வபாவங்களையு மொழிக்கும் சூரியதீர்த்தத்திலே சூரியகிரணகாலத்தில் ஸ்நானஞ்செய்தல் மிகவிசேடமாம். அவ்வாறு ஸ்நானஞ்செய்பவர் குட்டம், அபஸ்மாரம் முதலாகியநோய்கள் நீங்கப்பெறுவர். அவ்வி

டத்திலே திலதருப்பணஞ்செய்யின் அவனுடையபிதுர்க்கள் திருப்தியுற்று உலகமுடிவுவரையிலே கைலையங்கிரியில்வாழ்வார்கள் என்றுகூறினர்.

ஆதிசேடன்பூசித்தசருக்க முற்றிற்று.

ஏழாவது

ஆதித்தன்பூசித்தசருக்கம்.

இவ்வாறு சொல்லிய சூதமாமுனிவரைப்பார்த்து நைமிசாரணியமுனிவர்கள் "முனிவர்பெருமானே! இத்தலத்தினில் சூரியபகவான்வந்ததற்கும் கடவுளைப்பூசித்ததற்கும் காரணம் யாது? வியாசமுனிவருடைய திருவருளால் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உண்மைப்பொருளையுணர்ந்த நீரே இப்புராணத்தை அருளிச்செய்து எம்மைப் புனிதராக்கவேண்டும்" என்றுவேண்ட அவ்வாறே சூதமுனிவர் சொல்லுகின்றார்,

தவத்தாற் பெருமை வாய்ந்த முனிசிரேஷ்டர்காள்! உதயாசலத்தின் சமீபத்திலே மந்தேகமென்னும் ஓர் தீவிருக்கின்றது. அத்தீவிலே பல அரக்கர்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் மிகுந்த தவவலிமை பெற்றவர்கள், மற்றெவர்களாலும் அவர்களை வெல்லுவது அரிது, அவர்கள் உதயகாலத்திலே சூரியனோடு போர்புரிவார்கள். ஓர் சமயத்தில் அவர்களோடு முனை

த்துநின்று சமர்செய்யச் சத்தியற்ற சூரியன் தன் இரத த்தைவிட்டிறங்கிப் புறங்காட்டியோடினன். அது கண்ட அமரர்கள் நடுங்கிப் பெருங்கூச்ச லிட்டார்கள், அப்பொழுது ஆகாயத்திலே சூரியனுடைய தேரின் பக்கத்திலே ஆகாய வாக்காக ஓ சூரியனே! இவ்வரக்கர்க்குப் பயந்து ஓடாதொழிக. அவர்களை வெல்லுதற்கு ஒரு உபாயஞ் சொல்கின்றேன். அவ்வாறு செய்வையாயின் நன்மைபெறுவாய். அதாவது, புண்ணியரூபமாகிச் சம்புத்தீபத்திலே தேவர், கருடர், காந்தருவர், கின்னரர், கிம்புருடர், முனிவர் முதலாயினோர் போற்றும் ஓர் திவ்விய தலம் காவிரிநதியின் தென்கரையிலே யிருக்கின்றது. அது மேருமலையிலிருந்துவந்த ஓர் முடியாதலின், இரத்தினகிரியென்னப்படும், அங்குள்ள சிவலிங்கத்தை இரததினலிங்க மென்று துதிப்பார்கள். அவ்விலிங்கத்தைப் பூசிப்பவர்கள் புத்தி முத்திகளைப் பெறுவார்கள், தேவர்கள் பலர் அதைப் பூசித்து இஷ்டசித்திபெற்றார்கள், மனிதர்கள் பிரதிஷ்டைசெய்த லிங்கத்தினும் இருடிகள் தாபித்தலிங்கம் மேன்மையானது, அதனினும் தேவர்கள் தாபித்தலிங்கம் மிகமேலானது, அதனினும் சுவாயம்புவமாகிய லிங்கம் சர்வசித்திகளையும் அருளத்தக்கது. அவற்றுள்ளும் தேவலோகத்துள்ள லிங்கம் மிகமேலானது. அதிலும் மேருவிற் பிறந்த லிங்கத்தினும் சிறந்தலிங்கம் ஓரிடத்துமில்லையாம், ஆதலால் நீ

அங்குசென்று அவ்விரத்தினலிங்கத்தைப் பூசித்தால் இவ்விராக்கதர்களை வெல்லு மாற்றலுண்டாகும்" என்று ஓர் ஒலியுண்டாயிற்று. அதுகேட்ட சூரியபகவான் நாம் அங்கு எவ்வாறுபோய்ப் பூசிக்கப் போகின்றோமெனச் சிந்தித்திருந்தான். அப்பொழுது நாரதமுனிவர் அங்கு எழுந்தருளி "சூரியனே, நீ வீணிற் கவலையுற வேண்டாம். உன்னுடன்பிறந்த மகாவேகமுள்ள அசனியென்பவனை அவ்விடத்து அனுப்புவாயாக" என்றுகூறலும் ஆதித்தன் அவ்வாறே செய்யக்கருதி அசனியைமனதில் நினைந்தான். எண்டிசைகளும் பிறவெளியும் ஆறுகளும் சமுத்திரங்களும் இவ்வுலகமும் மறுவுலகங்களும் நடுங்கத்தக்கதாகப் பெருஞ்சத்தமிட்டு ஆர்ப்பரித்துக்கொண்டு அசனியானவன் வந்தான், அவன்வரவைக்கண்ட சூரியபகவான்முதலிலே அவன் மகிழும்படிசிறிது அவனைப்புகழ்ந்து "ஓ அசனியே, என்னுடன் பிறந்தவனாகிய உன்போல் பராக்கிரமசாலிகள் வேறெவருளர். அப்படிப்பட்ட உன்னைச் சகோதரனாகப்பெற்ற என் பாக்கியமே பாக்கியம். எனக்கு நீ பூமண்டலத்திற் செய்யவேண்டிய காரியமொன்றுண்டு. அதாவது, மந்தேகமென்னுந் தீவினின்று கோடிக்கணக்கான மந்தேகர்கள் எழுந்து என்னுடன் போர்புரிகின்றார்கள். நான் ஒருவனாயின்று அவர்களோடு சமர்புரிதற்கு ஆற்றலில்லாதவனா யிருக்கின்றேன். உதயாஸ்தமனங்களிலே

சற்றும் தாமதியாது செல்லவேண்டுமென்னும் சிவாஞ்ஞையிருப்பதால் அவ்வாறு செய்யவேண்டியிருக்கின்றது. ஆதலால், நீ பூமியிலே இரத்தினகிரியென்னும் திவ்விய க்ஷேத்திரத்தையடைந்து அங்குள்ள இரத்தினலிங்கத்தைச் சோடசோபசாரங்களாற் பூசித்து உன்பெயரால் ஓர் தீர்த்தத்தையும் உலகத்தாருய்யும்படி பிரதிஷ்டைசெய்க. என்கட்டளைப்படி விரைவிலே அவ்விடம் செல்லக்கடவாய்" என்று கூறினான். அதுகேட்ட அசனி அவ்விடம்விட்டுப் புறப்பட்டு மிகுந்த வேகத்தோடு சென்று இரத்தினகிரியை யடைந்து இரத்தினலிங்கத்தின் தென்மேற்கு மூலையிலே சூரியன்பெயரால் ஓர் தீர்த்தத்தையுண்டாக்கிப் பிறரறியாவண்ணம் இரவிற்றானே சூரியனுபதேசித்தபடி இரத்தினலிங்கத்தைப் பூசித்தான். மிகுந்த அன்பினோடு அவன் அவ்வாறு பூசித்த பூசனைக்கு மகிழ்ந்து இரத்தினசலநாதர் சூரியபகவானுக்கு அவ்வரக்கர்களை வெல்லத்தக்க வலிமையைக் கொடுத்தருளினார். அவ்வரம்பெற்ற அசனிமன்னன் மீண்டுஞ் சூரியன்பால்வந்து களிப்புடன் அவ்வரலாற்றை வெளியிடலும் அதுகேட்ட சூரியன் அன்றுமுதல் உதயாஸ்தமயனகாலங்களிலே தன்னோடு சமர்புரிய எழும் அரக்கர்களை முனைந்து புறங்காட்டியோடச்செய்தான். அக்காரணத்தாற்றான் அத்திவ்விய தீர்த்தத்திற்குச் சூரியதீர்த்தமென்று பெயருண்டாயிற்று.

அத்தீர்த்தம் எவ்வகைப்பாவங்களையும் ஒழித்துச் சரீரா ரோக்கியத்தையுந் தரத்தக்கது, சித்திராபூரணையிலே காலையில் எழுந்திருந்து "சசித்திரம்" என்று தொடங்கிய மந்திரத்தை யுச்சரித்து இரத்தினலிங்கத்தை வணங்கி வேம்படிசென்று அதனையும்வணங்கி அதனடியில் ஏதேனும் சிறிதுபொருள் தானஞ்செய்யினும் அது மேருவுக்குச் சமானமாய் வறியவனையும் செல்வனுக்கும். மாலைக்காலத்திலே சுந்தரநாதனென்னும் இரத்தினகிரீசர் திருச்சந்நிதியிலுள்ள அத்தீர்த்தத்தைச் சூரியபகவான்தன் கிரணங்களார சுத்திசெய்கின்றான். வருடந்தோறும் சூரியன்மேடராசியிலிருக்குங்காலத்து வரும்பௌரணிமை திதியிலே அச்சூரியபகவான் பின்பகலிலேதன் கிரணங்களாம் இரத்தினகிரீசனைப் பூசை செய்கின்றான். இஃது இப்பிரமாண்ட முள்ளவரையும் நடக்கும். இவ்வாறு அவராற் பூசிக்கப்பட்ட இரத்தினசலநாதர் கட்டளைப்படி சூரியன் தன்பெயரால் ஓர் தீர்த்தத்தையும் உண்டாக்கினன். அச்சூரியனுடைய சரித்திரத்தையும் அவனாற் செய்யப்பட்ட தீர்த்தத்தின் மகிமையையும் என்னென்று சொல்வேன். ஏதோ என்னாலியன்றளவு சிறிது சொன்னேன். அறுபதினாயிரங் கோடி மந்தேகர்களென்னும் இராக்கதர்களை வெல்லத்தக்க வலிமையைச் சூரியனுக்கு இரத்தினசலப் பெருமான் கொடுத்தருளினர். இராக்கதர்கள் ஒன்றுசேர்ந்து சூரி

யனுடனே காலையிலும் மத்தியானத்திலும் மாலையி லும் போர்புரிகின்றார்கள். சூரியபகவான் கடவுளருளா ல் அவர்களைத் துரத்திவருகின்றான். இத்திருப்பதி இவ் வளவு மகிமையையுடையது. முனிவர்களும் பலர் இத னைப் பூசித்தார். அகத்தியமாமுனிவர் அவ்விடம் செ ன்று அத்திவ்விய லிங்கத்தைப் பூசித்து அதனருளாற் பெறும்பாக்கியத்தைப் பெற்றுச் சமுத்திரத்தையும் பா னஞ்செய்தார். அத்திவ்வியதீர்த்தத்திலே சூரியகிரணம் படுதலால் அது மிகப்புண்ணியம் பெற்றது. அத்தீர்த்த ம் ஆகாசகங்கையினின்று வந்தது. அத்தீர்த்தத்தில் ஒரு குடம் அல்லது ஐந்துகுடம் தீர்த்தமெடுத்து இரத்தின லிங்கத்துக்கு அபிஷேகஞ்செய்தால் அவன் இரத்தினச லப்பெருமானுடைய திருவருளால் சர்வசௌபாக்கிய மும் பௌத்திரர்களோடு நெடுங்காலம் எல்லாச் சுகங் களையும் அநுபவித்து வாழ்ந்து இறுதியில் சிவலோகஞ் சார்ந்து சிவபெருமானுடைய திருவடிநீழலை யடைவா ர்கள். அயனம், விஷு, சந்திர சூரியகிரகணம் முதலிய புண்ணியகாலங்களில் இச்சூரியதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்பவன் சர்வவித சித்திரங்களையும் பெறுவான். அச் சந்நிதியிலே ஓர் தூபமேனும் தீபமேனும் இடுபவன் சர் வசாம்பிராச்சியங்களையும் அடைவான். பிதா மாதாக் களைநினைந்து அங்கு தருப்பணஞ்செய்யின் அவனுடை யபிதுர்க்கள் சூரியசந்திரருள்ள வளவும் திருப்தியடை

வார்கள். அறிவீர்! இனி அகத்தியமுனிபூசித்த சரித்திரம் சொல்கின்றேன். அன்பினோடு கேட்கக்கடவீர்கள். அச்சரித்திரத்தை ஒருவன் கேட்பானாயின் அப்பொழுதே அவனுடைய பாவமனைத்துமொழிந்து மிகுந்தபுண்ணியமுண்டாகும். இரத்தினகிரீசருடைய திருவருள் கிடைக்கும். ஆதலால் இதனை நாத்திகர்களிடமிருந்து காப்பாற்றவேண்டும் என்றுசொல்லி மேலே கூறுகின்றார்.

ஆதித்தன்பூசித்தசருக்கம் முற்றிற்று.

எட்டாவது

அகத்தியமுனிபூசித்தசருக்கம்.

பெருமைதங்கிய இமயமலையின் வடபாரிசத்திலேயுள்ள புஷ்பபத்திரா நதிக்கரையில் முனிவர்கோமானாகிய அகத்தியமகாமுனிவர் தவஞ்செய்து கொண்டிருந்தார். அப்பொழுது நாரதமுனிவர் அவ்விடம் வந்து அகத்தியனைப்பார்த்து, முனிவர்பெருமானே. நாமிருவரும் தீர்த்தயாத்திரை செய்துவருவோம்; வருவீராகவென்றுசொல்லி அவனையும் அழைத்துக்கொண்டு சென்றார். அவ்வாறு செல்லுமிருவரும் அங்கிருந்து காஸ்மீரம், பிரபாசம், வில்வாரணியம், கேதாரம், காசி, பிரயாகம், அவந்தி, கோமதிமுதலிய திவ்வியதலங்களை

முறையேதரிசித்து வணங்கிக்கொண்டுவருங்கால் நாரத முனிவர் குசலக்ஷேத்திரத்தைத் தரிசிக்கும்பொருட்டுக் கும்பமுனிவரிடத்தே விடைபெற்றுக்கொண்டு சென்றனர். அகத்தியமுனிவர் தாம்தனியே எங்கெங்குஞ் சிவக்ஷேத்திரங்களுள்ளனவோ அங்கெல்லாம்போய் இலிங்கவடிவாய் எழுந்தருளிய சிவபெருமானை அன்பினோடு பூசித்துவணங்கிவந்தார். அப்படிவரும்பொழுது அகத்தியமுனிவர் விந்தியபருவதத்தினருகே ஓர் *பிரேதத்தைக்கண்டு அதன்வரலாற்றைக்கேட்டறிந்து அதன் மீது மிகுந்தகருணைகொண்டு எவ்வாற்றாலேனும் இதற்கோர்நற்கதியுண்டாக்கவேண்டுமெனக்கருதி இதன்பாவத்தையொழிக்கத்தக்க தலம் கடம்பவனமேயாமெனத் துணிந்து பிரேதத்தோடு கடம்பவனஞ்சென்று பிரமதேவன் யாகஞ்செய்து நீராடிய திவ்வியதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி மகாமேன்மையுடைய காவேரிநீரைத் தமது குண்டிகையால்முகந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரமந்திரத்தால் அபிமந்திரணஞ்செய்து அப்பிரேதத்தின்மேலே புரோக்ஷித்தார். உடனே அப்பிரேதம் கடம்பவனத்தின்பெருமையாலும் காவேரிநதியின் மகிமையாலும் குருமுனிவர் தவவலிமையாலும் பிரேதவடிவநீங்கி ஸ்ரீ கைலாசத்திற்குரிய திவ்வியசரீரம்பெற்றுக் கடம்பவனநாதனையும் முற்றிலாமுலையம்மையாரையும் காவேரி

---

* பிரேதமென்பது - ஓர்வகைப்பேயினை.

நதியையும் அகத்தியமுனிவரையும் வணங்கித் துதித்துச் சிவகணங்கள் கொண்டுவந்த திவ்வியவிமானத்தின்மேலேறிக் கைலயங்கிரியைச்சார்ந்தது. அகஸ்தியமுனிவர் அங்குள்ளதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து வடக்கு நோக்கி யெழுந்தருளிய திவ்வியலிங்கவடிவாகிய கடம்பவனநாதனைப்பணிந்து சோலையிலுள்ள மலர்களைக் கொய்து சாத்தித் தூபதீப நைவேத்திய வந்தன தோத்திராதி உபசாரங்களால் சூரியாஸ்த மயனகாலமுதல்பூசித்திருந்தனர். அப்படியிருக்கும்பொழுது மறுநாட்சூரியோதயகாலத்திலே சிவபிரான் அவருக்கு அநுக்கிரகஞ்செய்யும்பொருட்டு அவர்முன்னே திருவுருக்கொண்டு தோன்றினர். அதுகண்ட அகஸ்தியமுனிவர் சிவபிரானுடைய திருவடிகளிலே அடியற்றமரம்போல்விழுந்து நமஸ்கரித்து அருமறைமொழிகளால் துதிசெய்து சிவபெருமானுடைய திருவருளைப்பெற்றுத் தங்கருத்து நிறைவேறினமையைநினைந்து ஆனந்தங்கொண்டு அத்திருப்பதிக்கு உதயபுரியெனப்பெயரிட்டு அதைவணங்கிக்கொண்டு இரத்தினகிரியைத் தரிசிக்கச்சென்றனர். பின் இரத்தினகிரியையடைந்து வேம்பின்கீழ் வேதவிசாரஞ்செய்து கொண்டிருக்கும் மறையோனைக்கண்டு வணங்கி உள்ளன்போடு முறைப்படி உபசரித்து இரத்தினலிங்கத்தின் மேல்புறத்திலே தமது பிரமதண்டத்தால் ஓர்தீர்த்தத்தையுண்டாக்கி அதற்குத்தம்பெயரை

யிட்டு அதில்கங்கையாதி சமஸ்ததீர்த்தங்களையும் ஆவாகனஞ்செய்து அத்தீர்த்தத்திலே தாம் ஸ்நானஞ்செய்தார். அதன்பின் மத்தியானசமயத்திலே இரத்தினகிரீசருக்கு அத்தீர்த்தத்தினல்வேதமந்திரங்களைச்சொல்லி அபிஷேகஞ்செய்து அவ்விடத்திலே கிடைக்கக்கூடிய கனிகிழங்குமுதலியவைகளை நிவேதித்துச் சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்து எழுந்துநின்று "கருணைக்கடலே! உண்மைப்பொருளே ! சர்வலோகநாயகா ! இரத்தினகிரீசனே ! உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம்" என்று துதிசெய்தார். அப்பொழுது கிருபாசமுத்திரமாகிய இரத்தினசலப்பெருமான் கோடிசூரியர் ஒருங்குதித்தாற்போன்றதிவ்வியவடிவத்தோடு அவர்முன்னே எழுந்தருளினர். அதுகண்டமுனிவர் அவருடையதிருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து "சுவாமி ; வேதரகசியமான ஸ்ரீ பஞ்சாக்ஷரமாகுமந்திரத்தைத் தமியேனுக்கு உபதேசித்தருளவேண்டும்" என்றுபிரார்த்தித்தார். சிவபிரான் பரமபாவனமாகிய மலையினுச்சியிலே அராளகேசியம்மையாரோடு சர்வாலங்கார சுந்தரமூர்த்தியாய் வரதாபயமுத்திரைகாட்டி அகத்தியமுனிவருடைய சிரத்தின்மேல் தமது, திருக்கரங்களைவைத்து அநுக்கிரகஞ்செய்து மகாமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைப் பிரணவத்தோடுகூட்டி ஆறெழுத்தாக்கி அங்கதியானமந்திரங்களுடனே உபதேசித்தருளினர். அவ்வாறு முழுமுதற்

பொருளாகிய சிவபிரானிடத்து நேரே மகாமந்திரோப தேசம்பெற்ற அகஸ்தியமுனிவர் அன்றுமுதல் அப்பெருமானுடைய திருவருளால் சீவன்முத்தராயினர். இங்ஙனம் அருள்பெற்ற அம்முனிவர் பின்னும் இரத்தினத்திரிநாதர் திருவடிகளில்வணங்கிச் சிரமேற் கரங்களைக் கூப்பிநின்று "ஓ தேவதேவா! கிருபாசமுத்திரமே! தேவரீர் மத்தியானகாலத்திலே உமது திருமேனியை எனக்குக்காட்டியருளிய காரணத்தால் இனித்தேவரீருக்கு "மத்தியான்னசுந்தரர்" என்று ஓர்திருநாமம் வழங்க வேண்டும். அன்றியும் இன்றுமுதல் பகற்காலத்திலே எவன் இத்திவ்வியலிங்கத்தையும் தேவியாரையும் அன்போடு வழிபடுவானே அவன் முத்தியடையும்படி திருவருள்புரிதல்வேண்டும். ஸ்ரீபஞ்சாக்ஷரசெபஞ்செய்யாதவனுயிருந்தாலும் விபூதிருத்திராக்ஷந் தரியாதவனுயிருந்தாலுமத்தியானகாலத்திலே இத்திவ்வியலிங்கத்தைத் தரிசிப்பானுயின் அவன் தப்பாது சிவலோகத்தையடையும்படி அநுக்கிரகஞ்செய்தல்வேண்டும்" என்றுபிரார்த்தித்துத்துதித்தார். இரத்தினசலப்பெருமான் "அன்பனே! நீ வேண்டியவாறே ஆகுக" என்றருளிச்செய்து வண்டார்குழலம்மையாரோடு அத்திவ்வியலிங்கத்திலே மறைந்தருளினர். அதன்பின் அகத்தியமுனிவர் அவ்விடம் விட்டுச் சங்கரகிரியென்னுந் திருப்பதிக்கேகினர். ஆதலால், கார்த்திகைமாசத்துவரும் ஞாயிற்றுக்கிழமை

களில் இரத்தினசலப்பெருமானுடைய திருச்சந்நிதியிலுள்ள அகஸ்தியதீர்த்தத்திலே மத்தியானத்திலே "உதித்தம்' என்றுதொடங்கிய மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்தால் குட்டம் அபஸ்மாரம் முதலாகியநோய்கள் நீங்கும். அம்மாதத்துவரும்செவ்வாய்க்கிழமைகளிலே பிராதக்காலத்திலே கோமயத்தைச்சிரசிலிட்டு "அக்கினிமூர்தா" என்னும் மந்திரத்தை யுச்சரித்து ஒருதரமேனும் இரண்டுதரமேனும் ஸ்நானஞ்செய்தால் கடன் வறுமைமுதலிய நீங்கிப்பெருஞ்செல்வமுண்டாம். அன்றியுமகிமைபொருந்திய இவ்வகத்தியசரித்திரத்தை அன்பினேடு ஒருமுறையேனும் இருமுறையேனும் படித்தாலும்ஒருவனுடையமிடியுங்கடனும் நீங்கும்.

ஓ! சிவபக்தசிரோமணிகாள்! இவ்விரகசியமானசரித்திரத்தை மேலோர்களாகிய உங்களுக்குச்சொன்னேன். நீங்கள் இதை இயன்றவளாயிற்காத்து நல்லோர்சபையினும் வைதிகாசாரங்குன்ருத சாம்பவர்களிடத்தும் சொல்வீர்களாக எவ்வகைப்பாவங்களேயும் ஒழிக்கும் வல்லமைபெற்ற இவ்வகத்தியசரித்திரத்தை நாடோறும் படிப்போரும் கேட்போரும் தப்பாது சிவபதமடைவர்.

அகத்தியமுனிவர்பூசித்தசருக்க முற்றிற்று.

ஒன்பதாவது

வீரசேனன்பூசித்தசருக்கம்.

நைமிசாரணியமுனிவர்காள்! இன்னும்வீரசேன மகாராஜன்சரித்திரமும் ஒன்றுளது. அதன் விசேடத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள் முன்னாளிலே சிறப்புமிகுந்த தமிழ்நாட்டில் சூரியகுலத்திலே அவதரித்த வீரசேனன் என்னும் ஓரரசன் இருந்தான். அவன் நீதிமுறைதவறாதவன், வருங்கால சம்பவங்களையுணர்ந்தவன், கலைகளனைத்தையுங்கற்றவன், ஏழைகளுக்கு அன்னமளித்துக்காப்பவன், சுற்றத்தாரை ஆதரிப்பவன், எல்லாவுயிர்களிடத்தும் காருண்ணியமுள்ளவன், பகைவரைப் புறங்காட்டியோடச்செய்பவன், கடவுளுடைய திருவடிகளை ஒருநாளுமறவாதவன், உலங்களனைத்தையும் ஓர் கொற்றக்குடையின்கீழ் ஆள்பவன் செல்வத்திலே குபேரனுக்கு ஒப்பானவன் அவ்வரசன் தன்னுயிர்போல் மன்னுயிரைக்காத்து எல்லா அரசரும் தன் அடிகளில்வீழ்ந்திறைஞ்ச அரசியற்றிவருநாளில் ஓர்நாள் ஓர்காபாலிகன் அவனிடத்தேவந்தான். அவனைக்கண்ட அரசன் அவனுக்குவேண்டிய உபசாரங்கள் செய்து அவனிடத்தில் அன்புசெலுத்தியிருக்க அக்காபாலிகன் அரசனுடைய அரண்மனையின்சிறப்பையும் செல்வத்தையும் பெருமையையுங்கண்டு வியப்புற்று அவ

னுக்குப் *பாஷண்டமதத்தை யுபதேசிக்கநினைந்து அவ னைப்பார்த்து "ஓ ! ராஜேந்திரா ! நீர் வேதங்களையு மற்றுள்ளபலநூல்களையும் ஓதியும், பலவேள்விகளை வேட்டும், கடவுளர்களைவழிபட்டும், விரதங்காத்தும், தவங்களிழைத்தும் இதுவரையில் அவைகளால் யாது பயனடைந்தீர் ; அடையவிரும்பியது தான் யாது ; எப் பயன்தரும் ; இவையெல்லாம் உலகத்திலுள்ள சிலர் பொருள்கவரும்பொருட்டுக் கட்டிவைத்த ஓர் கட்டுப் பாடாம். புத்திமானுயுள்ளவன் பிரத்தியக்ஷமாக அநுப விக்கத்தக்க சுகங்களை இழக்க இசைவோனே ? அரசர் களாயினோர் தாம் அநுபவிக்கக்கூடியசுகங்களை அநுப வியாமல்விடார். ஒருவனுக்குண்டாகிய பசியேனும் தாகமேனும் மற்றொருவன் அருந்தலால்தீருமோ? அவ னவன்வயிற்றிற்கு அவனவனன்றோ உண்ணல்வேண் டும். ஆதலால் ஓஅரசனே ! நீர் வீணாகவிரதங்களையு மற்றுள்ள பயனற்றசெயல்களையும் அநுஷ்டிக்கவேண் டாம். ஒருவர் சொல்லையுங்கேளாதீர், நமக்கு இனிமை தரத்தக்க மதுவாலு மாமிசத்தாலும் சரீரத்தை வலி மைபெறச்செய்து அழகிற்சிறந்த மடவாரோடு கட்டி விளையாடிப் பரமானந்தசுகத்தையடைதி. இதைவிட்டு நீ வீணாகவிரதங்காத்து அதனால் உடலைக்கெடுத்து வரு வாயானால் விரைவிலேமரணஞ்சம்பவிக்கும். அவ்வாறு மரணமடைந்துவிட்டால் பின் அவைகளால் என்னசுக

* பாஷண்டமென்பது-உலோகாயதமதத்திலோர் பேதத்தினை.

மனுபவிக்கப்போகின்றீர் ? இந்தச்சரீரமோ நெடுங்கால மிருக்கத்தக்கதன்று உள்ளவரையில் நாம் அநுபவித்த தே நமக்கு இலாபமாம். தநுகரணங்கள் நன்னிலையி லிருக்கும்பொழுதே வேண்டியபோகங்களை நுகர்ந்து விடல்வேண்டும். பின்னராகுகவெனவிருந்தால் நிலை யற்றகாயம் எவற்குனு முபயோகமுருது என்று இவ் வாறு பலதுர்ப்புத்திகளை உபதேசித்தான். அதுகேட்ட அரசன் மதிமயங்கி அவன்சொற்படி அவனேடுகூடி வைதிகாசாரங்களையொழித்தும்,புரோகிதர்களைத்தூரத் துரத்தியும் நற்புத்திபோதிக்கு மந்திரிகளைவிடுத்தும் தீவினைவசத்தால் பாஷண்டமதத்தனய் தன் னுட்டி லுள்ளவேதியர்களையும் யாகசிலர்களையும் அந்நாட்டை விட்டகலும்படிசெய்தும், தேவாலயங்களிலே நித்திய நைமித்திகபூசைகள் நடவாவண்ணந்தடுத்தும், பல ஆலயங்களையிடித்துஞ் சொல்லற்கரிய அக்கிரமங்களைச் செய்து, இளம்பிடியனைய மடவாரோடுகூடிபுரிந்து எப்பொழுதுஞ்சிற்றின்பசாகரத்துள் மூழ்கியிருந்தான். இவன் இங்ஙனமிருக்கச் சிலநாளிலே அந்நாட்டில் மழை பெய்யாதாயிற்று. அதனல் விளைவுகுன்றிற்று விளைவு குன்றவே செல்வங்குறைந்துவிட்டது. மாதவத்தீர் ! வேதங்களும் சத்தியமும் தவமும் அச்சமும் அடக்க முமாகிய இவைகள் எங்குளவோ அங்குதான் இலக்குமி கடாக்ஷமுண்டாம். கடவுட்பூசையில்லாதவிடம் சுடுகா

ட்டுக்குச்சமமாகும். அத்தேசத்திலே அகாலமரண பீடையுண்டாம். இச்சத்தியமொழி பொய்யாதாகலின், அவ்வரசன் சிலநாளிலே நோயினுல்வருந்தி யுயிர்துறந் தான், அந்நாடும் பீடையினுல்மிகவருந்தியது. இறந்த அரசனுக்குச்செய்யவேண்டிய கிரியைகள் எவையும் நடவாதொழிந்ததால் அவன் பிண்டமற்றவனுனுன். பின் அவனை இயமதூதர்கள் பாசத்தினுற் கட்டியிழுத் துக்கொண்டுபோய் எமசந்நிதியில் நிறுத்தினுர்கள். அந் தத்தருமன் அம்மகாபாவியைக் கண்ணினுற்பாராது அவன் செய்தபாவம் ஒழியும்பொருட்டு ரௌரவாதிநர கங்களிலே தள்ளிவருத்தும்படி ஆஞ்ஞாபித்தான். அவ் வாறே யமதூதர்கள் தேவமானத்தால் பதினுயிரவரு டம் நாகத்திலிருத்தி வருத்தினுர்கள். அதன்பின் அவன் விந்தியமலையின் சுற்றுப்புறத்திலே பிரேதவடிவங்கொ ண்டு பார்த்தோர் பயப்படும்படி மிகுகோரமுள்ளவ னுய்ப் பசியினுல்வருந்தி நிற்கநிழலற்று அப்பால்வனமெ ங்கும் அலேந்துதிரிந்து உள்ளும்புறமும் ஒன்றுயெரிய முற்பிறப்பிலே தான்செய்த தீவினையைநினைந்து, என் செய்தேன் ! என்செய்தேன் !! என்று பதறிப்பதறி யல றித்திரிந்தான். இவ்வாறு இவன்திரியும்பொழுது முன் செய்த நல்வினைவந்துகூட உரோமசமுனிவர் அவ்விட த்தெழுந்தருளினுர். பிரேதன், தவநிலையிற்சிறந்தவரு மகாஞானியுமாகிய அம்முனிவனைக்கொன்று தின்ன

நினைந்து அவரருகே ஓடிவர அவருடையதவத்தீ அவனைச்சுடத்தொடங்கியது. அவனாக்கிட்டவியலாமையால் அவன் தூரத்தில்நின்று யாதுசெய்யலாமெனவிழிக்கும்பொழுது அம்முனிவரைத்தரிசித்த புண்ணியவிசேடத்தால் அவனுக்குமுன்னிலைதோன்ற அவன் தூரத்தில் நின்றபடியே அவருடையபாதங்களைப்பணிந்து என்னைக் காத்தருளவேண்டுமென்றுதுதித்தான். உரோமசமுனிவர் அவனுக்கிரங்கி அவன்மீது கிருபாநோக்கஞ்செய்ய அவனுடைய தீவினையாவுமொழிந்தது. பின் உரோமசமுனிவர் அவனைப்பார்த்து "பிரேதமே! நீ முற்பிறப்பிலே வைதிகவொழுக்கத்தைவிடுத்துப் பாஷண்டனாய்த் தீவினைபுரிந்தமையால் புண்ணியமொழிந்து எல்லாப்பெருமையுநீங்கி நெருப்பில் நீரைவார்த்தாற்போல யாவுமாறி நரகிற்சென்று வருந்திப் பின் இப்பொழுது இக்கதியடைந்திருக்கின்றாய். உலகத்திலே சமயாசாரத்தையொழித்தவன் எவனும் நற்கதிபெறான். இவ்வுண்மையையறியாது நீ வீணே கேடிழைத்தாய். ஆயினும் எவ்வகைப்பட்ட மகாபாவிகளையும் ஆதரித்தல் எம்போல்வார்க்குக் கடனாதலால், நீ பிழைத்தற்கு ஓர் உபாயஞ்சொல்லுகின்றேன். அவ்வாறுசெய்வாயாயின் நீ தப்பாது உய்திபெறுவாய். அதாவது, தென்னாட்டிலே தெய்வத்தன்மைபொருந்திய காவேரியாற்றின் தென்கரையிலேயுள்ள இரத்தினகிரிக்குச்செல்வா

யாகில் அதைக்காணும்பொழுதே உன்பிரேதத்தன்மை நீங்கிவிடும். பின் நீ அம்மலையின்மேலேறி இரத்தினகிரீசரையும் வண்டார்குழலம்மையாரையும் அங்குள்ள திருவேம்பையும்வணங்கிக்கொண்டு அத்திவ்வியலிங்கத்தின் வாயுதிக்கிலே மலையின் அடிவாரத்தில் பூமியிலே என்பெயரோடுள்ளதீர்த்தத்தில்ஸ்நானஞ்செய்வாயாகில் தெய்வத்தன்மைபெறுவாய்" என்று கூறினர். அவனும் அவ்வாறே அவ்விடத்தைவிட்டகன்று மிகுந்தவேகத்தோடுசென்று காவேரியாற்றின்கரையையடைந்து அவ்விடத்திலே தவஞ்செய்துகொண்டிருக்கும் பலமுனிவர்களைக்கண்டு மனத்தால்வணங்கித் தூரத்திலே மகாமேருவின்சிகரமாகிய இரத்தினகிரியைக்கண்டு பணிந்தான். அப்பொது அவனுடை பிரேதவடிவம்நீங்கித் திவ்வியரூபம் உண்டாயிற்று. அதன்பின் அவன் இரத்தினகிரியையடைந்து உரோமசதீர்த்தத்தைக்கண்டு அத்தீர்த்தத்திலுள்ள தேவர்களைவணங்கித் தீர்த்தஸ்நானமுறைப்படி "யோப்ரம்ம" என்றுதொடங்கிய மந்திரத்தையுச்சரித்து ஸ்நானஞ்செய்து திருக்கோயிலுள்ளே போய், திருநந்திதேவர், க்ஷேத்திரபாலர், விநாயகக்கடவுள், சுப்பிரமணியக்கடவுள் முதலாயினேரை விதிப்படிபூசித்துப் பின் வேம்படிசென்று அதைப்பலமுறை வலம்வந்து நமஸ்கரித்து இரத்தினசலப்பெருமானையும் சுரும்பார்குழலம்மையாரையும் மணங்கமழும் பூக்களா

லருச்சித்து அங்குகிடைத்தகனிகிழங்குகளை நிவேதித்து வணங்கி உள்ளன்போடு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித் திருந்தான். அப்பொழுது சிவபிரான் அவனுடைய தவத்துக்கு இரங்கி, புலித்தோலுடைதாங்கிய இடை யும், நாகமாலையணிந்த திருமேனியும், வரதாபயமுத் திரை தாங்கிய திருக்கரங்களும் உடையராய், உமாதே வியார் ஒருமருங்கிருப்ப, பூதகணங்கள்புடைசூழ அவ னுக்கெதிரேதோன்றினர். அவன் அதுகண்டு கருணா சமுத்திரமாகிய சிவபிரானுடைய திருவடிக்கமலங்களி லே பெருங்காற்றில் வாழைசாய்வதுபோல விழுந்து நமஸ்கரித்துத் துதித்திருந்தான், உடனே சிவபிரான் தமது திருக்கரங்களால் அவனையெடுத்துத் திருவருள் புரிந்தார். அப்பொழுது அவனுடைய குரூரவடிவநீங்கி முன்போலமன்மதனுக்கொப்பான அரசவடிவமுண்டா யிற்று. இன்னும் பல அற்புதங்கள் அம்மலையில் நிகழ்ந் துள்ளன. சமீபத்திலிருந்தேனும் தூரத்திலிருந்தேனும் இரத்திநசலத்தைநோக்கிநமஸ்கரிப்பவன் அங்கிருந்தே முத்திபெறுவான். பிரேதத்துக்கு முத்திகொடுத்தமை யால் அதுமுதல் அத்தீர்த்தத்திற்குப் பிரேதமோக்ஷதீர் த்தமென்று பெயருண்டாயிற்று. இப்பிரேதமோக்ஷதீர் த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் பின் ஓர்காலத்தும் பிரே தத்தன்மையுண்டாகாது. ஒருவமிசத்தில் ஒருவனேனும் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வானாயின் அவ்வமிசத்

திற்பிறக்கு மனைவரும் மோக்ஷத்தையடைவர். அதில் மகாஸ்நானஞ்செய்தால் அவனைச்சார்ந்த நூற்றெட்டுக் குலங்களிலுள்ளார் முத்திபெறுவர். முன்னர் ஓர்பொழுது பாரத்துவாசமுனிவர் அவ்விடஞ்சென்று தவஞ் செய்து திருவருள்பெற்று மகாலிங்கத்தின் ஈசானதிசையிலே அவ்விடத்தில் ஸ்நானஞ்செய்வோரெவரும் போக மோக்ஷங்களைப்பெறும்படி ஓர் தீர்த்தத்தையுண்டாக்கினர். முன்பு பூமியைப் பிரளயஜலத்திலிருந்து கொண்டு வந்த வராகரூபனாகியவிஷ்ணுமூர்த்தி அக்கினிதிசையில் ஓர் தீர்த்தத்தையுண்டாக்கியிருக்கின்றார். பிரளயகாலத்திலும் இப்புண்ணியபர்வதங்களைந்தும் நசிப்பதில்லை. அவ்வாறிருக்க மகாவிஷ்ணு பூமியை உத்தரித்தகாலத்து அத்தலங்களிற் சில அசைவுற்றதால், சிவபிரான் எழுந்தருளியிருக்குந் திருப்பதிகளை அசைத்தபெருங்குற்ற நீங்க இரத்தினகிரியையடைந்து தவம்புரிந்து அப்பாவ நீங்கப்பெற்று அங்கு இத்தீர்த்தத்தையும் உண்டாக்கி அதன்கரையில் ஓர் ஆலமரத்தை அறிகுறியாகவைத்தனர். அம்மரநீழலிலிருந்து ஓர் அந்தணனுக்கு அன்னதானஞ்செய்தால், கோடிபேருக்கு அன்னமளித்தபலனுண்டாம், விஷ்ணுதீர்த்தத்தில் "விஷ்ணோர்லலாட' என்றுதொடங்கிய மந்திரத்தை யுச்சரித்துக்கொண்டு ஸ்நானஞ்செய்தால் பிதுர்க்கள் திருப்தியுறுவார்கள், இரத்தினகிரியின்வடபுறத்திலே இரண்டுநாழிகைவழிதூரத்

தில் துர்க்காதேவியா லுண்டாக்கப்பட்ட கன்னியாதீர்த்தமிருக்கின்றது. அங்கு துர்க்கிமகிடாசுரனைக்கொன்ற பிரமஹத்திதோஷம் நீங்கப்பெற்ருள். ஓர் அரசமரம் அவ்விடத்தில்அடையாளமாகவிருக்கின்றது. அதற்குத் தெய்வம் சாமுண்டாதேவி. முன்சாமுண்டாதேவிக்குண்டாகிய கொலைப்பாவம் இங்குநீங்கிற்று. மகாநவமியிலே அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் சர்வசித்திகளுமுண்டாம். முனிவர்காள்! உங்களிடத்து இவ்விரகசியசரித்திரத்தைச்சொன்னேன். வேறெவர்க்கும் இது சொல்லத்தக்கதன்று என்றுகூறினர். அப்பொழுது நைமிசாரணியவாசிகள் சூதமுனிவரைநோக்கி, முனிவர்பெருமானே! துர்க்காதேவியின் சரித்திரத்தைக் கேட்க விருப்பமுடையேம். நீர் கூறுங்கதாமிர்தங்களைவையும் ஓர்பொழுதுந் தெவிட்டுவதில்லை. ஆதலால், யாதுகாரணத்தால் துர்க்காதேவி மகிஷாசுரனைக்கொன்றனளென்பதை அடியேங்களுக்குத் தெரிவித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதுகேட்ட சூதமுனிவர்சொல்லுகின்ருர்.

வீரசேனன்பூசித்தசருக்க முற்றிற்று.

பத்தாவது

துர்க்காதேவி அருள்பெற்றசருக்கம்.

முற்காலத்திலே சூரியசாவர்ணியென்னும் பெயருடைய ஓர் மநுநீதியும், தருமசிந்தையும், எவ்வருணத்தாரையுங் காக்துங்குணமும், சிவபெருமானுடைய திருவடிகளில் மாருத அன்பும் உடையவனுயிருந்தான். அவன் ஓர்பொழுதும் சிவபூசைசெய்தன்றிப் புசிப்பதில்லை. சுயம்புலிங்கம் எங்குளதோ அவ்விடத்தைவிட்டகலான். சிவலிங்கத்தையும், சிவகணங்களையும், விபூதிருத்திராக்ஷதாரணம் பஞ்சாக்ஷரசெபமுள்ள அடியார்களைக் காணும்பொழுது சிவபெருமானைக் கண்டதாக நினைந்து தொழுவான். சிவனடியார்கள் விரும்பிய எப்பொருள்களையும் இல்லையென்னுது கொடுப்பான். தன்னரசின் கீழ்வாழும்குடிகள் எவ்விதத்திலும் வருந்தாவண்ணம் காத்துவருவான்.

இவன் இவ்வாறு அரசுபுரியுங்காலத்து உலககண்டகனுய் மகிஷாசுரனென்னும் ஓர் அசுரன்தோன்றி, பதினுயிரஞ் சிங்கவலிமைபெற்று, அந்தணர்களையும் முனிவராசிரமங்களையும் அக்கினிஹோத்திரங்களையும் பீடிக்கத்தொடங்கினுன். இவ்வாறு அவனுல் துன்பமடைந்த அனைவரும் மநுவிடஞ்சென்று முறையிட அவன் அவர்களுக்கு அபயமளித்து, ஸ்ரீகயிலாசஞ்சென்று, அங்கு

தேவர்களும், அரக்கர்களும், அப்சரஸ்ஸுகளும், நாரதர் முதலிய தேவரிஷிகளும், வதிஷ்டர்முதலிய பிர்மரிஷிகளும் புடைசூழ, பலவகைப்பட்ட அழகிய இரத்தினங்களிழைத்துப் புலித்தோலால் மூடப்பட்ட திவ்வியாசனத்தின்மேல் எழுந்தருளியிருக்கும் சதாசிவப்பெருமானைக்கண்டு திருநந்திதேவர் ஆஞ்ஞைபெற்று உள்ளே சென்று அவருடைய திருவடிகளில்விழுந்து பணிந்து தோத்திரஞ்செய்து நின்முன். அப்பொழுது சிவபிரான் அவனைப்பார்த்து "அன்பனே! நீ இங்குவந்தகாரணம் யாது" என்று வினவியருள, அரசன் "எம்பெருமானே! கொடியமகிஷனென்னும் அசுரன் செய்யுந்துன்பத்தை நீக்கியருளவேண்டும்" என்றுபிரார்த்தித்தான். அதுகேட்ட கண்ணுதற்பெருமான் "மநுமன்ன! அவ்வசுரன் எவராலும் செய்தற்கரிய அருந்தவஞ்செய்து, தேவர், அசுரர், அரக்கர், மனிதராதியோருள் ஆடவரால் இறவாதிருக்கும்படி பிரமனிடத்தே வரம்பெற்றுளன். அவன் இன்னும் உலகத்துக்குத்துன்பஞ் செய்யமுயலுவான். ஆதலால் அவனை அழிக்கும்பொருட்டுத்துர்க்கையையனுப்புகின்ரும். நீகவலைநீங்கி உன்னிருப்பிடஞ் சென்று உயிர்களைக்காப்பாயாக" என்று ஆஞ்ஞாபித்தனுப்பிவிட்டுத் தேவியைநோக்கி "நீ துர்க்கைவடிவங்கொண்டு சுத்தகன்னியரோடுசென்று விரைவிலே மகிஷாசுரனைச் சம்மரிக்கக்கடவாய்" எனத்திருவாய்மலர்ந்

தருளினர். உமாதேவியார் சிவபிரான்கட்டளைப்படி பதினெண்கைகளோடு கண்டபொழுதே எவரும் அஞ்சத்தக்க கோரமான துர்க்காரூபம்பொருந்திச் சிங்கமேல் எழுந்தருளிப் பூமியில்வந்து அவ்வசுரன் எங்குளனெனத்தேடி நீலகிரி, விஷகிரி, ஸ்ரீசைலம், கோடகம், சிம்மாத்திரி, கனகாசலம், தசகிரி, பஞ்சானனகிரி, பாண்டவகிரி, தோதாத்திரி, மருதன்னுவா, குவலயம், எழுமலை திருவேங்கட முதலிய இடங்களிற்சென்று சென்றுபார்த்து முடிவிலே வாணமலையில் மகாகோரனுய்த் தூதுவரோடு எருமைவடிவம்பொருந்தி அவ்வசுரனிருத்தலைக் கண்டு " ஓ தீயோனை ! நீ சிறிதும் இரக்கமின்றி உயிர்களை வருத்துங் கொடியோனுகையால் உன்னைச்சங்கரித்து உலகத்தைக்காக்க வந்திருக்கின்றேன். விரைவிலே என்னேடு யுத்தஞ்செய்தற்கு வருவாயாக" என்ன அவ்வசுரன் துர்க்காதேவியைப்பார்த்து மிக இரக்கமுடையான்போல் " நங்காய்! நீ எதன்பொருட்டு இங்குவந்தனை ? ஏன்வீணில் உயிரைத்துறக்கின்ருய். நான் மாதர்களை வருத்துவதில்லை. இவ்விடம்விட்டு விரைந்து செல்லுதி" என்ருன், அப்பொழுது தேவியார் பின்னும் மிகுந்த சினங்கொண்டு சாமுண்டாரூபியாம் " ஓ மகிஷா ! நீ புருஷனன்றுபோலும் ! புருஷனுயின் சற்று என்னேடு எதிர்த்துநின்று யுத்தஞ்செய் பார்ப்போம் என்கண்ணிற்பட்ட நீ இனிப்பிழைப்பதில்லை. தப்பாது

உன் உயிர்போக்கிவிடுவேன்" என்ன இவ்வார்த்தைகள் செவிப்பட்டவுடன் அவன் வெகுண்டு கையிலே கோதண்டமேந்தி ஓர் கொடியபாணத்தைத் துர்க்கையின்மேல்விடுத்தான். தேவியார் அப்பாணத்தைச் சிறிதும் மதியாது தன்வில்லில் ஐந்துபாணங்களைத் தொடுத்து அவன் சரீரத்திலே ஐந்திடங்களில் இரத்தம் ஆறுபோற் பெருகத் துளைக்கும்படி எவினின்றார். அதனால் அவன் சற்றுத்தளர்ந்து பின்னும் துர்க்கையின்மேல் ஏழுபாணங்களைவிடுத்தான். அப்பாணங்கள் கருநெய்தல்மலர் போல் மேல்விழுந்து தேவியாருக்கு யாதுந் துன்பஞ் செய்யாதாயின. பின் தேவியார் அவன்மீது சிலைகளை எய்ய, அவன் அச்சிலைகளைக் கண்டதுண்டமாக்கிக் கோடையிடிபோல்முழங்கி இதோ உன்னுயிரை யொழித்தேனென்றுசொல்லிக் கந்தர்வம் ஆசுரமென்னும் இரண்டு அஸ்திரங்களைத் தேவியார்பால் ஏவினான். தேவியார் மாயாஸ்திரம்விட அது அதனைக்கண்டித்தது. அசுரன் அக்கினியாஸ்திரம் விடுத்தான். தேவியார் வருணாஸ்திரத்தால் அழித்தார். அவன் குபேராஸ்திரம்விடுத்தான். அதனை இராக்ஷதாஸ்திரத்தால் ஒழித்தார். இவ்வாறு எவரும் கிட்ட அணுகுதற்கு அரிய கொடியயுத்தம் இருவரும் செய்யும்பொழுது தேவர்கள் நடுக்கமுற்றுத் துர்க்காபிராட்டியைப்பார்த்து "தேவி! நாங்கள் இவனோடு பலமுறை யுத்தஞ்செய்துபார்த்தோம். இவ்

வாறே இவன் ஆயிரவருடம் யுத்தஞ்செய்தான். இவனை கொல்லத்தக்கதாக நாங்கள் ஒருபாயம்சொல்கின்றோம். அதாவது வாகனமின்றிக் கீழேயிரங்கி அவனுடைய இரண்டுகொம்புகளையும் பற்றியிழுத்துப் பூமியில்விழுத்திக் கழுத்தில் உமது திருவடிகளால் மிதித்தால் உடனே அவன் இறந்துவிடுவான் என்றார்கள். தேவர்கள் சொல்லிய வார்த்தைகளைக்கேட்ட துர்க்கையும் அவ்வாறேசெய்தருள உடனே அசுரன் உயிர்மாண்டனன். அப்படிமாண்ட அசுரன் முன்னுருவமொழிந்து பிரமஹத்திவடிவங்கொண்டு துர்க்காதேவியைப் பின்தொடர்ந்தான். தேவியார் அவன்செய்யுந் துன்பத்தை யொழிக்கும்பொட்டுச் சிவபிரான் எழுந்தருளியிருக்கின்ற தென்றிசையிலுள்ள திருப்பதிகளை நோக்கிச்சென்று இரத்தினசலத்தையடைந்து கண்ணுதற்பெருமானைத் துதித்தலும் அப்பெருமான் அதையொழிக்கும் வலிமைபெற்ற ஓர் ஆயுதத்தை அருளினார். இந்திரன்கையிலிலங்கும் வச்சிராயுதத்திற் கிணையான அவ்வாயுதத்தைப் பெற்ற தேவியார் அதனைப்பிரயோகிக்கும் வழியறியாது. இச்சிற்றாயுதத்தால் அப்பெரும் பிரமஹத்தியை எவ்வாறு அழிப்போமென்று ஐயமுற்றார். எல்லாவுயிர்கட்கும் உயிராய் எங்கும்நிறைந்து அனைவருள்ளத்தையுமறியும் சர்வாந்தரியாமியாகிய அக்கடவுள் துர்க்காதேவியின் உள்ளக்கருத்தை ஓர்ந்து அத்தேவியைப்பார்த்து

"இதனை நீ இலேசாக நினைந்தனை. இவ்வாளால் இம் மலையைப் பிளப்பாயாக" என்றார். அவ்வாறே தேவியார் அவ்வாளினால் அம்மலையைப்பிளக்க அது இரு பிளவுகளாயிற்று. பின்பு தேவியார் அவ்வாயுதத்தால் அசுரஹத்தியையொழித்தனர். அன்றுமுதல் அம்மலையின் மகிமையையறிந்த தேவியார் சத்தமாதரும் ஏனைக்கடவுளருந் தம்மைப்போற்ற விநாயகக்கடவுளும் சுப்பிரமணியக்கடவுளும் தம்முடனிருப்ப, தம்கைவாளாற் பிளவுண்ட அம்மலையின் அருகில் சர்வான்மாக்களுக்கும் அநுக்கிரகஞ்செய்துக்கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். அத்தலத்தில் முதலிலே அவ்வம்மையாருக்கே பூசைசெய்வார்கள். கடவுளால் அருளப்பட்டவாளைக் கையிலேந்தி யிருக்குங்காரணத்தால் அத்தேவியாரைக்கட்க துர்க்கையென்று துதிப்பார்கள்.

இன்னும் இத்தலத்திலே பற்பல அதிசயங்களுள. அவைகளை நூறு நாவுடையோனாலும் சொல்லுவதரிதாயின், ஒருநாவுடைய நான் எவ்வாறுசொல்வேன் இத்துர்க்காசரித்திரத்தைப் படிப்போரும் கேட்போரும் துர்க்காதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வோரும் பிரமஹத்தி நீங்கப்பெறுவர். இப்புராணத்தை இரத்தினகிரியிலிருந்து கேட்கின் இரத்தினசலநாதருடைய பூரண கிருபையுண்டாகும். சூரியன் மகரராசியிற் பிரவேசித்திருக்கும் புண்ணியகாலத்தில் அம்மலையை வலம்வரு

பவர் பூப்பிரதக்ஷணஞ்செய்த பயன்பெற்றுப் பின்னோர் காலத்தும் பிறப்படையார். இங்குள்ள ஒன்பதுதீர்த்தங்களிலும் முறையே ஸ்நானஞ்செய்பவர் பின்பு பிறவார். இத்தலத்தை ஓர்பொழுது தரிசித்தோர் அதன் பின் மற்றெத்தலத்தில் மரிக்கினும் அம்முடிவு காலத்திலே இரத்தினசலப் பெருமான் அவர்களுடைய வலச் செவியில் ஸ்ரீ பஞ்சாக்ஷர உபதேசஞ் செய்தருளுவார். இத்தலத்தில் எழுந்தருளிய வண்டார்குழ லம்மையார் சமேதரான இரத்தினகிரீசர் மிகுந்த கிருபையுடையர். எவ்விடத்திருந்து ஒருவன் இவ்விரத்தினகிரியைநினைப்பினும் அப்பெருமான் அவன் நினைந்தபடி திருவருள் செய்வர். காவேரியின் திவ்விய தீர்த்தத்தை வடித்து ஒரு குடமேனும் இரண்டுகுடமேனும் எடுத்துக்கொண்டு அப்பெருமானுக்கு அபிஷேகஞ் செய்தற்குக் கொடுத்தல் மிகுந்த புண்ணியமாம். அதற்கு மேற்பட்ட புண்ணிய மில்லை. அதன் பயன் இவ்வளவென்று அப்பெருமான் அறிவரேயன்றிப் பிறரறியார். சித்திரா பூரணையன்று காவேரி நீரால் அபிஷேகம் செய்விப்பவர் விரும்பிய சர்வசித்திகளையும் பெறுவர். சித்திரைமாச சுக்கிலபக்ஷத்தில் மகாபிஷேகமும் துவஜாரோகணமும் செய்விப்பவர் இப்பிறப்பிற்றானே அரசராவர். சூரியதேவனால் முன் நடத்தப்பட்ட இரதோற்சவத்தினை அம்மாசத்திற் செய்விப்பவர் பரிசுத்தவடிவம் பெறுவர். மிருகசீரிட

நக்ஷத்திரத்தில் துவஜமேற்றி அத்தநக்ஷத்திரத்திலே சுவாமியை அலங்கரித்து வாத்தியங்க ளனைத்தும்முழங்க பூரணகும்பம் புஷ்பாலங்கார முதலியவைகளோடு பல அலங்காரங்களாற் சிறப்பிக்கப்பட்ட வீதியிலே மலையை வலமாக இரதோற்சவம் செய்விப்பவன் எவனோ அவனே இவ்வுலகத்திலே எல்லாப் புண்ணியங்களையுஞ் செய்தவனுவன். அவன் தன்தாய்தந்தையரின் வமிசங்களோடு திவ்விய விமானமேற்கொண்டு கடவுளர் வசிக்கும் எல்லாலோகங்களையுங்கண்டு முடிவிலே சாயுச்சியம் பெறுவான், சிற்பநூன் முறைப்படி இரதஞ்செய்து ஆகம விதிப்படி பிராணப் பிரதிஷ்டையுஞ் செய்வித்து அதை ஈசுரார்ப்பணஞ் செய்தவன் சிவகணங்களிலொருவனுவன். அவன் யமனையாவது யமலோகத்தையாவது காணவும், அதன் கதையைக் கேட்கவும் மாட்டான். பின்னெருகாலத்தும் பூமியிற் பிறவான் சிவலோகத்திற்றனே வாழ்வன் இன்னும் விரித்துரைப்ப தென்னே. எம்மாசான் அருளியவற்றுட் சில சொன்னேன். உலகத்திலுள்ள பல பிறவிகளிலும் மாநுடராய்ப் பிறத்தலரிது. அப்படிப் புண்ணிய மேலீட்டினுலே பிறந்தவன் எவ்வாறேனு மனம் வாக்குக் காயம் என்னும் திரிகரணங்களால் சிவபெருமானுடைய திருவடிகளை அருச்சிக்கவேண்டும். மற்றிடங்களிலிருந்து ஒருவன் மேருவளவு பொன்னைத் தானஞ்செய்த பல

னும் இங்கிருந்து அணுவளவுபொன் தானஞ்செய்தபல னும் ஒக்கும். இவ்வைந்து மலைகளிலும் சர்வலோக நாயகராகிய சிவபிரான் அம்மையாரோடு எஞ்ஞான் றும் அடியார்கள் வழிபட்டு உய்யுமாறு திருவுருக்கொ ண்டு எழுந்தருளியிருக்கின்றார். இம் மான்மியத்தைக் கேட்பவர் கல்வி, செல்வம், ஆயுள், ஆரோக்கியம், சௌ பாக்கிய முதலியயாவும் மென்மேலும் பெருகப்பெற் றுத் தாம் விரும்பிய சித்திகளனைத்துங் குறைவின்றிப் பெறுவார்கள்.

துர்க்காதேவி அருள்பெற்ற சருக்க

முற்றிற்று.

இரத்தினசலமான்மியமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

இரத்தினசலநாதன் றிருவடிவாழ்க.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

மரகதாசலமான்மியம்.

இஃது,

கடம்பர்கோயில் - முத்துவீரப்பமுதலியாரென்னும்

பொன்னம்பலமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

பிர்மஸ்ரீ - கு. சீனிவாசசாஸ்திரியாரவர்கள் முன்னிலையில்

யாழ்ப்பாணம் - வண்ணை

தாமோதரம்பிள்ளையவர்களியற்ற

அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு

ஷை பொன்னம்பலமுதலியாரவர்களால்

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1891.

சிவமயம்.

சாத்துகவி.

சென்னைநகர்ப்பண்டிதை

ஸ்ரீமதி. ம-மனோன்மணியம்மாள்

இயற்றிய

பதினூன்கு சீர்க்கழிநெடில் விருத்தம்.

சீர்மிகுத்த வடமொழியி லேய்ந்தவிங் கோய்மலையின்
சீர்த்தியுறு மான்மி யத்தைச்
சிதம்பரத்து வருசினி வாசசாஸ் திரியவர்கள்
செய்திட்ட மொழிபெ யர்ப்பைப்
பேர்மிகுத்த பிரபலயாழ்ப் பாணமதி னிலவுறூஉம்
பெட்பார்ந்த வண்ணை நகரிற்
பிறங்குதா மோதரநற் பெரும்புலவன் செந்தமிழிற்
பேசரிய நயங்க ளுடனே
யேர்மிகுத்த வியனமைத்த நூலதனை முத்திரித்திங்
கெல்லோருங் காண வைத்தா
னெழில்கடம்பர் கோயில்வளர் வேளாளர் குலமதனி
லேய்ந்தசற் சைவ மணியாம்
பார்மிகுத்த சிவபத்தி வாய்மைபொறை யீகைகுணம்
பரிவுபல வாய்ந்து நின்றோன்
பகர்முத்து வீரப்ப னெனவழைத் திடுபொன்னம்
பலனுன பான்மை யோனே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்

விடயசூசிகை.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

மரகதாசலமென்னும்

ஈங்கோய்மலைத்தேவாரம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்

பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேன்மத்தமலர்சூடித்
தேனொத்தனமென்மொழிமான்விழியாடேவிபாகமாக்
கானத்திரவிலெரிகொண்டாடுங்கடவுளுலகேத்த
வேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (௧)

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகாடிடமாகக்
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரமனு
ரேலத்தொடுநெல்விலவங்கமழுமீங்கோய்மலையாரே. (௨)

கண்கொணுதலார்கறைகொண்மிடற்றார்கரியினுரிதோலார்
விண்கொண்மதிசேர்சடையார்விடையார்கொடியார்வெண்ணீறு
பெண்கொடிருமார்பதனிற்பூசும்பெம்மானெமையாள்வா
ரெண்குமரியுந்திரியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (௩)

மறையின்னிசையார்நெறிமென்கூந்தன்மலையான்மகளோடுங்
குறைவெண்பிறையும்புனலுந்நிலவுக்குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங்கழலுமார்ப்பப்படுகாட்டெரியாடு
மிறைவர்சிறைவண்டறைபூஞ்சாரலீங்கோய்மலையாரே. (ச)

நொந்தசுடலைப்பொடிநீறணிவார்நுதல்சேர்கண்ணினார்
கந்தமலர்கள்பலவுநிலவுகமழ்புன்சடைதாழப்
பந்தோண்விரலாள்பாகமாகப்படுகாட்டெரியாடு
மெந்தமடிகள்கடிகொள்சாரலீங்கோய்மலையாரே. (ரு)

நீருரகலமுடையார்நிரையார்கொன்றையரவோடு
மாரூர்சடையாரயில்வெங்கணையாலவுணர்புரமூன்றுஞ்
சீருவெரிசெய்தேவர்பெருமான்செங்கணடல்வெள்ளை
யேறூர்கொடியாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (சு)

வினையாயினதீர்த்தருளேபுரியும்விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேன்மதியஞ்சூடுநம்பானலமல்கு
தனையார்கமலமலர்மேலுறைவான்றலையோடனலேந்து
மெனையாளுடையானுமையாளோடுமீங்கோய்மலையாரே. (எ)

பரக்கும்பெருமையிலங்கையென்னும்பதியிற்பொலிவாய
வரக்கர்க்கிறைவன்முடியுந்தோளுமணியார்விரறன்னா
னெருக்கியடர்த்துநிமலாபோற்றியென்றுநின்றேத்த
விரக்கம்புரிந்தாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (அ)

வரியார்புலியினுரிதோலுடையான்மலையான்மகளோடும்
பிரியாதுடனாயாடல்பேணும்பெம்மான்றிருமேனி
யரியோடயனுமறியாவண்ணமளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானீங்கோய்மலையாரே. (கூ)

பிண்டியென்றுபெயராநிற்கும்பிணங்குசமணரு
மண்டைகலனக்கொண்டுதிரியுமதியிறோரு
முண்டிவயிறருரைகள்கொள்ளாதுமையோடேனுகி
யிண்டைச்சடையானிமையோர்பெருமானீங்கோய்மலையாரே

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னு
ளழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகளைவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிதிருநாமம்—மரகதாசலர்

தேவிதிருநாமம்—மரகதாம்பிகை.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

கடைச்சங்கத்து நக்கீரதேவ நாயனுர்

அருளிச்செய்த

திருவீங்கோய்மலையெழுபது.

திருச்சிற்றம்பலம்.

அடியுமுடியுமரியுமயனும்
படியும்விசும்பும்பாய்ந்தேறி - நொடியுங்கா
லின்னதெனவறியாவீங்கோயேயோங்கார
மன்னதெனநின்ருன்மலை. (க)

அந்தவிளமாக்குழவியாயம்பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன்ருேய்த்துக்குறமகளிர் - சந்தி
னிலைவளைக்கையாற்கொடுக்குமீங்கோயேமேரு
மலைவளைக்கைவில்லிமலை (உ)

அம்பவளவாய்மகளிரம்மனைக்குந்தம்மனையைச்
செம்பவளந்தாவென்னச்சீர்க்குறத்தி - கொம்பி
னிறுதலையினுற்கிளைக்குமீங்கோயேநம்மேன்
மறுதலைநோய்தீர்ப்பான்மலை (ஙு)

அரிகரியைக்கண்டவிடத்தச்சலிப்பாயோடப்
பிரிவரியதன்பிடியைப்பேணிக் - கரிபெரிதுங்
கையெடுத்துநீட்டிக்கதஞ்சிறக்குமீங்கோயே
மையெடுத்தகண்டன்மலை (ச)

அரியுழுழைவையுமாளியுமேயீண்டிப்
பரியிட்டுப்பன்மலர்கொண்டேறிச் - சொரிய
வெரியாடிகண்டுவக்குமீங்கோயேகூற்றந்
திரியாமற் செற்றான் சிலம்பு (ரு)

ஆளிதொடரவரிதொடரவாங்குடனே
வாளிகொடுதொடருமாக்குறவர் - கோளி
னிடுசிலையினுற்புடைக்குமீங்கோயேநம்மேற்
கொடுவினைகள்வீட்டுவிப்பான்குன்று. (சா)

இடுதினைதின்வேழங்கடியக்குறவர்
வெடிபடுவெங்கவண்கலூன்ற - நெடுநெடென்ன
நீண்டகழைமுத்துதிர்க்குமீங்கோயேயெங்குமணி
பூண்டகழையேறிபொருப்பு. (எ)

ஈன்றகுறமகளிர்க்கேழைமுதுகுறத்தி
நான்றகறிக்கேறசலைநற்கிழங் - கூன்றுவைத்
தென்னன்;னையுண்ணென்றெடுத்துமாக்குமீங்கோயே
மின்னன்னசெஞ்சடையான்வெற்பு. (அ)

ஈன்றகுழவிக்குமந்தியிருவரைமே
னூன்றநறவத்தைத்தானணுகித் - தோன்ற

விரலாற்றேன்றோய்த்தூட்டுமீங்கோயேநம்மேல்
வாராநோய்தீர்ப்பான்மலை. (சு)

உண்டிருந்ததேனையறுபதங்களூடிப்போய்ப்
பண்டிருந்தயாழ்முரலப்பைம்பொழில்வாய்க்-கண்டிருந்த
மாமயில்களாடிமருங்குவருமீங்கோயே
பூமயிலைதாதைபொருப்பு. (க0)

ஊடிப்பிடியுறங்கவொண்கதலிவண்கனிக
ளாடிக்களிறுநயந்தெடுத்துக் - கூடிக்
குணமருட்டிக்கொண்டாடுமீங்கோயேவானோர்
குணமருட்டுங்கோளரவன்குன்று. (கக)

எய்யத்தொடுத்தோன்குறத்திநோக்கேற்றதெனக்
கையிற்கணைகளைந்துகன்னிமான் - பையப்போ
வென்றன்றுபாவனைசெயீங்கோயேதூங்கெயில்கள்
சென்றன்றுவென்றான்சிலம்பு. (கஉ)

ஏழையிளமாதேயென்னொடுநீபோதென்று
கூழைமுதுவேடன்கொண்டுபோய் - வேழ
விணைக்குவால்வீட்டுவிக்குமீங்கோயேநந்தம்
வினைக்குவால்வீட்டுவிப்பான்வெற்பு. (கங)

ஏனமுழுதபுழுதியினமணியைக்
கானவர்தம்மக்கள்கனலென்னக் - கூண
மறுக்கங்கதிர்வெதுப்புமீங்கோயேநம்மேன்
மறுக்கங்கடீர்ப்பான்மலை (கச)

ஏனங்கிளைத்தவினைப்பவளமாமணிகள்
கானலெரிபரப்பக்கண்டஞ்சி - யானை
யினமிரியமுல்லைநகுமீங்கோயேநம்மேல்
வினையிரியச்செற்றுகந்தான்வெற்பு. (கரு)

ஒருகணையுங்கேழலுயிர்செகுத்துக்கையி
லிருகணையுமானைமேலெய்ய - வருகணையு
மாளரிதானோடவரிவெருவுமீங்கோயே
கோளரிக்குங்காண்பரியான்குன்று. (கசு)

ஓங்கிப்பரந்தெழுந்தவொள்ளிலவத்தண்போதைத்
தூங்குவதோர்கொள்ளியெனக்கடுவன் - மூங்கிற்
றழையிறுத்துக்கொண்டோச்சுமீங்கோயேசங்கக்
குழையிறுத்தகாதுடையான்குன்று. (கஎ)

ஓடுமுகிலையுகிராலிறவூன்றி
மாடுபுகவான்கைமிகமடுத்து - நீடருவி
மாச்சியமுண்டுமெனங்களிக்குமீங்கோயே
கோச்சியங்காண்பரியான்குன்று. (கஅ)

கண்டகனிநுகர்ந்தமந்திகருஞ்சுனைநீ
ருண்டுகுளிர்ந்திலவென்றாடிப்போய்க் - கொண்ட
லிறைக்கீறிவாய்மடுக்குமீங்கோயேநான்கு
மறைக்கீறு கண்டான்மலை (கசு)

கருங்களிற்றின்வெண்கொம்பாற்கல்லுரல்வாய்நல்லார்
பெருந்தினைவெண்பிண்டியிடிப்ப - வருங்குறவன்

கைக்கொணருஞ்செந்தேன்கலந்துண்ணுமீங்கோயே
மைக்கொணருங்கண்டன்மலை. (உ0)

கனையபலாங்கனிகள்கல்லிளையர்தொக்க
நனையகலத்துரத்திலேந்தி - மனைகள்
வரவிரும்பியாய்பார்க்குமீங்கோயேபாங்கார்
குரவரும்புசெஞ்சடையான்குன்று. (உக)

கடக்களிறுகண்வளரக்கார்சிறவண்டார்ப்பச்
சுடர்க்குழையார்பாட்டெழவுகேட்டு - மடக்கிளிகள்
இதந்தெரிந்துரைக்குமீங்கோயேயாற்கீழ்நால்
வேதந்தெரிந்துரைப்பான்வெற்பு (உஉ)

கறுத்தமுலைச்சூற்பிடிக்குக்கார்யானை சந்த
மிறுத்துக்கைநீட்டுமீங்கோயே - செறுத்த
கடதடத்ததோலுரிவைக்காப்பமையப்போர்த்த
விடமிடற்றினன்மருவும்வெற்பு. (உங)

கங்குலிரைதேருங்காகோதரங்கேழற்
கொம்பினிடைக்கிடந்தகூர்மணியைப்-பொங்கி
யுருமென்றுபுற்றடையுமீங்கோயேகாமன்
வெருவொன்றக்கண்சிவந்தான்வெற்பு (உச)

கலவிக்களிறணைசந்தகாற்றெங்குங்கா
திலைகைக்கொண்டேந்திக்கான்வீச - வுலவிச்சென்
றொண்பிடிகாற் றேற்றுகக்குமீங்கோயேபாங்காய
வெண்பொடிநீற்றான்மருவும்வெற்பு. (உரு)

கன்னிப்பிடிமுதுகிற்கப்பருவமுட்பருகி
யன்னைக்குடிவரலாறஞ்சிப் - பின்னரோ
யேன்றருக்கிமாதவஞ்சேயீங்கோயேநீங்காத
மான்றரித்தகையான்மலை. (உ௬)

கள்ளமுது மறவர் காட்டகத்து மாவேட்டை
கொள்ளென்றழைத்தகுரல்கேட்டுத்-துள்ளி
யினக்கவலைபாய்ந்தோடுமீங்கோயேநந்த
மனக்கவலைதீர்ப்பான்மலை. (உ௭)

கல்லைப்புனமேய்ந்துகார்க்கொண்டைத்தார்போர்த்துக்
கொல்லையெழுந்தகொழும்புறவின் - முல்லையங்கள்
பல்லரும்புமொய்த்தீனுமீங்கோயேழுவெயிலுங்
கொல்லரும்பக்கோல்கோத்தான்குன்று. (உ௮)

கல்லாக்குரங்குபளிங்கிற்கனிகாட்ட
வெல்லாக்குரங்குமுடனீண்டி - வல்லே
யிருந்துகிராற்கற்கிளைக்குமீங்கோயேமேனிப்
பொருந்தவராப்பூண்டான்பொருப்பு. (உ௯)

கண்கொண்டவிர்மணியினுப்பட்கருங்கேழல்
வெண்கோடுவீழ்ந்தவியன்சார - றண்கோ
டிளம்பிறைசேர்வான்கடுக்குமீங்கோயேவேதம்
விளம்பிறைசேர்வான்கடுக்கும்வெற்பு. (௩௦)

காந்தளங்கைத்தலங்கள்காட்டக்களிமஞ்ஞை
கூந்தல்விரித்துடனேகூத்தாடச் - சாய்ந்திரங்கி

யேர்க்கொன்றைபொன்கொடுக்குமீங்கோயேசெஞ்சடைமேற்
கார்க்கொன்றையேன்றான்கடறு. (௬௧)

குறமகளிர்கூடிக்கொழுந்தினைகள்குத்தி
நறவமாக்கஞ்சகங்கணூடிச் - சிறுகுறவர்
கைந்நீட்டியுண்ணக்களித்துவக்குமீங்கோயே
மைந்நீட்டுங்கண்டன்மலை. (௬௨)

கூழைமுதுமந்திகோல்கொண்டுதேன்பாய
வேழையிளமந்திசென்றிருந்து - வாழை
யிலையாற்றேனுண்டுவக்குமீங்கோயேயிஞ்சி
சிலையாற்றான்செற்றான்சிலம்பு. (௬௩)

கொல்லையிளவேங்கைக்கொத்திறுத்துக்கொண்டுசுனை
மல்லைநீர்மஞ்சனமாநாட்டிக்கொண் - டொல்லை
யிருங்கைக்களிறேறு மீங்கோயேமேனோய்
வருங்கைக்களைவான்மலை. (௬௪)

கொவ்வைக்கனிவாய்க்குறமகளிர்கூந்தல்சேர்
கவ்வைக்கடிபிடிக்குங்காதன்மையாற் - செவ்வை
யெறித்தமலர்கொண்டுவிடுமீங்கோயேயன்பர்
குறித்தவரந்தான்கொடுப்பான்குன்று. (௬௫)

கொடுவிற்சிலைவேடர்கொல்லைபுகாமற்
படுகுழிகள்கல்லுதல்பார்த்தஞ்சி - நெடுநாகந்
தண்டேன்றிச்செல்லுஞ்சீரீங்கோயேதாழ்சடைமேல்
வண்டேன்றுந்தாரான்மலை. (௬௬)

கோங்கினரும்பழித்தகொங்கைக்குறமகளிர்
வேங்கைமணிநீழல்விளையாடி - வேங்கை
வரவதனைக்கண்டிரியுமீங்கோயேதீங்கு
வரவதனைக்காப்பான்மலை. (ருஎ)

சந்தனப்பூம்பைந்தழையைச்செந்தேனிற்றோய்த்தியானை
மந்தண்மடப்பிடியின்வாய்க்கொடுப்ப - வந்ததன்
கண்களிக்கத்தான்களிக்குமீங்கோயேதேங்காதே
விண்களிக்கநஞ்சுண்டான்வெற்பு (ருஅ)

சந்திநிலையதனுட்டண்பிண்டிதேன்கலந்து
சொந்தியினிதுண்ணக்குறமகளிர் - மந்தி
யிளமகளிர்வாய்க்கொடுத்துண்ணீங்கோயேவெற்பின்
வளமகளிர்பாகன்மலை (ருகூ)

சாரற்குறத்தியர்கடண்மருப்பால்வெண்பிண்டி
சோத்தருக்கிமதுக்கலந்து - வீரத்
தமரினிதாவுண்ணுஞ்சீரீங்கோயேயின்பக்
குமரன்முதுதாதையார்குன்று. (சo)

தாயோங்கித்தாமடருந்தண்சாரலொண்கானம்
வேயோங்கிமுத்தமெதிர்பிதுங்கித் - தீயோங்கிக்
கண்கன்றித்தீவிளக்குமீங்கோயேசெஞ்சடைமேல்
வண்கொன்றைத்தாரான்வரை. (சக)

செடிமுட்டச்சிங்கத்தின்சீற்றத்திக்கஞ்சிப்
பிடியட்டமாக்களிறுபேர்ந்து - கடிமுட்டி

யென்னேசியென்னுஞ்சீரீங்கோயேயெந்தமலி
பொன்னேரனையான்பொருப்பு. (சஉ)

சுனைநீடுதாமரையின்ருதளாந்துசோதிப்
புனைநீடுபொன்னிறத்தவண்டு - மனைநீடி
மன்னிமணம்புணருமீங்கோயேமாமதியஞ்
சென்னியணிந்தான்சிலம்பு. (சங)

செந்தினையின்வெண்பிண்டிபச்சைத்தேனூற்குழைத்து
வந்தவிருந்தூட்டுமெணிக்குறத்தி - பந்தியாத்
தேக்கிலைகளிட்டுச்சிறப்புரைக்குமீங்கோயே
மாக்கலைகள்வைத்தான்மலை. (சச)

தடங்குடைந்தகொங்கைக்குறமகளிர்தங்க
ளிடம்புகுந்தங்கின்னறவமாந்தி - யுடன்கலந்து
மாக்குரவையாடிமகிழ்ந்துவருமீங்கோயே
கோக்குரவையாடிகொழுங்குன்று. (சரு)

தாமரையின்ருடகைத்ததாமரைகடாடகையத்
தாமரையிற்பாய்ந்துகளுந்தண்புறவிற் - ருமரையி
னீட்டம்புலிசிதறுமீங்கோயேயெவ்வுயிர்க்கும்
வாட்டங்கமர்ப்பான்மலை. (சசு)

தெள்ளகட்டபூஞ்சுனையதாமரையின்றேமலர்வாய்
வள்ளவட்டப்பாழிமடலேறி - வெள்ளகட்ட
காராமைகண்படுக்குமீங்கோயேவெங்கூற்றைச்
சேராமற்செற்ருன்சிலம்பு (சஎ)

தேன்மருவும்பூஞ்சுனைக்கட்புக்குச்செழு (சஅ)
(சகூ) (ருo) (ருக) (ருஉ) (ருங) (ருச) (ருரு) (ருசு)
(ருஎ) (ருஅ) (ருகூ) (சுo) (சுக)

கலைகள்வருவனகள்கண்டு - சிலையை
யிருந்தெடுத்துக்கொறெரியுமீங்கோயேமானைப்
புரிந்திடத்துக்கொண்டான்பொருப்பு. (சுஉ)

மத்தத்கரிமுகத்தைவாளரிகள்பீறவொளிர்
முத்தம்பனிவிகர்க்குமொய்ம்பிற்று - லத்தகைய
வேனற்புனநீடுமீங்கோயேதேங்குபுனல்
கூனற்பிறையணிந்தான்குன்று. (சுங)

மந்தியினங்கண்மணிவரையினுச்சிமேன்
முந்தியிருந்துமுறைமுறையே - நந்தி
யனைந்தாடியாலிக்குமீங்கோயேகூற்றம்
வனைந்தோடச்செற்றான்மலை. (சுச)

மந்திமகவினங்கள்வண்பலவினெண்சுனைகண்
முந்திப்பறித்தமுறியதனுட் - சிந்திப்போய்த்
தேனுறுபாயுஞ்சீரீங்கோயேசெஞ்சடைமேல்
வானுறுவைத்தான்மலை. (சுரு)

முள்ளார்ந்தவெள்ளிலவமேறிவெறியாது
கள்ளார்ந்தபூப்படியுங்கார்மயிரு - ளெள்ள
ரெரிநடுவுட்பெண்கொடியாரேய்க்குமீங்கோயே
புரிநெடுநூன்மார்பன்பொருப்பு. (சுசு)

வளர்ந்தவிளங்கன்னிமாங்கொம்பின்கொங்கை
யளைந்துவடுப்படுப்பான்வேண்டி - யிளந்தென்ற
லெல்விப்புகதுழையுமீங்கோயேதீங்கருப்பு
வில்லிக்கிக்கூற்றானான்வெற்பு. (சுஎ)

வானமதிதடவலுற்றவிளமந்தி
கானமுதுவேயின்கண்ணேறித் - தானங்
கிருந்துயரக்கைநீட்டுமீங்கோயேநம்மேல்
வருந்துயரந்தீர்ப்பான்மலை. (சுஅ)

வேய்வனத்துள்யானைதினைகவரவேறிருந்து
காய்வனத்தேவேடன் கணைவிசைப்ப - வேயணைத்து
மாப்பிடிமுன்னோட்டுமீங்கோயேமறைபரவு
பூப்பிடிபொற்றாளான்பொருப்பு (சுகூ)

வழகிதழ்க்காந்தண்மேல்வண்டிருப்பவொண்டீ
முழுகியதென்றஞ்சிமுதுமந்தி - பழகி
யெழுந்தெழுந்துகைநெரிக்குமீங்கோயேதிங்கட்
கொழுந்தெழுந்தசெஞ்சடையான்குன்று. (எ0)

திருச்சிற்றம்பலம்.

திருவீங்கோய்மலையெழுபது முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மரகதாசலமான்மியம்.

விநாயகர்துதி.

ஓங்கொளியதவளமதிக்கீறன்னவொருமருப்பும்
வீங்குமணிச்சிலம்பொலிகள்மறைப்பொருளைவிளக்குமிரு
பூங்கழலுமருள்விழியும்போதமதம்பொழிகவுளுந்
தாங்குகயமுகனரியசரணமலர்தலைக்கொள்வாம்.

மரகதாசலநாதர்துதி.

பெருவாரியொருசிறியகரத்தடக்கி யுட்கொண்டகுறியமுனிபீடார்ஞானத், திருவாரவீவடிவுகொடுகொனிற்றேமலர்கடொறுசென்றுசென்றுவாங்கி, யுருகாமெய்யன்பினொடுதிருமுடியிலுகுத்திறைஞ்சியருச்சிக்கவுமைமாதோடு, பெருமானிலமர்ந்தருள்செய்மரகதத்துப்பெம்மானையடிவணங்கிப்பிறவிதீர்ப்பாம்.

மரகதாம்பிகைதுதி.

எத்திறத்திலெம்பெருமானெழுந்தருள்வனத்திறமேயேகமாகிப், புத்தமிர்தமொழியுடையாள்பூங்கொடியாளெனப்புலவர்புகழநின்ற, சத்தியுலகனைத்துமருள்மரகதாம்பிகையன்னைசரணந்தூய, புத்தியிலாவெனதுளத்துமன்னியன்பாற்போதவருள்பூக்குமன்றே.

முதலாவது

தலவிசேடச்சருக்கம்.

முன்னர் ஓர்காலத்திலே தவவலிமையிற் சிறந்தவரும் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுக் கல்லால நீழலில் அருளேவடிவமாக எழுந்தருளிய தக்ஷிணாமூர்த்தி நான்மறையின் உட்பொருளை உபதேசிக்கச் சீடராய் அருகிருந்து கேட்டருளிய பெருமை பெற்றவருமாகிய சநற்குமாரமுனிவர், திருநந்திதேவரை வணங்கி, சிலாதமுனிவர் செல்வக்குமாரராகிய நந்தியெம்பெருமானே! உலகெலாம் வணங்கும் வானவர்முதலே! அறிஞர்கோவே! முன் தேவரீர் அடியேனுக்குச் சிறிதாக எடுத்துரைத்தமரகதாசலமான்மியத்தை இப்பொழுது நன்றாக அறியவேண்டுமென்று பேராவலுற்றேன். ஆதலால், கிருபைகூர்ந்து இப்பொழுது அதனை விரிவாக அருளிச்செய்து அடியேனை ஆட்கொள்ளல் வேண்டுமென்று பிரார்த்தித்தார். அதுகேட்ட நந்திதேவர் சநற்குமார முனிவரைநோக்கி அருந்தவமுனிவர் அடிபணிந்தேத்தும் பெரும்புகழ்பெற்ற சநற்குமாரரே! நீர்கேட்டவாறே அம்மரகதாசல மான்மியத்தினை இப்பொழுது விரிவாக உமக்கு எடுத்துரைக்கின்றேன். அதனை அன்போடு கேட்பீராயின் அதனாற் பெறும்பேறு பெறலாமென்று கூறுவாராயினர்.

முந்திய கிருதயுகத்தில் மகாவலிமைபெற்ற ஆதிசேடனும் வாயுதேவனும் தம்முள்ளே வீரம்பேசித் தத்தம் ஆற்றலை அளவிடக்கருதினராய், அவருள்ளே ஆதிசேடன் மேருவினருகிற்சென்று தன் ஆயிரம் பணமுடிகளால் அதனைமூடி வாயுதேவனைத் தென்றிசை செல்லவொட்டாது தடுத்துநின்றான். அதனால் உலகத்திலே வாயு சஞ்சாரமற்றுப் பிராணிகளெல்லாம் அழியத்தொடங்கின. அதுகண்ட தேவர்கள் ஒருங்குகூடிச் சேடனருகிற்சென்று அவன் ஆற்றலுக்குப் பலவாறு வியந்து வாயு உலாவுதற்குச் சிறிதுவழி விடவேண்டுமென்று வேண்டுதலும், சேடனனவன் அவர்கள் வேண்டுகோளுக்கு இசைந்து தனது பணமுடிகளில் ஒன்றைச் சற்றே ஒடுக்கிச் சிறிதுவழிவிட்டான். உடனே வாயுதேவன் தன் முழுவேகத்தோடு அவ்வழியாகப் புகுந்து மகாமேருச்சிகரங்களில் ஐந்துசிகரங்களைப் பிடுங்கிக்கொண்டு தென்றிசை நோக்கிச்சென்றான். அப்பொழுது அம்மேருவின் சிகரங்கள் ஐந்தும் பரமேஸ்வர சங்கற்பத்தால் காவேரிக்கரையிலுள்ள புண்ணிய தீர்த்தங்களிலும் முனிவராசிரமங்களிலும் வீழ்ந்தன. அச்சிகரங்களுள் சஞ்சீவி முளைத்தற்கிடமாம் மேன்மைபெற்றோங்கி விளங்கும் ஓர்சிகரமே மரகதாசலமெனப்படுவது. அம்மலையின்கண்ணே சேடனது அம்சத்தால் ஓர்புளியமரம் முளைத்திருக்கின்றது. அதன்பெருமை

அளவிடற்பால தன்று. அதனைச் சிவரூபமாமென்றும் சொல்வார்கள். யாரேனும் அவ்விருக்ஷத்தைக் கண்டு அன்போடு வணங்குவாராயின் அவர் தாம்விரும்பிய எல்லாப்பேறுகளையும் தப்பாது எய்துவர். காவேரியாற்றின் வடகரையிலே தேவர்முதலாயினோர் வந்துபோற்ற மகிமைபொருந்தி விளங்கும் புண்ணியபதியாகிய அம்மரகதாசலத்திலே பிரமதேவன் முன்பு ஓர்காலத்துச் சிவபெருமானை வழிபட்டு அவரநுக்கிரகத்தால் சிருஷ்டியதிகாரம்பெற்றுச் சத்தியலோக வாழ்வை யெய்தினன். அதுவன்றிப் பின்பு ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தியும் அவ்விடத்திலே எழுந்தருளியிருக்கும் மரகதாசலப்பெருமானையும், மரகதாம்பிகையையும் பூசித்து அத்தவப்பயனால் உலகம்புரக்கும் பெருவாழ்வுபெற்று வைகுந்தபதிக்கு இறைவராகினர். ஓர்காலத்திலே யமுனையானவள் அப்பதியிலே பரமேஸ்வரனை வழிபட்டு அருள்பெற்றனள். அதுவுமன்றிக்கண்ணுவர், உரோமசர்முதலாகிய இருடிகள் பலர் இங்கு ஈசுவரனைப்பூசித்துத் தாஞ்செய்த கொடிதாகிய குருத்துரோக மகாபாவத்தை ஒழித்து நற்கதிபெற்றார்கள். இன்னும் அதன்பெருமைகள் அளவிறந்தனவுள. நான் வலிமைபெற்றிலேன், ஆயினும் உமது விருப்பம் நிறைவுபெற ஏதோ நான்அறிந்தவாறில் சொல்லுகின்றேன், அன்பினோடு கேட்பீராகவென்று மேலும் கூறத்தொடங்கினர்.

கேளீர், சநற்குமாரமுனிவரோ! சென்ற மநுவந்தரத்து நிகழ்ந்த கிருதயுகத்திலே கமலயோனியாகிய பிரமதேவன் தமக்கு அவ்வப்பொழுது உண்டாகும் இரஜோகுணம் ஒழிதற்பொருட்டியாது செய்யத்தகுமென்றுநெடுங்காலம் ஆலோசித்துப்பிறிதொன்றுந் தோன்றுமல் பூவுலகத்திற்சென்று தவமிழைத்தலே தக்கதாமென நிச்சயித்து இந்நிலவுலகில் புண்ணிய சொரூபமாய் விளங்கும் இம்மரகதமலையை அடைந்து புளியமரத்துநீழலில் வீற்றிருந்து யாவராலும் செய்தற்கரிய அருமையாகிய தவத்தினைப் புரிவாராயினர். அவ்வாறு நெடுங்காலந் திடசித்தராய் அன்பினேடு அருமையாகிய தவம் இழைத்தலைக்கண்ட பரமேஸ்வரன் அவர் மேல் திருவுளமிரங்கி அவர்க்கு அருள்புரியும்பொருட்டு அவர்முன் ஓர் இலிங்கவடிவாய் எழுந்தருள அப்பொழுது பிரமதேவன் அச்சோதிமயமான இலிங்கத்தைக் கண்களினுல் தரிசித்து ஆநந்தங்கொண்டு தன்கையில் ஏந்திய பிரமதண்டத்தால் பிரமதீர்த்தமென வழங்கும் ஓர் தீர்த்தத்தை உண்டாக்கிப் பாவங்களையெல்லாம் போக்கும் அப்பிரமதீர்த்தத்தில் கங்கைமுதலாகிய தீர்த்தங்கள் யாவற்றையும் ஆவாகனஞ்செய்து அதிலே தாம் ஸ்நானஞ்செய்து "பிரமஞானம்" என்றுதொடங்கிய மந்திரத்தை இடைவிடாது செபித்துப் பின் இவ்வாறு தேவமானத்தால் ஆயிரவருஷம் முக்காலமு மந்திர

பூர்வகமாய் ஸ்நானஞ்செய்துகொண்டு முக்கட்பெருமானைப்பூசித்துவந்தனர். மரகதாசலத்திலே பௌர்ணமை காலையிலே விசேஷமாக ஸ்நான பூஜாதிகள்செய்தார். இவ்வாறு மிக்க அன்பினோடு பூசித்துவருதலும் சிவபெருமான் கருணைகூர்ந்து திங்கள்திகழும் திருச்சடாமுடியோடு, சிவகணநாதர்கள் சூழ்ந்துவரத் தேவர்கள் துதிசெய்ய இடபாரூடராய் எழுந்தருள, அத்திருக்கோலத்தைப் பிரமதேவர் தம்மிருநான்கு கண்களும் களிகூரத் தரிசித்து அவரது திருவடித்தாமரைகளை முடியின்மேற் சூடி வேதவேதாந்த மகாவாக்கியங்களால் பன்முறை தோத்திரம்செய்து வணங்கிநின்றனர். அப்பொழுது பரமேஸ்வரன் பரமேட்டியினது தவத்தையும் நியமத்தையுங்கண்டு மகிழ்ந்து அவர்மீது கிருபாநோக்கஞ்செய்து அநுக்கிரகித்து "ஓ பிரமதேவனே! நாம் உனதுதவத்திற்கு மிகமகிழ்வுற்றோம். நீவிரும்பிய வரத்தினைத் தருகின்றோம். நீ உலகெலாந் தொழுதேத்தும் நமது மேன்மைபெற்ற திருமலையை அடைந்தபொழுதே உன்னிடத்து நிலைபெற்ற இரஜோகுணம் ஒழியச் சாத்துவிககுணம் ஓங்கியது. நீ களங்கமற்ற மனத்தினனும் நமது திருவடிகளை மறவாது மகாயோகியாய் மீண்டும் உனது சத்தியலோகஞ் செல்லக்கடவாய். அங்கும் என்றுமழியாத சாத்துவிகவிருத்தி உன்னிடத்து நிலைபெறும். இனி அகங்காரம் உன்னை அணுகாது. ஆக்கவேண்டிய

பொருள்களின் உண்மையை அங்கை நெல்லிக்கனி போல் அறிவாய். அஞ்சுதல் வேண்டாம். நீசெய்த நற்றவப்பயன் உனக்குப் பயன்பெற்றது'' என்று இவ்வாறு திருவாய் மலர்ந்து அம்மரகதேசுவரலிங்கத்தின் கண்ணே மறைந்தருளினர். பிரமதேவன் இவ்வாறு திருவருள்சுரந்த மரகதாசலப்பெருமானது பாதங்களை நமஸ்கரித்துக்கொண்டு அன்னங்கள் தாங்கும் அழகிய விமானத்தின்மீது ஏறித் தேவர்கள் பலர் பூமாரிசொரிந்து போற்றக், கின்னரர்பாடத், தேவமங்கையர் ஆட்டமிக்க ஆடம்பரத்துடன் சரஸ்வதிதேவியார் மனமகிழ்ந்துகொண்டாடச் சத்தியலோகஞ் சென்றனர்.

அந்தணர்களே! மரகதாசலமென்பது இவ்வளவு பெருமை பெற்றதாகும். உலகெலாம் ஆக்கும் உயர் கடவுளாய், நான்மறைபெருகும் நலம்பெறுவாயும் தேவர்போற்றும் திருவடிமலரும் உடைய வையகங்கடந்த வாணிகேள்வன். இத்தலத்திற்ருன் இஷ்டசித்தி எய்தப் பெற்ருனெனில், அதன்பெருமை எளிதில்சொல்லக் கிடப்பதாமோ. உலகத்தில் எவனேனும் இம்மரகதாசலத்தையடைந்து எம்பெருமான் திருவருள்பெற்ற பிரமதேவனுல் உண்டாக்கப்பட்ட அப்பிரமதீர்த்தத்தில் மாகமாசத்திலாயினும், பௌர்ணமை, அமாவாசை, சந்திரசூரிய கிரகணமுதலிய புண்ணியகாலங்களிலாயினும் நீராடுவானுயின் அவன் அதுவரையிற் செய்தபாவ

ங்களனைத்தும் ஒழியப்பெற்று மேலாகிய புண்ணியமும் கைகூடப்பெறுவான். அதுவன்றி அப்பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து திருப்புளியடியில் இருந்து தமது சக்திக்கேற்ற பொருளைச் சற்பாத்திரத்திலே தானஞ்செயினும், ஒருபிடி அன்னமேனும் அறிஞர்க்கு அளிக்கினும், ஓர் பசு, அல்லது இடபத்திற்கு ஏதேனுங்கொடுக்கினும் அவன் பெறுதற்கரிய பெறும்பேறுகள் பெறுவான். அவன் கொடுக்கும்பொருள் அணுவளவாயினும் அதன் பயன் அளவற்ற மாமலைபோற்பெருகும். அறவர்காள்! உலகத்திலே பலவாகிய புண்ணியமார்க்கங்களிருப்பினும் ஒருவற்கு ஈகைபோற்சிறந்தது எவ்வுலகத்துமில்லையாம். அத்தருமத்தை ஒருவன் மேற்கொள்வானாயின் அவன் இம்மையிலே புகழையும் புண்ணியத்தையும் எய்தி மறுமையிலே அதன்பயனை அனுபவித்தற்கிடமாகிய உத்தமலோகத்தையும் பெறுவான். இம்மரகதாசலத்திலே சிவராத்திரிதினத்தில் அடைந்து பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து திருநந்தனவனத்திற்சென்று கண்ணுதற்பெருமானது பூஜைக்கேற்ற அருமலர்களையும் சிறப்புடைத்தாகிய வில்வத்தையுங்கொய்து பூஜித்து அன்றிரவிலே நித்திரை உணவுமுதலியவை செய்யாது விழித்திருந்து அழுக்கற்றமனத்தனாய்ப் பரமேஸ்வரனது திருவடிகளைத் தியானிப்பவன் மற்றைய இடங்களிலேயிருந்து மூன்றுகோடி சிவராத்திரிவிரதம் அநுஷ்டி

த்த பயன்பெறுவான். புளியடியில் எழுந்தருளியிருக்கும் புண்ணியனை அப்புளியமரத்தோடுசேர்த்து எவன் வலம்வருவனே அவன் உலகமெலாம் வலம்வந்த பெரும்புண்ணியத்தைப் பெறுவான். அவ்விடத்திலே ஒரு புண்ணியத்தைச்செய்து பெறும்பெரியோர்கள் பெருமை திருமாலுக்கும் கிட்டுவதரிதாம். அசிதர், தேவலர், வியாசர், சுமந்து, பைலர், மார்க்கண்டேயர், உரோமர், பாரத்துவாசர், காசிபர், கௌதமர், பிருகு, சகதி, பராசர் முதலாயினேரும் இன்னும் பல முனிவர்களும் தத்தம் அடியாரோடு இத்திருப்பதியின் கண்ணே தவம்புரிந்து தாம்விரும்பிய பொருட்செல்வம் பெற்றூர்கள். மற்றைய பதிகளிலே நூறுபேர்க்கு ஓராண்டு அன்னமளித்தலினும் இத் திருப்பதியின்க ணுள்ள புளிய மரத்தடியில் ஒருவர்க்குச் செய்த அன்னதானம் ஒன்றுக்குக் கோடிபங்கு அதிகமாம். ஆதலால், அறுசுவை யுண்டியோடு கூடிய அன்னத்தை அன்பிற் சிறந்த அடியார்களுக்கு அளித்தல்வேண்டும். எவ்வளவு வறுமையுடையவராயினும் அவர் தம்மா லியன்றளவு அன்னம் மற்றவருக்கும் இடவேண்டும் அங்ஙனம் அன்னதானமிடும் வறியோர் மிக்கசெல்வ முடையவராவார், செல்வர் அரசராவார். முனிவர்கள் ! புண்ணிய க்ஷேத்திரங்களிலே அன்னதானம் புரிதல் இலேசான பயனுடையதன்று. அவ்வன்னதான பலனுற்றூன் பல புண்ணியசிவர்

கள் பல்லாயிர வருஷம் சிவலோக வாழ்க்கையைப் பெறுகின்றார்கள், இத் திருப்பதியின் கண்ணே எழுந்தருளியிருக்கும் பரமபதியினுடைய பாங்கர் ஓங்கிவளரும் திருப்புளியை நெடுந்தூரத்திலே கண்டு வணங்கினும் அவா அழியாத முத்தியின்பம் அமையப் பெறுவார். ஓ சநற்குமார முநீந்திரா! அன்னவூர்தியின் அருமைப் புதல்வனே! யாதுசெய்வேன், அத் திருப்பதியை நினைத்தநீயும் அதன் மகிமையைப் பகர்ந்த யானும் பெற்ற பேறே பெரும்பேறும். மேலும் இத்திருப்பதி அருமறை முடிவின் அகப்பொருளாய், மறைகளனைத்தும் மறைத்திட்டொளிக்கும் மாமணியாய், முனிவர் போற்றும் மூவாமுதல்வனாய், முத்தியளிக்கும் முக்கட்பாமனும் புண்ணிய வடிவப் புருஷோத்தமனாய்க், கலிமலங்கழிக்கும் கற்பகக்கொழுந்தாய், போகமளிக்கும்போதப்பெருக்காய் நின்ற நின்மலன் எழுந்தருளியிருந்து அடியார் உய்யும்பொருட்டு ஆடல் புரியாநின்ற அரும்பதியாமென்று அறிவீர்களாக.

தலவிசேடச்சருக்கமுற்றிற்று.

இரண்டாவது

உமைவாமபாகம்பெற்றசருக்கம்.

தவமே வடிவமாகக் கொண்ட தாபதமணிகாள்! மேலே கூறிய இவ்வித பெருமைபெற்ற திவ்வியக்ஷே

த்திரத்திற்ருன் முன்னுளிலே பார்வதிதேவியார் கருணுசமுத்திரமாகிய கண்ணுதற் பெருமானது கழல்களைக் கனவிலும் மறவாது தொழுதேத்தி அவர் திருமேனியின் ஒரு பாகத்தைப் பெற்றனர். அப்படி அவ்வம்மையார் பரமேஸ்வரனது திருமேனியிற் பாதிகொள்ளற்குக் காரணம் யாதெனில்; பிரிங்கிரிஷியென்னும் முனிவரொருவர் தேவியாரை வணங்காது அவமதித்தல் செய்வாராக அக்காலத்து அவர் அகந்தையையொழித்தற்பொருட்டே அவ்வாறு எம்பெருமானது பாதியுருவைப் பெற்றனர். இப்பொழுது அவ்வரலாற்றை விரிவாக எடுத்துச்சொல்லுகின்றேன் கேட்கக்கடவீர்.

முன்னர் ஓர் காலத்துப் பிரிங்கிரிஷியானவர் மிகுந்த விரத்தியுடையராய், சத்தியைச் சற்றேனும் நினையாது சிவனையே தியானஞ்செய்து அரியதவத்தினை இயற்றி நின்றனர். அவ்வாறு அம்முனிவர் தம்மைவிலக்கிச் சிவபெருமானைத் தனியே தியானித்தலை உணர்ந்த உமாதேவியார் கோபங்கொண்டு நாம் இவர் தியானிக்கும் நம் தலைவரது பாகத்தைப்பிரியாது மருவி ஒருமித்திருக்கவேண்டுமென்று நினைத்து அதன் பொருட்டு உடனே இம்மரகதாசலத்தை அடைந்து பிரமதீர்த்தத்தின் வடபாகத்தில் தன் திருநாமத்தால் அருள்வடிவமாகிய ஓர் தீர்த்தத்தை உண்டாக்கித் தினந்தோறும் அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து வண்டுகள் பாடும்

பூஞ்சோலையெய்தி அழகியமலர்களைச் சிவந்த தமது கரங்களாற் கொய்து தேவாலயஞ் சென்று மரகதேசுவரமூர்த்தியைப் பூசிப்பதும் யோகநிலையைப் பொருந்தித் தம் நாயகராகிய முக்கட்பெருமானைத் தியான நிஷ்டையால் கவர்வதுமாகத் தம்சேடியரோடு மஞ்சள்நீராடிப் பன்னிரண்டு வருஷம் தளராது அருமையாகிய தவத்தினைச் செய்துவந்தனர். நாடோறும் மூன்றுகாலத்தும் தவறாது பூஜித்து வரும் தேவியார் ஓர்நாள் மிக்க அன்பினோடு அருமறை மொழிகளால் பரமேசுவரனைத் தோத்திரம்செய்து மனங்கசிந் துருகநின்றார். அவ்வாறு அவ்வம்மையார் அருமறை மொழிகளால் செய்த அன்புபெருக்கெடுத் தொழுகும் இனியதோத்திரங்களைக் கேட்ட கிருபாநிதியாகிய எம்பெருமான் அவர்முன்னே தோன்றி அவரைநோக்கி "தவநிலையில்வருந்தும் உமையவளே! என்மேல் அன்பு பெரிதுள்ள பிரிங்கிமுனிவன் உன்னையொழித்து என்னையே வழிபட்டானென்றன்றோ நீ கோபங்கொண்டனை. உண்மை நோக்கிலை. உலகங்களெல்லாம் சிவசத்தி வடிவாய் இருக்கின்றன. ஓ மலையரையன் செல்வியே! உனது அம்சமாய் சத்தியாதாரமின்றி ஒன்றும் நிலைபெற்றிலது. ஓர் ஆதாரமில்லாத ஆகாயத்தில் சர்வ ஜந்துக்களும் வசிக்கும் பூமண்டலம் இருக்குமாயின் அதற்கு ஆதாரசத்தி ஒன்றுண்டல்லவோ அச்சத்தி நீயாயிருக்க உன்தன்மை நீய

றியாது என் வீணில் தவத்தால் திருமேனி வாட்டுகி ன்றனை. இனியேனும் இக்கடுந்தவத்தை ஒழித்து முன் னரோ நாம் உனக்களித்த உனது பாகமாகிய இடப்பா கத்தை எனது திருமேனியிற்றானே பொருந்தியிருக்கக் கடவாய்" என்று கருணையோடு திருவாய்மலர்ந்தருள, அது கேட்ட தேவியார் மனமகிழ்ந்து மயக்கமொழித் து யோகத்தானும் அன்பானும் மனத்தானும் தமது திருமேனியை அப்பரமனுடைய திருவுருவத்தோடு சேரப்பொருந்தி வீற்றிருந்தனர். அந்நாண்முதல் எம் பெருமான் அர்த்தநாரீசுவர மூர்த்தியாய்த் திவ்வியால ங்காரவடிவுகொண்டு எல்லோரும் பணிந்துய்ய அம்ம ரகத கிரியின்கண்ணே தேவர்கட்குக் காட்சியருளி எழு ந்தருளியிருக்கின்றார். ஆகையால், அருந்தவமுனிவீர்! இத்திவ்விய தலமானது போக மோக்ஷங்களென்றும், இருமைப்பயனையும் எளிதில் அருளத்தக்கது. எவ்வித மான மகாபாதகங்களையும் போக்கத்தக்கது. அங்குள் ள தீர்த்தமானது தேவியார் திருக்கரங்களால் உண்டா க்கப்பட்டமையால் அப்பெயராலும், பெரும்போகம் அருளுதலால் இலக்குமி தீர்த்தமெனவும் இருபெய ரால் வழங்கப்பட்டு வருகின்றது. யாவராயினும் கார்த் திகைமாசத்திலே வரும் சுக்கிரவாரத்திலே இம் மரகதா சல க்ஷேத்திரத்தையடைந்து தேவியார் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பின் எவர்க்கேனும் பாயசான்னம்

சிறிது தானஞ்செய்வாராயின், அவர் உலகத்திலே மகா பாக்கியம் பெறுவர். அவர்க்குள்ள துயரங்கள் யாவும் நீங்க மிகுந்த இன்பம் உண்டாம். அதுவன்றி நவ ராத்திரி காலத்து மகாநவமி தினத்தில் தேவியாரது திருவடி மலர்களில் கருநெய்தல் மலர்களைச் சூடி வணங்கிக்கொண்டு அத்தீர்த்தத்தில் சிறிது உட்கொள் பவர் வித்துவானுவார்கள். அவர்க்குப் பற்பல பாஷை களில் தெள்ளிய அறிவு பிறக்கும். இனி ஒருபோது அவர்க்குச் சரஸ்வதிவிலாசம் உண்டாகாவிடினும் செ ல்வப்பெருக்கேனும் மிகச் சிறந்தோங்கும். இத்தேவி ஸரம் என்னும் மாகாதீர்த்தத்தை எவன் கண்ணுற் காண்பனே அவன் உலகத்திலேயுள்ள மாந்தர் பலருள் ளும் உயர்ந்தவனுவான். முனிவர்காள்! யாவனெருவன் இம்மரகதாசலத்தில் மகாதேவனது திருவருள் பெறும் பொருட்டு அத்தேவனையும் தேவியையும் அபிஷேக நைவேதனுதிகளுடன் விதிவழுவாது நாடோறும் பூஜி ப்பனே அவன் தம் பிதுர்களுடனே பரமேசுவரனது திவ்வியாலயமாகிய திருக் கைலாயகிரியையடைந்து அ ப்பரம்பொருளோடு இரண்டறக் கலந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்றுய்வன். இவ்வுலகத்திலே சிவபெ ருமான் பற்பல திருப்பதிகளில் எழுந்தருளி யிருப்பி னும் தமது அபின்ன சத்தியாகிய பரமேசுவரியினுடை ய தவவனமான இத்திருப்பதியின் கண்ணே கொடுத்த

ருளிய காட்சி மற்றெவ்விடத்தும் கிட்டுவதரிதாம. மற்றைய தலங்கள் ஒவ்வோர் மெய்யடியார் பொருட்டுச் சிவபெருமான் எழுந்து திருவருள் செய்யப்பெற்றவிடமாம். இத்தலமோ உலகெலாம் ஈன்றளிக்கும் அம்மையார் எம் மையனிடம் அருள்பெற்ற விடமாதலால், அதன் பெருமையை இவ் வளவினதென்று நான் உங்களுக்கு அளவிட்டுச் சொல்ல வியலுமோ, தவமுதல்வீர்! இவ்வாறு உமாதேவியார் தமது தவவலிமையினுல் பரமேசுவரனது திருமேனியின் ஓர் பாகத்தைப்பொருந்தி வீற்றிருத்தலும் பிரிங்கிமுனிவர் அவ்வம்மையாருடைய பாகத்தை விலக்கிச் சிவபாகத்தை மட்டில் இடசாரி வலசாரியாய்ப் பிரதக்ஷிணஞ் செய்வாராயினர். அது கண்ட அம்மையார் மிகுந்த கோபமுடையராய் அம்முனிவரது உடம்பின்கணுள்ள தமது அம்சமான உதிரத்தை ஒடுக்கினர். உடனே அவர் நடந்து செல்லுதற்குத் தானும் சக்தியற்றவராய்க் கால்களிரண்டும் தடதடத்துப் புரள மயக்கமுற்றுத் தேவியார் சந்நிதியிற்ருனே கீழ்விழுந்தனர். அப்பொழுது சிவபெருமான் தம் அன்பரைக் காத்தருளத் திருவுளங்கொண்டு அவருக்குப் பின்னும் ஓர் கால் அருளிச்செய்ய அம்முனிவர் திடங்கொண்டு எழுந்து பரமேசுவரனை இடையருவன்போடு பணிந்தேத்தி வந்தனர். கேளீர், மிக்கதவத்தையுடைய முனிவர்களே! இச்சரித்திரமானது பிற

விக்கடலைக் கடத்தற்கு ஓர் பெருங்கருவியாம். இதனை அன்பினோடு கேட்பவர்கள் எவ்வகைப்பட்ட துன்பங்களையும் ஒழித்துக் கைலையங்கிரியை யடைந்து முக்கட்பெருமானுடைய திருச்சந்நிதியிலே பேரானந்த புனிதராய் வாழ்வார்கள்.

உமைவாமபாகம்பெற்றசருக்கம்
முற்றிற்று.

மூன்றாவது
கும்பமுனிபூசித்தசருக்கம்.

ஓ! நைமிசாரணிய முனிவர்களே! ஸ்ரீநந்திபெருமான் சநற்குமாரமுனிவர்க்கு அருளிச்செய்த மற்றோர் சரித்திரத்தை இனி உங்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றேன். அதனை அன்பினோடு கேட்கக் கடவீர்கள் என்று சூதமுனிவர் பின்னும் சொல்கின்றார்.

முனிவர்கள் பலரும் தொழுதேத்தும் முதியோரான அகத்தியமுனிவர் முன்னம் ஓர்காலத்துத் தமது சிஷ்யர்களாகிய மற்றை முனிவர்களோடு பல விடங்களிலும் தீர்த்தயாத்திரை செய்துவந்தனர். அப்படிவருகின்ற அவர் வடக்கேயுள்ள திருக்கேதார முதலாகத் தெற்கேயுள்ள திருவிராமேச்சுரம் வரையில் உள்ள ஒவ்

வோர் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து கொண்டு அவ்வத்தலங்கடோறும் சில நாளிருந்து ஐம் புலன்களையும் ஒடுக்கி அரனார்திருவடிகளைச் சிந்தித்துத் தவம்புரிந்து வந்தனர். அம்முனிவர் முறையே திருக் கேதாரம், திரு நைமிசம், திருக்காசி, குருக்ஷேத்திரம், உஜ்ஜயினி, பிரயாகம், பதரிகாசிரமம், திருக்காகோலம், திருக்கோமதீசுரம், கோதாவரி, சோணபத்திரை, கா ளாஞ்சனம், கிருஷ்ணா, துங்கபத்திரை, வரா, வடபெ ண்ணை, தென்பெண்ணை, அரிசல், திருப்பயணம், திரு ச்செந்தூர், திருக்கந்தவனம், திருக்காதாக்குவனம், தி ருவீரட்டம், திருக்கேரவம், திருவேளூர், திருக்காளத் தி, திருப்பதி, திருவண்ணாமலை, சப்தரிஷீச்சுரம், திருமா ந்துறை, ஸ்ரீகாவேரி, பீமேசுரம், பவானீகூடல், மகிடேச் சுரம், அமராவதிக் கரையிலுள்ள திருக்கருவூர், அதன் கீழ்புறமுள்ள முக்குடி, காவேரிசங்கமம், மணிமுத்தா நதி முதலாகிய விடங்கட்குச் சென்று பின் கடம்பவன த்தை அடைந்து சத்தமாதர்களைத் தொழுது கடம்பவ னநாதர் சந்நிதியில் ஓடும் காவேரியில் நீராடி வாய்பே சாது மௌனத்தோடு பூஞ்சோலைசென்று மலர்கொய் து நியமத்தோடு பன்னிரண்டு பன்னிரண்டுகுடம் தண் ணீர் எடுத்துச் சென்று அப்பெருமானுக்கு அபிஷேகித் துத் தாம் கொண்டுவந்த திவ்விய மலர்களால் அருச்ச னைசெய்து நமஸ்கரித்து எழுந்து நின்று அரிபிரமேந்தி

ராதியர்களாலும் அறிதற் கியலாத திருவடி மலர்களை அருமறை மொழிகளால் தோத்திரம்செய்து வணங்கிக் கொண்டு பின்பு தம்மோடுவந்த முனிவர்களை அக்கடம்பவனத்திற்றானே இருக்கும்படி ஆஞ்ஞாபித்துத்தாம் அவ்விடத்தை விட்டு அகன்று வாட்போக்கியென்னும் இரத்தினகிரியை எய்தினர். அவ்வாறு இரத்தினகிரிக்குச் சென்ற அம்முனிவர் மலையின்மேலேறி இரத்தின கிரீசரனென்னும் சிவலிங்கப் பெருமானைத்தரிசித்துவணங்கித் தோத்திரஞ் செய்துகொண்டு அம்மலையின் கண்ணே அவ்விலிங்கத்திற்கு வாயு திசையிலேயுள்ள சூரிய குண்டமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நந்தவனஞ்சென்று நறியமணங் கமழாநின்ற நாண்மலர் கொய்து காவேரியில் மூன்றுகுடம் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து சிவபெருமானுக்கு அபிஷேகஞ் செய்து மலர்புனைந்து அக்காட்டிலுள்ள நல்ல கனிவர்க்கங்களைக் கொண்டுவந்து நிவேதித்துத் தியானாதி சோடசோபசாரங்களாற் கடவுளைப் பூசித்து வேதகீதங்களாற்றுதித்துத் திருக்கோவிலை மும்முறை வலம்புரிந்து இரத்தினகிரீசனை வணங்கிக்கொண்டு கீழிறங்கி மீண்டும் கடம்பவனத்தை அடைந்தனர். பின்பு மாலைக் காலம் வருதலும் அவ்விடத்திற்றானே மாலைக்கடனை முடித்துக்கொண்டு கடம்பவனநாதனை வணங்கி மரகதாசலஞ் செல்ல நினைந்து அவ்விடத்தினின்று தண்

டுகமண்டலந்தாங்கிய கையராய்க் காவேரியாற்றைக்கட ந்து அந்நதியிற்றனே ஸ்நானஞ்செய்து அப்பொழுது அவ்விடத்திலே கிடைக்கத்தக்க மலர்களைப் பறித்துக் கொண்டு மரகதாசல மூர்த்தியைப் பூஜிக்க அவாக்கொ ண்டு அப்பெருமான் இலிங்கவடிவாய் எழுந்தருளியிரு க்கின்ற திருவருண்மயமாகிய அம்மலையின்மே லேறிச் சென்று திருக்கோயிலின் வாயிலை அடைந்து நோக்கு தலும் இவர்செல்லுதற்குச் சிறிதுபொழுதின் முன்னரோ கோவிற் பூசகர்கள் கடவுட்பூசை முடித்து க்ஷேத்திர பாலக பலியும் இட்டுக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு சென்றுவிட்டதை யுணர்ந்து "அந்தோ! நாம் அகால மானபின் இங்குவந்தோம். இனி எவ்வாறு பூசைசெய் யப்போகின்றோம் சங்கற்பித்த மாலைப்பூசையை இவ்வி டத்தன்றி மற்றெவ்விடத்துச் சென்றுசெய்வோம். பூச கர்கள் பூசைமுடித்து க்ஷேத்திரபாலகபலியு மிட்டுத் திருக்கடைக்காப்புச் சாத்தி வெளியிற்போய் விட்டார் களே! நாம்செய்த பாவமன்றோ நம்மை இவ்வளவுநே ரம் தாழ்த்துவரப் பண்ணியது" என்று கவலையுற்றுப் புலம்பி அவ்விடம்விட்டுத் திருப்புளியடி சென்று மிக வும் மனத்துயரோடு, அந்தோ! காலத்திற் பூசிக்கக் கிட் டவில்லையே யெனவருந்தினின்றார்.

இவ்வண்ணம் மிகுந்த அன்பினோடு ஈசன் திருவ டிப் பூசையில் ஆசைகொண்டு மனமுருகுகின்ற குறிய

முனி காதிற்படும்படி ஆகாயத்திலே சிவபெருமானது திருவருளால் "கடியதவத்தினுற் கழியா மலங்களைந்த அகத்தியனே! உனது மனத்துயரம் எளிதில் ஒழியத் தக்கதாக ஓர் வழி உனக்கு எடுத்துரைக்கின்றோம். அதனுல் பரமபதியினுடைய திருவருள் கைகூடப்பெற்று மனக்கவலை நீக்கலாம். இத்தலத்தின் பெருமை மற்றைத்தலத்திற்குமில்லை, இங்கு நிறைவேருத வோர்விருப்பம் மற்றெங்கும் நிறைவேறுதலில்லை. இங்குள்ள சுதரபுஷ்கரணியானது குருத்துரோகமுதலிய மகாபாதகங்களையு மொழித்திடுமென்னின், வேறு எத்தகைய பாவந்தான் ஒழியமாட்டாது. அப்படிப்பட்ட இவ்விடத்து வந்தும் ஏன் துயருறுகின்ருய். நீ யாதொரு இடையூறு மின்றிப் பூசைமுடித்தற்கு ஓர் உபாயஞ் சொல்கின்றேன் கேளாய். பசுக்கள், பக்ஷிகள், மிருகங்களுக்குக் காலபேதமும் தாய்தந்தையென்னும் வேற்றுமையும் இல்லையாம். ஆதலால் அவைகள் எக்காலத்து ஆலயங்களிற் சஞ்சரிப்பினும் குற்றமில்லை. அவற்றுள்ளும் ஈமிகச்சிறந்தது. காற்று, ஈ, பசு, அக்கினி, மகாநதி, கட்டுண்டரசம், நெய், நெல், பேன், என்பனவும், யோகி, அந்தணர் முதலாயினேரும் எக்காலத்தும் அசுத்தமாதலில்லை, ஆகையால், நீ * மக்ஷிகைவேடங்கொண்டு உள்

* மக்ஷிகையென்பது ஈயினை.

ளேசென்று கடவுளை வழிபடுவாயாக. இதுவே நன்மார்க்கமாமன்றி இதைவிட வேறே வழியில்லை. உறுதியாக நம்பக்கடவாய்'' என்று ஓர் அசரீரி தோன்றிற்று. அப்பொழுது அகத்தியமுனிவர் அவ்வாகாய வாக்கை நோக்கி ஒ! கிருபாநிதியே! நான் எவ்வாறு ஈயின் உருவங்கொள்வேன். அப்படிக்கொள்ளின் மீள என்னுருவம் எப்படி எனக்குக் கிடைக்கும். இவைகட்கும் ஓர் உபாயஞ் சொல்லியருளல் வேண்டுமென்று பிரார்த்திக்க, மீண்டும் அவ்வாகாய வாக்கானது "ஓ கும்பமுனியே! நீ தேவர்கட்கெல்லாந் தேவனும் உயர்போதமளிக்கும் உத்தம குருவுமாகிய நம்சிவபெருமானையே அவ்வரந் தரவேண்டுமென் றுறுதிசெய்வாயாயின், அவரே அவ்வாறு அருள்செய்வார். அப்பெருமானுடைய திருவருளால் அவர் திருமேனியிலே தங்கிய தக்ஷகனென்னும்நாகராஜன் இதோ இம்மலையின் மேல்புறத்திலே சருப்பநதி வடிவமாக விருக்கின்றான். பின் ஓர்சமயத்திலே அக்கடவுளது கண்டத்தில் ஆபரணமாகவும் பிரகாசிப்பன். அவனுடைய திருமேனியாகிய அந்நதியிலே ஸ்நானஞ் செய்தவர்கள் தாம் விரும்பிய உருவத்தைப் பெறுவார்கள். மீண்டும் தம் சுவரூபமும் கொள்வார்கள். ஆதலால் நீ அத்தீர்த்தத்தை நாடிச் செல்வாயாயின் உன் கருத்து முற்றுப்பெறும்'' என்று அருளிச்செய்தது. அது கேட்ட கும்பயோனி இதுவும் நாம்செ

ய்த தவப்பயனே யாமென்று அளவில்லாத ஆனந்தம டைந்து கிருபைக் கடலாகிய பரமேஸ்வரனை நினைந்து,

அலகிலாவுலகையாக்கியேயொடுக்கியாளுமெய்ப்பொருளதுவா
நிலவுசீருருவநிமலநிர்க்குணனேநீடியகருணைமாக்கடலே [கி
குலவிடுமீசர்தமக்கெலாமீசகோதுதீர்குருமணியாகி
யிலகுமெய்யடியாரிடர்களைந்தாளுமிறைவனே யேகநாயகனே.

தேவரோடசுரர்தேடிசெரணுதிரிபுடையுலகனைத்தினுக்கு
மேவதிட்டானவுலகுழலடியேமேம்படவெழுந்தமேனியனே
சேவுயர்கொடியாயுயிரினுக்குயிரேசிந்தைசேர்கருத்தெலாமுணர்வோ
காவளர்கற்பகக்கொழுந்தாகிக்கருதியவருளுநன்மணியே. [ய்

நன்னிலாவுமிழ்தண்மதிபுனைசடையாய்நாதனேஞானநாயகநு
ன்னடிபணிந்துபோற்றுமெய்யடியார்நினைந்தவையரியதாமெனினு
மன்னவையெளிதேயுறுவராலெனையுமாண்டருள்புரிவதுன்கடனும்
பொன்னிமாநதிசூழ்மரகதகிரியாய்போற்றிநின்றிருவடிமலரே.

என்று இவ்வாறு தோத்திரஞ்செய்தனர். அப்பொழுது பரமேஸ்வரன் அங்ஙனம் துதித்துநின்ற அகத்தியமுனிவர்மீது கருணைகூர்ந்து அவர்க்கு அருள்புரிய விரும்பித் தமது கண்டத்திற் றுலங்கும் தக்ஷகனைக் கையிலெடுத்து நோக்கி "ஓ தக்ஷகா! நீ இம்மலையின் மேல்புறத்தில் ஓர் நதிரூபமாக இருக்கக்கடவாய். அந்நதி தக்ஷகநதியென்று வழங்கப்பட்டுக் காவிரியோடுகலந்து செல்லக்கடவது. அந்நதியில் ஸ்நானஞ்செய்யும் அகஸ்தியமுனிவன் ஈயுருவம் பெறக்கடவன்" என்று ஆஞ்ஞாபித்தருள அவ்வாறே தக்ஷகனும் சிவபிரானுடைய

கட்டளையைச் சிரமேற்கொண்டு சர்ப்பநதியாய் அமர்ந்தனன். இங்ஙனம் சிவபிரான் தமக்கு அருள்புரிந்த வரலாற்றை ஞானமார்க்கத்தா லறிந்த அகத்தியமுனிவர் உடனே அச்சர்ப்ப நதியும் காவேரியுங் கூடுமிடத்தை நாடிச்சென்று ஸ்நானஞ் செய்ததும் தம்முன்னை முனிவர் வடிவமாறி ஈயுருவம் பெற்றனர். பின்பு அம்முனிவர் சிவபிரான் தமக்குத் திருவருள்புரிந்தமையை நினைந்து ஆனந்தங்கொண்டு ஆலயத்தினுள்ளேசென்று சிவலிங்கப் பெருமானைத் தம்மிருகண்களுங்குளிரத் தரிசித்துத் தாம்மானிடவடிவமற்றிருப்பதால் விதிப்படி பூசை செய்தற் கியலாதவராய் ஞானமார்க்கத்தால் மனதிற்குள்ளே பூசையும் வழிபாடுகளும் புரிந்து பார்வதிதேவியார்க்கும் தாம் அக்காலத்துக் கொண்ட வடிவுக்குத் தக்கபடி ஆராதனஞ்செய்து மிகுந்த அன்புடனே இருவர் திருவடிகளையும் வணங்கிக்கொண்டுதாம் அன்று செய்த பிரதிஞ்ஞை நிறைவேறியதை நினைந்து உள்ளம் பூரித்து அவ்வாலயத்தை விட்டு வெளியே வந்து மீண்டும் அத்தகூஷக நதியில் ஸ்நானஞ்செய்ய உடனே அவ் வீயுருவு நீங்கி முன்னை முனிவடிவம் எய்தப்பெற்றுத் தம் இருப்பிடம் சென்றனர்.

அந்தணர்காள்! அன்றுமுதல் அம்மலைக்கு ஈங்கோய்மலையென்னும் திருநாமம் உண்டாயிற்று. மாசி மாசத்துப் பூரணையிலே இவ்வாறு அம்முனிவர் சித்தி

பெற்ரு ராதலால் இப்பொழுதும் அத்தினத்திலே சர்ப்பநதியும் காவேரியும் கூடுமிடத்திற் சென்று ஓர் முறையேனும் ஒருவர் ஸ்நானஞ்செய்து அன்புடனே அம்மரகதாசல நாதனைத் தியானித்து வழிபடுவராயின் அவர் கருதிய பொருள் கைகூடப் பெற்றுப் பாவங்கள் ஒழிந்து நற்கதிபெற்றுய்வார். ஆதலால் சித்திபெற விரும்புவோர் இங்குவந்து விதிப்படி தப்பாது ஸ்நானஞ்செய்து தம்மா லியன்றமட்டில் பொன், வஸ்திரம் முதலியவையேனும் அன்றி மற் றெப்பொருளேனும் தானஞ் செய்வாராயின் அவர் தப்பாது சித்திமுத்தி பெறுவாரென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்ருர்.

கும்பமுனிபூசித்தசருக்க
முற்றிற்று.

நான்காவது

வீதிஹோத்திரன்முத்திபெற்றசருக்கம்.

ஓ அருந்தவ நிலையிற் சிறந்த அந்தணர் மணிகாள்! இன்னும் அதன் பெருமையை எடுத்தோதுகின்றேன். அன்புடனே கேட்டு ஆனந்தமுறக் கடவீர்கள். இப்பொழுது நாம் உங்கட்கு அத்திருப்பதியிலே பரமேஸ்வரனது திருவருள் பொருந்தி விளங்கும் திவ்விய தீர்த்

தங்களின் வரலாறுகளையும் அவற்றின் பெருமைகளை யும் சொல்லுகின்றோம். முனிவர்காள்! முன்னர் ஓர்சமயத்து ராதந்தா கற்பத்திலே நிகழ்ந்த கிருதயுகத்திலே நருமதாதீரத்தில் உலகெலாம் புகழ்ந்தேத்தும் உயர்வு பெற்ற பிருகுமுனிவர் குலத்திலே மாதேவனது திருவடிமலர்களை ஒருபொழுதும் மறவாத சிந்தையையுடைய அக்கினி சன்மாவென்னும் அந்தணர்கோமானொருவ ரிருந்தார். அவர் தாம் பூண்டொழுகும் இல்லற நெறியிற் சிறிதும் பிறழாது முறைப்படி ஒவ்வொருகன்மங்களையும் அநுட்டிப்பாராய் வாழ்வுபெற்று வீதிஹோத்திரன், தூமகந்தன், மேதாவியென்னும் மூவரைத் தமக்குச் சீடராகக்கொண்டு அவர்க்கு நல்லறிவு நல்லொழுக்கங்களைக் கற்பித்துவந்தனர். இவ்வக்கினி சன்மனே அறிவிற்பெரியராய் யோகநிலைகண்டு புலன்களை வென்றவர். அருமறைப் பொருள்களனைத்தும் அங்கை நெலிக்கனிபோல் தெளிவுபெற அறிந்து ஜீவகாருணியம் பரமேஸ்வர பக்திமுதலிய நற்குணங்கள் குடிகொள்ளப்பெற்றனர். இப்படிப்பட்ட பிருகுகுல திலகராகிய அவ்வந்தணர் ஓர்நாள் வீதிஹோத்திர னென்னும் தமது சீடனை யழைத்து ஓ! வீதிஹோத்திரா! இன்று நமது கிரகத்தில் பிதுர்தேவதைகளுக்குச் செய்யும்சிரார்த்தத்துக்குச் சிறிது பால்கொண்டு வருவாயாக வென்று கட்டளையிடலும் அவ்வீதிஹோத்திரன் தன் வீட்

டிற்சென்று தந்தையாரிடத்தில் ஆசிரியர் கருத்தைவெ ளிபிட்டான். அப்பொழுது புதல்வன் சொல்லிய வார்த்தையைக் கேட்ட தர்மகேதுவென்னும் அவன் பிதாவானவன் தம் வீட்டிலுள்ள பாலை ஓர் குடத்து நிறையக் கறந்து அவனிடங் கொடுத்து விரைவிலே இதை உன் ஆசிரியரிடத்திற் கொண்டுபோய்க் கொடுப்பாயாகவென்று கூறினன். அவ்வாறே அவ்வீதிஹோத்திரன் அதைப்பெற்று எடுத்துக்கொண்டு செல்லும் வழியில் பசிமிகுந்து உடலை வருத்த அறிவின்றி அதில் ஒருபடி பாலை எடுத்துக் குடித்துவிட்டு அக்குறைவுக்கு நீரை விட்டு நிரப்பி அதை ஆசிரியரிடத்திலே கொண்டுபோய்க் கொடுத்தலும், அவர் சீடன்செய்த தீய செய்கையைத்தாம் ஞானதிருஷ்டியால் அறிந்து அவன் அருந்திமிகுந்தபாலைத் தம் சிரார்த்த காரியத்துக்கு உபயோகித்தல் தகாதுபற்றி மிகுந்த கோபமுடையவராய் வீதிஹோத்திரனைப் பார்த்து "ஓ பர்வபயமற்ற பதிதனே! தீயமதியுடையோய்! நீ செய்த இத்தீயசெயலால் என் நற்கருமம் குற்றமுற நேரிட்டது. உன்னல் என் பிதுர் சிரார்த்தம் பழுதுற்றது. நீ குருவாக்கியத்தைக் கடந்து பைசாசம்போல் இக்குருக் துரோகத்தைச் செய்தபடியால் அம்மகாபாவப் பயனுக மனிதசஞ்சாரமற்ற கானகத்திலே பிசாசமாக அலைந்து திரியக்கடவாய்" என்று சபித்துவிட்டுப் பின்பு வெறு பால்கொண்டு தம்பிதுர்

காரியத்தை முடித்தனர். குரு சாபம்பெற்ற வீதிஹோத்திரன் பிசாச வடிவம்பெற்று நல்லுணவின்றி ஆருத துயரோடு இருளடர்ந்த பெரிய காட்டிலே அலைந்து கொண்டு திரிந்தான். இவ்வண்ணம் உழன்று திரிகின்ற இவன் சில நாளின் பின்னர் ஓர்நாள் தாம்செய்த முற்றவப்பயனால் ஸ்ரீகோபில முனிவர் ஆசிரமத்தி னருகிற் சென்று ஓர் மரத்தின்கீழ் நின்றுகொண்டு "ஐயோ! என் தலைவிதி இப்படியாய் விட்டதே! இத்துன்பம் என்று ஒழியுமோ! என்செய்வேன் தெய்வமே" என்று பெருங்குரல்விட்டு அழத்தொடங்கினான். அப்பொழுது இவன் அழுகின்ற சத்தம் கமனசொரூபியாகிய கோபிலமுனிவர் செவியிற்படவும் உடனே அம்முனிவர் மனமிரங்கி அவனைப்பார்த்து "ஓ பிசாசமே! நீ அறிவின்மையால் கொடிதாகிய குருத்துரோக மகாபாவத்தைச் செய்தாய் இப்பாவம்போற் கொடியபாவம் உலகத்தில் வேறெதுவும் இல்லை. கடவுளுக்கு நம்மேல் ஓர் கோபமுண்டாயின் அதனை எப்படியாயினும் ஆசிரியன் வழியாகச் சாந்திசெய்து கொள்ளலாம். ஆசிரியனுக்குக் கோபம் வந்தால் அதனைத்தணிக்க எவராலும் ஆகாது. ஆகையால் நீ குருவினிடத்துச் செய்த குற்றம் ஒழிதற்கு மீண்டும் அவனது பாதகமலங்களிற் சரணம் புகுதலே நல்ல செயலாயிருக்கின்றதன்றி வேறோர் தக்கவழியும் கிட்டாது. நீ அறிவுகுன்றிய சிறுவனாகையாலும்,

உன் முற்பவத்துத் தீவினை உன்னை அவ்வாறு செய்ய ஏவியதாலும் அம் மகாபாபத்தைச் செய்துவிட்டாய். அப்படியிருந்தும் நீ முற்பிறப்பிற் செய்திருந்த ஏதோ ஒரு சிறு புண்ணியப் பயனானது உன்னை இவ்விடத்திலே கொண்டுவந்து சேர்த்தது. நானே உனக்குற்ற இச்சாபம் தீரும்வழி செய்வேன். நான் இப்பொழுது தீர்த்த யாத்திரை செல்லப் போகின்றேன் தென்றிசையிலே அநேக புண்ணிய தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளைக் கண்ணாற் காணினும் ஒருவன்செய்த பாவங்கள் யாவும் ஒழிந்து புண்ணியம் பெருகும். அத்தென்னாட்டிலே மரகதாசலம் என்றொரு மகாஸ்தலம் இருக்கின்றது. அம்மலையின் கீழ்புறத்தில் சுதா புஷ்கரணியென்னும் ஓர் திவ்விய தீர்த்தமும் உளது. முற்காலத்திலே தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அமிர்தமெடுத்தபோது அதில் ஓர் திவலை இத்தீர்த்தத்தில் விழுந்தது. மரகதமலையானது கைலையினின்று அவ்விடம் வந்துவிழுந்த வேகத்தால் உண்டான அதிர்ச்சியால் இத்தீர்த்தம் உண்டாயிற்று. நான் அங்கு போவதால் நீ என்னுடன் கூடவந்து அத்திவ்விய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வாயானால் உனது குருத்துரோக பாவம் விலகிவிடும். அதுவன்றி வேறுயாது செய்யினும் அப்பாவ மொழிய மாட்டாது" என்று அம்முனிவர் உரைசெய்து எழுந்து தென்றிசை நோக்கி யாத்திரை செல்லலும், குருத்து

ரோகக் கொடும்பாவ சாபத்தால் வருந்தும் அப்பிசாச மாகிய விதிஹோத்திரன் அவரை வணங்கி அவர்பின் தொடர்ந்து சென்றான், முனிவர் பற்பலவிடங்களையுங் கடந்து மரசதமலைச் சாரலையடைந்து சர்ப்பநதி சங்கம மாகும் காவேரியில் ஸ்நானஞ்செய்து பரிசுத்தராய் நிய மத்தோடு சுதர புஷ்கரணி தீர்த்தத்தை யடைந்து அதி ல்தாம் முன்பு நீராடிப் பின்பு அத் திவ்விய தீர்த்தத் தைக் கையில் எடுத்து மந்திரங்களால் அபிமந்திரணஞ் செய்து "நீ உன்பாவத்தை விட்டொழிக்கக் கடவாயெ ன்று ஆசீர்வதித்துச் சிரசின்மேலே புரோக்ஷித்தார். அரிய தவத்தால் நிறைந்த அம்முனிவர் அவ்வாறு செ ய்தலும் விதிஹோத்திரனிடத்தே குடிகொண்டிருந்த ஒழியாக்கொடிய குருத்துரோக பாவம் அணுத்துணை யும் இல்லாது தொலைய அவன்தம் முன்னையுருவமடை ந்து தேவர்க்கும் மற்றை யாவர்க்கும் எட்டாத சிவஞா னப் பெருஞ்செல்வம் பெற்று என்றும் அழியாத நித்தி யானந்த வாழ்வினை யெய்தினன். முனிவர்காள்! பாவ ங்களுட் கொடிய குருத்துரோக பாவமே இத்திருப்பதி யில் இல்லாதோடுமாயின் இதன் பெருமை ஓரளவை யில் அடங்கத்தக்க தாமோ! இன்று இத்திவ்விய தீர்த் தத்தை நினைக்கப்பெற்ற நாமும் நீவிரும் செய்ததவமே தவம். உலகத்தில் எவ்விடத்தும் தீராத குருத்துரோ கம் இவ்விடத்திற்றான் தீரும். மகாபுண்ணிய தீர்த்தங்

கள் நிறைந்த இப்பரதகண்டம் முற்றிலும் சுற்றிப்பார்த்தாலும் இப்புண்ணிய தீர்த்தத்திற்கு இணையாகிய தீர்த்தம் பிறிதொன் றில்லையா மென்பது துணிவுடைய சித்தாந்தமாம். மார்கழி மாசத்திலே பூரணையும் திருவாதிரையுங் கூடிய நன்னாளிற்றான் அப்பிசாச வடிவமைந்த வீதிஹோத்திரன் முத்திபெற்றானதலால், அத்தினத்தில் இத்திவ்விய புஷ்கரணியில் ஸ்நானஞ்செய்தல் மிகவிசேடமாம். அப்படிச் செய்யும் ஸ்நானத்தால் எவ்வகைப் பட்ட மகாபாபங்களு மொழிந்து கண்ணுதற் பெருமானது திருவருள் கைகூடப் பெறலாம்.

முனிவர்களே! இச்சரித்திரமானது! மிகவும் புகழத்தக்கது. இதனைப் படிப்பவர் கேட்பவர் தம் பாவங்கள் ஒழியப்பெற்றுப் பத்தியும் வளர்ந்தோங்கப் பெறுவர். இச் சரித்திரத்தினைப் பெரும்பான்மையும் ஆலயங்களிலேயும் அந்தணர் முதலாகிய பெரியோர் கூட்டத்தும் படித்து வருவார்களாயின், அதனால் பரமேஸ்வரன் திருவுளமகிழ்ந்து அருள்புரிவார், முனிவர்காள்! இச்சரித்திரத்தை நீங்கள் அன்பினோடு கேட்கப் பெற்றீர்கள். இனி அத்தீர்த்த மகிமையைக் கூறுகின்றேன். கேட்பீர்களாக வென்று மேலுஞ் சொல்லுகின்றார்,

வீதிஹோத்திரன்முத்திபெற்றசருக்க
முற்றிற்று.

ஐந்தாவது

தீர்த்தவிசேடச்சருக்கம்.

தவக்கொழுந்தனைய முனிவேந்தர்காள்! முன்னர் ஓர் சமயத்தில் தேவர்களும் அசுரர்களும் கூடி எக்காலத்தும் அழிவுபெருத திருமேனி பொருந்தப் பெறவேண்டுமென்று ஆசையுற்று மந்திரகிரியை மத்தாகக்கொண்டு மால் குடிகொள்ளும் அலைகள் புரண்டு வீசுகின்ற திருப்பாற்கடலை இறுமாப்போடு தேவமானத்தால் ஆயிரவருடம் இடைவிடாது கடைந்தார்கள். அப்பொழுது இங்ஙனம் இறுமாப்போடு கடைகின்ற இருதிறத்தரும் அஞ்சி நடுநடுங்கும்படி அண்டங்களெல்லாம் அடங்கி யொடுங்க ஆவேசத்துடனே முன்னர் ஆலகால விஷமானது தோன்றிற்று. பின்பு ஐராவதம், கற்பக விருக்ஷம், உச்சைசிரவம், சிந்தாமணி திருமாலின் மார்பகத்தே சிறந்து விளங்கும் இலக்குமி தேவியார், திருவமுதே திருமேனியா யமைந்த சிவபிரானது திருமுடியின் கண்ணே விளங்கும் சந்திரன், அகலிகை, அமுதம் என்பன யாவும் முறையே உண்டாயின. அவற்றுள் முதற்கண்ணே உண்டாகி அண்ட கோடிகளை யெல்லாம் அரைநொடியில் தகிக்கத்தக்க கொடிய உக்கிரத்தோடு வெளிவந்த ஆலகால விஷத்தை அமரர்கள் கண்டு நடுநடுங்கிக் கண்ணுதற் பெருமானிடத்துச் சரணம்புக, அ

ப்பரமபதியானவர் கருணைகூர்ந்து படிகம்போன்ற தம
துதிருமேனியிலே கண்டமானது களங்கமுறத் தக்க
தாகக் கொடிய ஆலகால விஷத்தைத் தம் கண்டத்தி
லே அமைத்துக் கறைக்கண்டனென்னும் திருநாமத்
தோடு அன்பரைக்காத்து இன்பளிக்கும் அருண்மூர்த்
தியாய் எழுந்தருளினர். கண்ணுதலார் திருவருளால் இ
டையூறொழியப்பெற்ற தேவர்களும் அசுரர்களும் மீண்
டும் அப்பாற் கடலைக் கடைவாராக, அமுத மண்டலஞ்
சிதறுண்டு அதிலே சில திவலைகள் பற்பல பதிகளிலும்
வீழ்ந்தன. அவற்றில் ஒன்று இவ்வீங்கோய் மலையின்
வடபுறத்தே வீழ்ந்தது. அவ்விடத்திலே முளைக்கும்
புல்பூண்டுகளைப் புசிக்கும் மிருகங்களும் பறவைகளும்
அதன்முன் மடிந்துபோவது வழக்கமாக விருந்தது.
இவ்வமிழ்தத் திவலை அங்கு வீழ்ந்ததின் பின்னர் அ
வைகள் யாவும் அப்படிப்பட்ட துர்மரணத்தையுறா
மல் நெடுங்காலம் உயிர்பெற்று வாழத்தொடங்கின. இக்
காலத்தும் விஷச்செடிகளைத் தின்று மாண்ட மிருகங்க
ளின்மீது இச்சுத புஷ்கரணியின் தீர்த்தத்தைத் தெளி
ப்பாராயின் அவைமீண்டும் உயிர்பெற் றெழுதல் உண்
மையினும் உண்மையாக நடந்து வருகின்றது. அத்த
டாகத்திலே தண்ணீரில்லாவிடினும் வேறு ஜலங்கொ
ண்டுவந்து அவ்விடத்தில்விட்டுப் பின் அத்தீர்த்தத்தை
எடுத்து உட்கொள்ளினும் சிரசின்மேலே புரோக்ஷிக்

கினும் எவ்விதமான விஷங்களும் ஒழியும், இம்மகாதீர்த்தத்தில் ஒரு கைஜலம் உட்கொள்பவர் பின் ஓர்காலத்தும் தாயின் முலைப்பால் அருந்தாது பிறவித்துயர் நீங்கிப் பரமேசுவரனது திருவடி மலரில் நித்தியானந்த சுகம் எய்தப்பெறுவர். உலகத்திலே வாழும் உயிர்களனைத்தையும் உபசங்காரம் புரியும் தென்றிசைக்கோனை மறலியும் ஓர் காலத்து இத்தலத்தடைந்து, தன்னிலை என்றும் தளர்வுறாதிருக்க மலைமகளை ஓர் மருங்கமைத்த மாதேவன் திருவடிமலர்களை மிகுந்த அன்பினோடு வணங்குதல் செய்து அழியாவரத்தினைப் பெற்றான். பொன்னிமாநதியின் வடகரையிலே இம்மரகதாசலத்தி னருகில் தென்புறத்தில் அம்மறலி இயற்றிய திவ்விய தீர்த்தம் ஒன்றிருக்கின்றது. அம்மகா புஷ்கரணியில் மார்கழிமாதத்திலே வரும் மங்களவாரத்தில் சூரியோதய மாகும்போது கோமயம் கருந்திலம் என்பனவற்றைச் சிரசிலிட்டு ஸ்னானம் செய்பவர்பின் ஓர் பொழுதும் பிறவிக்கடலில் மூழ்கார். அத்தீர்த்தத்திலே தருமதேவதையின் உள்ளம் மகிழ்வெய்த மாததானமும் அமாவாசையில் தத்தம் பிதுர்களுக்குத் தருப்பணமும் ஒருவன்செய்வானாயின் அவன் பிதுர்க்கள் கண்ணுதற் பெருமானது திருவடி மலர்களை அடைந்து என்றும் அழியாத நித்தியானந்தசுகம் எய்தப்பெறுவர். அத்தடாகக் கரையில் இருந்து சற்பாத்திரமாயுள்ள அந்

தணன் ஒருவனுக்கு ஓர்கவள அன்னமேனும் ஒருவன் இடுவானுயின் அவன் எக்காலத்தும் கைலேயங்கிரியை விட்டு நீங்காத நல்வாழ்வு பெறுவான். ஒருவர்க்களித்த அத்தான பலன் கோடி அந்தணர்க்கு மற்றைய விடங்க ளிலிருந்து அளிக்கும் அன்னதான பலனினும் அதிக மாம். இயமதீர்த்தக் கரையிலும், திருப்புளியடியிலும், சுதர புஷ்கரணி யருகிலும் இருந்து அன்னதானஞ் செய்யின் அதன் பயன் ஓர் அளவையில் அடங்கத்தக்கதன்று. இம் மரகதாசலத்திலே முன்பு ஓர்பொழுது கார் வண்ணனுகிய கண்ணன் மலேமகள் பங்கனுகிய மகேசுவரனே அன்பினேடு வழிபட்டு வேதாதிகாரம், வேள்வி பாகம், உலகாதிபத்தியம், உயர்வைகுந்தம் இவைகளேப் பெற்ருர். இத் திருமலேயின் கண்ணே மாகதலிங்கப் பெருமானது திருச்சந்நிதியில் நின்று அவனே என்றுந் தரிசித்து வருபவர் பாவம் தொலேயுமாறு ஓர் திவ்விய தீர்த்தத்தையும் அவர் அங்கே உண்டாக்கி வைத்தனர். மாகமாசத்துப் பூரணேயிலாதல், மக நக்ஷத்திரத்திலாதல் விடியற்காலேயி லெழுந்திருந்து "தசிஷோண:" என்னும் மந்திரத்தை யுச்சரித்து விஷ்ணு தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுபவர்கள் இம்மையிலே அடைதற்பாலனவாகிய சுகங்க ளனேத்தையும் குறைவின்றிப் பெற்று மறுமையிலே கைலேயம்பதியிற் சென்று பரமானந்த சுகம் அனுபவிப்பார்கள். அன்றைய தினத்திலே

அவ்விடம் செய்பவர் விதிவழுவாது விஷ்ணு மூர்த்தியையும் பூசித்தல் வேண்டும். பஞ்சாமிர்தம், பஞ்சகவ்வியம், பழ ரசங்கள் என்பவற்ருலும், ஏலம், இலவங்கம், விலாமிச்சு முதலிய வாசனு திரவியங்களைக் காவேரியாற்றின் நீரிலே கலந்து அத் தீர்த்தத்திலே நூறுகுடம் கொண்டும் மரகதேசுவரனுக்கு மகாபிஷேகஞ் செய்விப்பவர் எக்காலத்தும் அழியாத சிவபதவியை உறுவர். வைகாசி மாசத்துச் சுக்கிலபக்ஷத்திலே நடக்கும் பிரமோற்சவ காலத்துச் சித்திரா நக்ஷத்திரத்தில் இரதா ரூடராய் எழுந்தருளுங் கண்ணுதற் பெருமானை இருகண்களும் களிகூரத் தரிசித்து அப் பெருமானது திருவடி மலர்களைக் களங்கமற்ற உள்ளத்தினுலே மறவாது சிந்திப்பவர் பெறும் பேற்றின்பெருமை எம்மாற் சொல்லும் தகையதன்று. முத்து, பவழம் என்பனவும் பிறவுங் கலந்து தொடுக்கப்பட்ட உருத்திராக்ஷ மாலைகளைக் கறைமிடற் றினையுடைய கண்ணுதற் பெருமானது திருமேனியில் புனைந்து போற்றின், தாம் எண்ணிய சித்திகள் யாவும் உடனே மென்மேலும் கைகூடப் பெறலாம். படிக மணிகளையும், பவழங்களையுங் கலந்து அணியின் அதனுல் சாயுச்சியபதம் பெற்றுய்யலாம். தைப்பூசத்திலே காவேரி நதியில் நீராடி மரகதேசுவரனைப் பூசித்து இவ்வீங்கோய் மலையை வலம்வருபவன் இப்பெரிய பூமண்டலத்தைப் பிரதக்ஷிணஞ் செய்தபய

ணைப் பெறுவானென்பது சத்தியத்தினுஞ் சத்தியமாம். இவ்வாறு செய்தற்கு வலிமை யற்றவன் புளியடி சென்று அங்குவிட்டு அதுவனாயில் ஒன்ருகத் திருவலம் வருபவன் ஒவ்வோரடியிலும் அசுவமேத அருவேள்விப் பயனைப் பெறுவான். அவ்வாறுசெய்யும் அன்பினர்க்கு அநேக சன்மங்களிற் செய்த பாவங்கள் அகன்றிடும். நெய்யினுலேனும், எண்ணெயினுலேனும் ஒன்று அல்லது இரண்டு விளக்கினை அவன் சந்நிதியில் ஏற்றுபவர் என்றும் குன்ருத பேரறிவு விளங்கப் பெறுவர். திருநந்தன வனங்கள் வைப்பவரும், மாலை நிருத்தனங்கள் செய்பவரும், கீதங்கள் பாடுபவரும், அணுநொடிப் பொழுதேனும் அம்மலையின் கண்ணே வசிக்கப் பெறுபவரும் இல்லற நெறியின்கண்ணே இம்மையிற் பெறற்பாலனவாகிய சுகங்கள் அனைத்தும் எய்தப்பெற்று மறுமையிலே ஞானச்சுடரோங்கப்பெறுவர். அது வன்றி அவருடைய கீர்த்தி என்றும் அழியாது நிலையுறும். சிவபெருமானுடைய திருவருள் கிடைக்கப்பெற்று அவர் திருவடி நீழலில் வாழவும் பெறுவர். இப்பதியினை யடைந்து மரகதேசுவரனுடைய மகாசந்நிதியிலே ஒருமுறையேனும் பலமுறையேனும் வாத்திய கோஷ்டம் முழங்குபவர் சிவபிரானுடைய திருவடி நீழலைப் பெற்றுய்வாரென்பது சத்தியமொழியாம் என்றுரைத்தனர்.

தீர்த்தவிசேடச்சருக்கம்முற்றிற்று.

ஆறவது
விஞ்ஞாபனச்சருக்கம்.

இவ்வாறுரைத்த சூதமாமுனிவரை நைமிசாரணிய முனிவர்கள் வணங்கி, வாரீர்சூதமுனிவரே! அருட்பெருஞ் செல்வரோ! எல்லா முணர்ந்த முனிவர்கோவே! கலைகளனைத்தும் கசடறக் கற்றவள்ளலே! உண்மை யறிந்த உத்தம புருஷரே! புராண முணர்த்தும் புண்ணியசீலரோ! உலகெலாங்கடந்த உண்மைப்பொருளாகிய பரமபதியே இவ்வாறு இங்கு எம்மை யாட்கொள்வான் ஓர் திருவுருக்கொண் டெழுந்தருளினரோ! யாதென்று சொல்லக்கடவோம்- முன்னம் ஓர் சமயத்திலே இந் நைமிச வனத்தில் சத்திரயாகம் செய்தபொழுது நீர் எம்மீது கருணைகூர்ந்து எழுந்தருளிப் பகர்ந்த பற்பல புராணங்கள் வாயிலாக க்ஷேத்திர மான்மியம், தீர்த்தமான்மியம், வருணாசிரமவிதி, அவ்வவ் வருணத்தவர் தொழில், அவரவராசாரம், அவற்றி னுற்பத்தி, அவற்றி னிலக்கணம், கன்மங்களின் வேறுபாடுகள், நல்வினை தீவினைகள், சுவர்க்க நரகங்களின் இயல்பு, அவ்வக்கன்மங்களின் பயன், விருப்பத்தின் முடிவு, விதியின் வலி, விபூதி யுருத்திராக்ஷ முதலியவற்றின் மேன்மை சிவபூஜாவிதி, அதன்பயன், மற்றுள்ள விரதங்களின் மான்மியம், அவற்றின் பயன், பிதா மாதாக்களின் வழி

பாடு, அவற்றின் பயன், கங்கை, கோதாவரி, நருமதை, துங்கபத்திரை, சிந்து, சோணபத்திரை, வேகவதி, தாமிரபரணி முதலாகிய பற்பல மகாநதிகளின் தீர்த்தமகிமை ஆகிய இவையெல்லாம் குறைவின்றிக்கேட்டோம். இன்று இவ்விங்கோய் மலையின்கணுள்ள திந்திரிணீ வனத்தின் மான்மியத்தைக் கேட்க ஆவல்கொண்டுள்ளோம். ஆதலால் எம் மீது கருணை கூர்ந்து அதனை அருளிச் செய்வீராக வென்று வேண்டிக் கொள்ளுதலும், சூதமுனிவர் மனமகிழ்ந்து கூறுகின்றார்.

அருமறைமுடியை யறிந்த அந்தணர்களே! நாம் செய்த நற்றவப்பயனே உங்களை இச்சமயத்திலே திந்திரிணீவன மான்மியங் கேட்கச் செய்தது. அதனை ஒருவர் சொல்வதும் கேட்பதும் அளவில்லாத புண்ணியத்தைத் தருமாதலால், நீங்கள் உங்கள் மனத்தை ஓர் வழியில் நிறுத்தி அன்பினோடு உற்றுக் கேட்கக்கடவீர்களாக.

முனிவேந்தர்காள்! உலகத்திலே இத்தல மான்மியம் இரகசியமாக நின்றுள்ளது தெய்வ இலக்கணம் ஓர்ந்துணரமாட்டாது தம் புல்லறிவுகொண்டு நிந்தித்துழலும் துரோகிகளாகிய நாத்திகர்களுக்கு இதன் பெருமையைப் பகர்ந்திடில் அதுமிக்கபாவத்துக்கு ஏதுவாம் காவேரி யாற்றின் வடகரையிலே, வாட்போக்கி யென்

னும் இரத்தினகிரியின் உத்தரபாகத்து, ஒன்பது சிகரங்கள் ஆகாயத்தை அளாவி உயர்ந்து சிறந்து விளங்கும் மரகதமலை யென்னும் மகிமை பொருந்திய திருப்பதி யொன்றிருக்கின்றது. அதுதன்னிடத்தே அன்புள்ளார் விரும்பிய பொருள்களைக் குறைவின்றி யளிக்கத் தக்கது. எம்மையெல்லாம் ஆளும் கண்ணுதற் பெருமானுன அமலன் அம்மலையின்கண்ணே பனிவரைப் பயந்த பார்வதியாரோடு மரகதாசல நாதனென்று யாவரும் இறைஞ்சியேத்த எழுந்தருளியிருந்து அநுக்கிரகித்து வருகின்முன் என்று சொல்லிக்கொண்டு போம் பொழுது முனிவர்கள் சூதமுனிவரை வணங்கிக் கேட்கின்முர்கள்.

விஞ்ஞாபனச்சருக்க முற்றிற்று.

ஏழாவது

நவசித்தர்பூசித்தசருக்கம்.

ஓ சூதமாமுனிவரோ! புராணிகர்மணியே! நூல்களனைத்து மோர்ந்த நுண்ணறிவுடையோய்! ஒன்பது சிகரங்களுடையது அம்மலையென் றுரைசெய்தீர். அச்சிகரங்களில் எச்சிகரத்தை எவ்வெக்காலங்களிலே தரிசனஞ்செய்தல் வேண்டும். அவைகளை அப்படித் தரிசனஞ்செய்தலினல் ஆம்பயன் இன்னது என்பதும் அறிவி

ப்பீர். அதுவன்றி அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பி ரானுக்கு மரகதாசல மூர்த்தியென்னும் பெயர் உண்டா கிய காரணமும், பிராட்டியார்க்கு மரகதாம்பிகை யெ ன்னும் திருநாமம் வழங்குதற்குக் காரணமும், அம்ம லைக்கு மரகதாசலமென்னும் பெயரும், ஈங்கோய்மலை யென்னும் பெயரும் உண்டாய காரணங்களும் அடியே ங்களுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது சூதமுனிவர் அவர்களைப்பார்த்து, முனிமன்னர்காள்! அம்மலையின் மான்மியத்தை எடுத் துச்சொல்ல நான் வலியுடையே னல்லேன். ஆயினும் எம்மையனாகிய வேதவியாச முனிவருடைய திருவரு ளினால் அறிந்தவளவில் எடுத் தோதுகின்றேன். அற வர்காள்! முன்பு ஓர்காலத்திலே உலகெலாந் துதித்தி றைஞ்சும் கைலையங்கிரியில் முக்கட் பெருமானது சந் நிதியில் சித்தர் ஒன்பதின்மர் ஒருங்குகூடிச் சென்று அரிய பெருந்தவம் இழைத்தற்கு ஏற்ற அருண்மருவிய திருப்பதி யொன்று பெறுதற்கு விரும்பினராய், அப் பரமபதியினுடைய திருவுள்ளம் மகிழ்பூக்கும்படி அவ ரது திருவடித் தாமரைகளிலே பல்முறைவிழுந்து நம ஸ்கரித்து எழுந்து, ஓ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா! தேவாதி தேவா! அடியேம் உனது திருவடி மலரை என்னாளும்விட்டு நீங்காத பரமுத்தியென்னும்

பதவிபெற் றுய்யும்பொருட்டு, அதன்பயனை எளிதிலே தரத்தக்க மகிமைபொருந்திய திவ்வியதலம் யாது! அதனை அருளிச்செய்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது கருணைசமுத்திரமாகிய சிவபெருமான் அகமகிழ்ந்து "ஓ சித்தர்காள்! பூவுலகத்திலே காவேரிநதியின் வடபாலில் மரகதகிரியென்னும் மலையொன்றிருக்கின்றது. அவ்விடத்திலே நீவிர்போந்து தவம் இயற்றுவீராயின் நாம் அங்கே எழுந்தருளி உம் விருப்பத்தை முடிக்கின்றோம். அவ்விடத்து நீங்கள் தனித்தனியே இருந்து தவம் புரிதலால் ஓர் முடியினையுடைய அச்சைலம் இனி ஒன்பதுமுடிகளையுடைத்தாய் விளங்கும். இவ்வுண்மையை நீங்கள் மனத்திலேகொண்டு அங்குசென்று தவம்புரியக் கடவீர்களாக" என்று கட்டளையிட்டனர், இவ்வாறு அழகிய பாலசந்திரனைச் சடாபாரத்திலே தாங்கிய எமது பரம்பொருளாகிய சிவபிரான் திருவாய்மலர்ந்த அருண்மொழிகளைக் கேட்ட சித்தர்கள் அன்பினோடு அவரைவணங்கி விடைபெற்று அவ்விடம்விட்டுத் தென்றிசை நோக்கி விரைவாகநடந்துசென்று காவேரியாற்றின் கரையை அணுகி மரகதகிரியினது மாட்சிமையைக் கண்களினால் தரிசித்தார். இவர்கள் அம்மலையைக் கண்களினால் பார்த்தவுடனே அம்மலைக்கு ஒன்பதுமுடிகள் உண்டாயிற்று. அவ்வற்புதத்தைக்கண்ட சித்தர்கள் அதிசயித்துக் காவேரி

யாற்றிலே நீராடி அம்மலேயின்மேல் ஏறி ஒவ்வோர்முடியின்மீது ஒவ்வோர் தவச்சாலே அமைத்து உணவுநீக்கிப் பொறிகளேயடக்கி உள்ளத்திலே பரசிவப்பொருளே இடைவிடாதிருத்தி வேனிற்காலத்திலே கொடிதாகிய அக்கினிமத்தியிலும், மாரிகாலத்திலே கழுத்தளவினதாகிய தண்ணீர் நடுவிலும் நின்று பன்னீராண்டு சொல்லற்கரிய கடுந்தவத்தினே நேர்மையோடு இழைத்தார்கள். இவ்வண்ணம் பன்னீராண்டு சென்றவுடனே தவநெறியிற் பிறழாத அச்சித்தர்கள் எதிரே மலேமுடியின்கண் மரகதச்சாயலாக இலிங்கவடிவங்கொண்டு பார்வதிதேவியார் பக்கத்திலே பொருந்த எம்பெருமாஞன பரமேஸ்வரன் அங்கு எழுந்தருளினுர். சித்தர்கள் ஒன்பதின்மரும் அவ்விலிங்கத்தைக் கண்ணுற்று அன்புமிகுந்து அடிவணங்கி விதிப்படி பூசைசெய்யக்கருதி, குற்றமற்ற வில்வபத்திர, தாமரை, செங்நெய்தல். கருநெய்தல், மல்லிகை, வெட்சி, புன்னே, அரலி, செவ்வரத்தை, மாதுளே, மந்தாரை, கோங்கு, இலவுமுதலிய மலர்கள் என்னும் இவைகளேக்கொய்துவந்து, பால், தயிர், நெய், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், சந்தனம், சுத்தோதக முதலியவற்ருல் அபிஷேகம்புரிந்து, பட்டுப் பரிவட்டமும் இரத்திஞபரணங்களும் அணிந்து அலங்கரித்துத் தாம் முன்புகொண்டுவந்த அழகிய மலர்களேப்புனேந்து பலவகைப்பட்ட பழவர்க்கங்களேயும் சித்திரான்னங்

களையும் பிறபொருள்களையும் நிவேதித்து, தாம்பூலம். நீராஞ்சனம், சத்திரம், சாமரம், நிருத்தம், கீதம் முதலா கிய சகல உபசாரங்களும்செய்து அருச்சித்துத் தோத் திரஞ்செய்து வணங்கினார்கள்.

நவசித்தர்பூசித்தசருக்கமுற்றிற்று.

எட்டாவது

நவசித்தாருள்பெற்றசருக்கம்.

அந்தணர்மணிகாள்! சிறப்புற்றோங்கி விளங்கும் அவ்விங்கோய்மலையின்கண் ஒன்பது சிகரங்களிலும் குடிகொண்டசித்தர் ஒன்பதின்மரும் ஆயிரவருஷம் முற் கூறியபடி பூசித்துத் தவஞ்செய்து நிற்க, அக்காலையில் அன்பர்துயரம் அகற்றிடுவோனும், கோடிப்பிரகாசம் பொருந்தியவனும் உலகெலாம்வியாபித்து நின்றதனிச் சுடரும்முப்புரமெரித்தோனுமாகிய முக்கட்பிரான்மலை மங்கை ஓர்பாகத்தமர வெண்மையாகிய இடபவாகன த்தின்மீது எழுந்தருளிப் பரமானந்த தரிசனம் கொடுத் தருளினார். அப்பொழுது ஊனுடல்பெற்ற இவ்வொன் பதின்பர் தமது தசைவிழிகளால் அப்பெருமானதுதிரு மேனியைத்தரிசிக்க ஆற்றலற்று மயங்கிநிற்க அவர்மீது கண்ணுதலார் திருவருள்கூர்ந்து அகக்கண்ணாகிய ஞான

நயனத்தை விளங்கச்செய்தார். அன்புமிக்குள்ள அச்சித்தர்கள் அகக்கண்திறத்து அரனர் திருவுருவத்தைத் தரிசித்து அடியற்றமரம்போற் கீழ்விழுந்து மெய்ம்மறந்து அன்புமிகவுற்று உலகவாழ்வைவெறுத்துச் சிவபிரானுடைய பாதங்களை நமஸ்கரித்தபடியே சிறிது நேரங்கிடந்து பின் எழுந்துநின்று ஆனந்தங்கொண்டு தம்முள்ளத்திலே அன்பின்பெருக்கால் நிறைந்துவழிகின்ற அருமறைப்பொருள் நிறைந்த மேலாகிய புனிதமொழிகளால், "தேவர்க்குத்தேவனே, அன்பர்க்கு அன்பனே, மலைமகள்மணாளா, மரகதாசலநாதா, நீள்பெருஞ்சுடரே, உலகத்தார்க்கு உகந்த மங்களசொரூபனே, ஆதியந்தமற்ற அண்ணலே, ஞானவடிவாயமைந்த நாதனே, எங்குமாய் நிறைந்த எழில்பெறுவடிவோய், பன் மூர்த்திகடமை ப்பயந்திடும்பரனே, இரண்டு ஆறு பன்னிரண்டுகளால் அளவிடப்பட்ட அரும்பொருளே, நிட்டையிற் சிறந்த நின்மலயோகீ, உள்ளக்கமலத் துதிக்கும் உயர் ஞான சூரியா, துவாதசாந்தத்திற் றுலங்கும் சோதிமணியே, பசுக்களின் மலம்போக்கும் பரமபதியே, ஞானிகள் தமக்கெலாம் நாதனு யமர்ந்தோய், மும்மூர்த்திகட்கும் முதல்வனுனவனே, இருநூற்றிருபத்து நான்கு புவனங்கட்கும் தலைவனுயுள்ளவனே, அநாதிமல முத்தனே, ஏகநாயகனே, யோகிகள் குருவே யோகத்தின் பயனே, பொருட்கும் சொற்கும் புறம்பாய் நின்ருேய்

பொருளும் சொல்லுமாய்ப் பொருந்திய முதலே, வாக்குமனங் கடந்த ஆனந்தமயனே, எல்லாம் அறிந்த ஏக நாயகனே, மாயையை யொழிக்கும் மாயா முதல்வா, கலையெலாங் கடந்த கலையே, பற்றற்ற பரமனே, உருவொன்றில்லா உண்மைப்பொருளே, நித்திய முதலே, கருணைத் திருவுருவே, நாதவடிவே, பிரணவப்பொருளே, வேள்விக்கிறையே, கன்மப்பயன்றரு கற்பகக்கொழுந்தே, அண்டங்க ளனைத்தினையும் ஆக்கிநிறுத்தி அழிக்கும் முதல்வனே மூக்குணம்பெற்று மூவுலகப்பொருளாய் அக்குணங் கடந்து அதனினும் வேறாய் அகம்புறம்நிறைந்த ஆதாரப்பொருளே! நின்திருவடிகளை வணங்கினேம், கன்மவலையை யொழித்தோம், ஞானத் திருவமுதுண்டோம், உம்மிடத்து அன்பினுற் கலந்தோம், உம்மையன்றிப் பிறிதொன்றினையும் அறியோம் தனி முதற்பொருளே, நின்னடிக் கபயம்" என்று இவ்வாறு அப்பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபிரானைப் போற்றிசெய்தனர். அப்பொழுது சிவபிரான் மிகுந்த அன்பினோடு புன் முறுவல்செய்து அச்சித்தர்களை நோக்கி "சித்தர்சிரோமணிகாள்! நீவிர்கொண்ட நியமத்தானும், தவத்தானும், பூசையானும், அன்பானும் யாம் மகிழ்வுற்றேம். இங்கெழுந்து உங்கட்குத் தரிசனந் தந்தோம். இனி உமதுகருத்தை நிறைவேற்ற இசைந்தோம் நமது திருவருள் எவ்விடத்தேனும் வீணுகமாட்டாது.

விரைவிலே நீங்கள் விரும்பிய வரத்தைக் கேட்கக் கட வீர்கள்" என்று கருணையோடு திருவாய் மலர்ந்தருள, தவவலிமையிற் சிறந்த சித்தர் ஒன்பதின்மரும் மீண்டும் அம்மாதேவருடைய மலரடியில் வீழ்ந்து பணிந்து எங்கள் நாயகமே! அடியேங்கள் மீது கிருபையுண்டாமாயின் அறுபத்து நான்கு கலைகளும் எங்கட்கு எளிதிலே தோன்றும்படி அருள்புரிதல் வேண்டும். அதுவன்றி உலகத்தாருய்யும் பொருட்டு இவ்வீங்கோய் மலையில் உமாதேவியாரோடு எப்பொழுதும் எழுந்தருளியிருந்து உமது திருவடிமலர்களைத் தரிசிக்கும் மெய்யடியார் வேண்டிய சித்திகள் எளிதிலே கைகூடும்பொருட்டு அருள்புரிதலும் வேண்டும். நாங்கள் இப்பொழுது செய்த இத்தோத்திரங்களைக் காலையிலாவது மாலையிலாவது படிப்பவர்கள் தாம் விரும்பிய பேறுகளை இனிது பெறும்பொருட்டு அருள்செய்தல் வேண்டும் என்று விண்ணப்பஞ் செய்துநிற்க அது கேட்ட சிவபிரான் "நீங்கள் விரும்பியவாறே ஆகக்கடவது" என்று திருவாய் மலர்ந்து பின்னும் "சித்தர்களே! நீங்கள் ஒன்பதின்மரும் தனித்தனி தவமிருந்த இவ்வொன்பது சிகரங்களையும் தூரத்தே தரிசிக்கப்பெற்றவர் தாம்செய்த பாவங்களனைத்தும் ஒழியப் பெறுவார். எமது ஆணையின்படி நீங்கள் ஒன்பதின்மரும் இவ்விடத்திலேயே என்றும் வசிப்பீர்களாக" என்று இங்ஙனம் திருவருள் புரிந்த

னர். அவ்வாறே ஒன்பது சித்தர்களும் அவ்விடத்தில் இன்றும் வசித்து வருகின்றார்கள் என்றுகூறி மேலே சொல்லுகின்றார்.

நவசித்தரருள்பெற்றசருக்கமுற்றிற்று.

ஒன்பதாவது

அபிடேகச்சருக்கம்.

முனிவர்களே: இத்திருப்பதியின் பெருமையை இன்னுஞ் சொல்லுகின்றேன். கேளுங்கள் முன்பு ஓர் காலத்திலே இப்பெரிய சத்தசாகரங்களையும் தம் சிறிய கரத்தின் அகத்தடக்கி வயிற்றின் உட்புகுத்திய குறிய முனி இவ்வீங்கோய் மலையில் கடவுளை வழிபடும் பொருட்டுச் சென்று மரகத நாதனுக்குத் தேனினால் அபிஷேகஞ் செய்யக்கருதிக் கானகம்போந்து தேன்கூடுகளைக்கண்டு ஒவ்வோரிடத்து ஈக்கள்கூடி ஈந்ததேனைக் கடவுளுக்கு அபிஷேகித்தால் அதனா லுண்டாம் பயன் அவைகட் கன்றோ சேரும். ஆதலினால், நாமே தேன் எடுத்து அபிஷேகஞ் செய்தல்வேண்டும் என்றுகருதித், தாமே ஈவடிவங்கொண்டு ஒவ்வொரு மலர்களிலும் சென்று அவற்றிலுள்ள தேனை எடுத்து இவ்வாறு தேவமானத்தால் ஆயிரவருடம் கடவுளுக்கு அபிஷேகித்து வந்தனர். அக்காரணம் பற்றியே அம்மலைக்கு ஈங்கோய

மலையென்னும் திருநாமம் உண்டாயிற்று இப்பொழு தும் அகத்திய முனிவர் ஈவடிவோடு அம்மலையின் கண் ணேயிருந்து சிவபிரானை எந்நாளும் பூசித்து வருகின் றூர். ஓ முனிவர்களே ! வைகாசி மாசத்திலாதல் கார் த்திகை மாசத்திலாதல் அம்மரகதாசல லிங்கத்திற்குத் தேனினுல் அபிஷேகம்புரிந்தால் அதனுலுண்டாம்புண் ணியம் இவ்வளவினதென்று கணித் தோதுதற்குப் பிர மனுலும் இயலாதாம். அப்படிச் செய்பவன் இம்மையி லே மனைவி மக்கள் முதலாகிய சுற்றத்தார் செழித்தோ ங்கப் பெரும்போகம் அனுபவித்து மறுமையிலே மா தேவன்வாழும் கைலைமாமலையில் கணங்களுக்குத் தலை மைபெற்று வாழ்வான், இதைப்பற்றிய மேலாகிய சரி த்திரம் ஒன்று முன்னோராற் சொல்லப்பட்டுளது அத னை இப்பொழுது உங்கட்குச் சொல்லுகிறேன் கேளுங் கள். முற்காலத்தில் ஓர் குரங்கானது இம்மரகதாசலத் தையடைந்து திருப் புளியமரத்தில் ஏறி அதிற்றெங் கும் ஓர் தேன்கூட்டைக் கரத்தினுற் பற்றி யிழுத்தது. அப்பொழுது அதிலுள்ள தேனீக்கள் அக்குரங்கின் கை யிலே விழுந்து கடித்தன. அதனுல் குரங்கானது அத் துன்பஞ் சகிக்கமாட்டாது தேன்கூட்டைக் கைநழுவ விட்டுவிட்டது. அப்படி நழுவிய அத்தேன்கூடு அத னடியில் எழுந்தருளியிருந்த சிவலிங்கத்தின் மேல்விழ அதிலுள்ள தேன் சிவபெருமானுக்கு அபிஷேக மாயி

ற்று. பின் அப்புண்ணியத்தால் குரங்கானது மரகததே சத்துக்கு அரசனுய்ப் பிறந்தது. இப்பூமண்டலத்திற் கெல்லாம் அதிபதியாகப்பெற்ற அவ்வரசன் சுப்பிரபன் என்னும் பெயருடையோனுய் மநுநீதிதவருது மன்னு யிரெல்லாம் தன்னுயிர்போலக்காத்து அரசாண்டுவருங் காலத்தில் ஓர் நாள் பூர்வசன்மவாசனையால் மனைவி, மக்கள், சுற்றத்தார், நண்பினர்களுடனே புரோகிதர்கள், மந்திரிகள், சேனைகள், சேனைத்தலைவர்கள் புடைசூழ இவ்வீங்கோய்மலையையடைந்து காவேரியில் ஸ்நானஞ் செய்து தம்மினத்தாரோடு மரகதாசலப்பெருமானது திவ்வியசந்நிதியையடைந்தான். அவன் அவ்விடத்திலே நூறு பிரமசாரிகளுக்கு நூறுகன்னிகைகளைத் தானஞ் செய்து, இன்னும் பலருக்கு ஆயிரங்கோதானமும் அள விறந்த சுவர்னதானமும் அளித்துப், பின் மரகதேசுவ ரர் ஆலயத்தினுள்ளே புகுந்து மிக்க அன்பினேடு அப் பெருமானது திருவடிமலர்களைப் பன்முறைபணிந்து திருப்புளியினடியில் எழுந்தருளியிருக்கின்ற அப்பெரு மானுக்கு விதிப்படி மகாபூசையும் செய்வித்துத் தம் அறிவுக்கெட்டிய பற்பலதோத்திரங்களால் போற்றிசெ ய்தான் அவ்வரசன் பின்பு அக்கோயிலுக்குப் பற்பல பிரகாரங்களையும், கோபுரங்களையும் மதில்களையும் உண் டாக்கி அவற்றில் சிறந்த பல இரத்தினங்களையும் பதிப் பித்தான். அதுவன்றிப் பல மண்டபங்களையும் இயற்றி ஞன். பின் அச்சுப்பிரபமன்னன் அதுமுதல் தினந்

தோறும் குறுணிதேனுக்குக்குறையாது அம்மரகதலிங் கப்பெருமானுக்கு அபிஷேகம் புரிவித்துவந்தனன்.

அபிடேகச்சருக்கமுற்றிற்று.

பத்தாவது

இந்திரன் மந்திரோபதேசம்பெற்றசருக்கம்.

இவ்வாறு அச்சுப்பிரபமகாராஜன் இடைவிடாது மரகதாசலமூர்த்திக்குத் தேனினல் அபிஷேகம்புரிந்து வருநாளில், ஓர் நாள் சிவபிரான் அவனுடைய அன்பை அளவிடக்கருதி அன்று எவ்விடத்தும் தேன்கூடு கண் ணுக் கெட்டாதிருக்கச் செய்தனர். அரசன் எங்கும் அலேந்து தேடியும் தேன்கூடு அகப்படாமையினுல் மனம் வருந்தித் தன்காதுகளை வாளினுல் அறுக்கத் தொடங்கினுன். அப்பொழுது கோடிசூரியப் பிரகாச மும் கோடிசந்திர சதளமும் உடையராய்த் தமது இட ப்பாகத்திலே மரகதாம்பிகையார் மருவியிருக்கத் திரு விழிகளிரண்டினும் கருணேமாரி பெருகியோட இளம் பிறைசூடிய எம்பிரான் அவ்வன்பன்முன் தோன்றி வாளேந்திய கரத்தோடு அவனே எடுத்து மடிமேலிருத் தித் திருவருள்புரிந்து கைலேயங்கிரிசென்று தாமே அவ னேச் சிவகணங்களுக்குத் தலேவாக்கினுர். அது கண்ட

தேவர்கள் பூமாரிபொழிந்து துதித்தார்கள். பூதகணங்கள் போற்றிசெய்தன. கந்தருவர் கானஞ்செய்தனர். அரம்பை மங்கையராடினர். நாரதர்முதலியோர் தமது வீணைகளை மீட்டிப் பாடினர். தேவதுந்துமிகள் முழங்கின. மற்றுள்ளோ ரனைவரும் அவ்வற்புதத்தைக்கண்டு துதித்து ஆனந்தங்கொண்டார்கள். முனிவர்காள்! இஃது அங்குநடந்த மான்மியங்களில் ஒன்றும். இவ்வாறு அம்மரகதாசல க்ஷேத்திரத்திலே சித்திபெற்றோர் எண்ணிலருளர்.

முன்னாளில் அகலிகையை மதிக்கேட்டால் தொட்ட கொடும்பாவம் தன்னைப்பற்றி வருத்துவதை அறிந்த அமரர்கோமான் நாணமுற்றுத் தன் அங்கத்தைப் பிறர் காணாதிருக்க அவனுடைய நாட்டிலுள்ள மானசவாவியுள்மூழ்கி மறைந்திருந்தான். தேவர்கள் யாவரும் தம் இறைவன் அவ்வாறிருத்தலைக்கண்டும், அவனுக்கு அது தீரத்தக்க ஓர்வழி கற்பிக்க வலியற்றவராயினர். இவ்வாறு சில நாள்கழிய ஓர்நாள் அவ்விந்திரனிடத்தே உலகத்தவர் யாவரும் தவசிலரொன்று புகழ்ந்து துதிக்கும் நாரதமுனிவர் வந்தனர். அம்முனிவர் வரவைக் கண்ட இந்திரன் எழுந்து நாணத்தோடு அவரை வணங்கி அஞ்சலிசெய்து நிற்க, நாரதர் அவனைப் பார்த்து “ஓ அமரர் வேந்தனே! நீயாது காரணத்தால் இத்தண்ணீரில் மூழ்கிநிற்கின்றாய்? உனக்குவந்த இத்துன்பம்

ஒழியத்தக்கதாக நாம் ஓர் உபாயஞ் சொல்கின்றோம். இந்திரனே! நீ கண்டவர்தம் கசடறுத்துக் கைவல்லிய மருளும் திருப்புளிவனம் அடர்ந்த மரகதாசலத்தை அடைந்து அவ்விடத்தில் ஈவடிவங்கொண்டு எழுந்தருளியிருக்கும் அகஸ்தியமுனிவரை வணங்கி அவரிடத்திலே மந்திரோபதேசம் பெற்று எப்பொழுதும் அவ்வீங்கோய் மலைநாதனைப் பூசிப்பாயாயின் உனக்கு இக்குற்றம் நீங்கும் என்று திருவாய் மலர்ந்தருள, அம்மகபதி உடனே மரகதாசலத்தை யடைந்து அங்கு ஈவடிவோடிருக்கும் மெய்ஞ்ஞானச் செல்வராகிய அகத்தியமுனிவரைக் கண்டு அவர் திருவடிமலர்களைப் பணிந்து தமக்குற்ற அத்தீவினையின் செயலை அவரிடத்தே முறையிட்டுக் கண்களில் நீர் சொரியத் துயர்க்கடலுள் ஆழ்ந்து நின்றான். இங்ஙனம் அலங்கோலத்துடனே எதிர்நின்ற அமரர்கோனை அம்முனிவர் பெருமான் கண்ணுற்றுத் திருவுளமிரங்கி, ஓ இந்திரனே! அஞ்சுதலொழிக. என்னிடத்து வந்தடைந்த உனக்கு இனித் துன்பமேது. உன் உள்ளக் கருத்தை உணர்ந்தேன் நீ செய்தபாவம் உன்னைவிட்டு ஒழியும் பொருட்டு ஓர் நல்வழி கூறுகின்றேன் என்று நீ இப்பொழுது காவேரிநதியில் நீராடிவரக்கடவாயென்று கட்டளையிட்டு, அங்ஙனஞ் செய்துவந்த அமரர் கோமானுக்கு ஓர் அரிய மகாமந்திரத்தை உபதேசித்தருளினர் என்று சூதமுனிவர் சொல்

விக்கொண்டு போதலும், நைமிசாரணிய முனிவர்கள் இடையே எழுந்து வணங்கி நின்று சொல்லுகின்றூர்கள்,

இந்திரன்மந்திரோபதேசம்பெற்றசருக்கமுற்றிற்று.

பதினேராவது

இந்திரன்பூசித்தசருக்கம்.

நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரைப் பார்த்து, கிருபாசமுத்திரமே! அறிவிற் சிறந்த அருந் தவமணியே! அவ்விந்திரனுக்குக் குறுமுனிவர் உபதேசித்தருளிய மகாமந்திரம் யாது? அதனை எங்களுக்கு அருளிச்செய்தல் வேண்டுமென்று பிரார்த்திக்க, அது கேட்ட சூதமுனிவர் அவர்களை நோக்கி, ஓமுனீந்திரர்காள்: அதி இரகசியமான அம்மந்திரத்தை உங்களுக்குச் சொல்லுகின்றேன். அதனை ஈசுரபக்தியற்ற அறிவில்லாத மூடர்களுக்கு ஓர்காலத்தும் சொல்லாதீர்கள், அன்புடையீர்! அம்முனிவர் அருளிய,

“தேவர்கள்யார்க்குமேலாந் தேவமின்கொடிபொற்பாங்கர்
மேவுமைதனக்குநாத மேன்மைசால்மரகதேச
பூவடிசரணடைந்தேன் போக்குதியடியேன்செய்த
தீவினையனைத்துஞான தேசிகமுதல்வவின்றே”.

என்னும் இவ்வாநுஷ்டுப மகாமந்திரம் எப்படிப்பட்ட மகாபாபிகள் தியானிப்பினும் அவர்செய்த கொடும்பாவங்களனைத்தையும் வேரறக்களைந்து அவர் விரும்பிய சித்தி முத்திகளை எளிதிலே அருளிச்செய்து மரகதேசப் பெருமானுடைய திருக்கருணையையும் தப்பாது உண்டாக்கத்தக்கது. இதற்கு இருடி அகத்தியர். சந்தம் அநுஷ்டிப்பு. தெய்வம் கிருபாசமுத்திரமாகிய மரகதாசல நாதராம். சர்வ பாவங்களையும் போக்குவதில் இதற்கு விநியோகம். தவமுதல்வராகிய முனிவர்களே! இம்மந்திரத்தினை அகத்தியர் பெருமான் அவ்விந்திரனுக்குபதேசித்து அவனைப் பார்த்து, ஓ பண்ணவர் தலைவனே! நீ காலைப்பொழுதில் எழுந்திருந்து சர்வபாவங்களையும் போக்குங் காவேரிநதியிலே நீராடிச் சுசியோடு காலைக்கடனை முடித்துக்கொண்டு ஸ்ரீமரகதேசப் பெருமானது திருக்கோயிலிலே சென்று அவர் சந்நிதியிலிருந்து இம்மந்திரத்தினை ஆயிரத்தெட்டுமுறை செபிப்பாயாயின் உன்னை அணைந்து வருத்தும் இக்கொடிய பாவம் உடனே ஒழிந்துவிடும். உன்னுடைய அங்கத்திலே தோன்றும் யோனிகளெல்லாம் கண்ணுதற்பெருமானது திருவருளால் கண்களாகப்பொருந்தும். பின்பு நீ மரகதலிங்கப் பெருமானுக்குக் கீழ்புறத்தில் ஓர் தீர்த்தத்தை உண்டாக்கி அவ்விடத்திலே ஓர் சிவலிங்கத்தையும் அமைத்துப் பூசிக்கக் கடவாய் என்று அருளிச்செ

ய்ய, இந்திரன் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு தேவ மானத்தால் ஆயிரவருடம் மரகதாசல மூர்த்தியை அவ்வாறு வழிபட்டுவந்தான். அப்பொழுது இளமைபொருந்திய வெள்ளிய சந்திரனைத் தமது சடாபாரத்தின் கண்ணே தாங்கிய அருட்கடலாகிய சிவபிரான் அவ்விலிங்கத்தின் கண்ணே தோன்றி அவனுக்குத் தரிசனங்கொடுத்தருளினார். அப்பொழுது அரிபிரமர்களாலும், ஆரணக்கடல்களாலும் அளந்தறியப்படாத அருண்மயமாகிய திருமேனியைத் தமது அன்பாகிய வலையினால் அகப்படுத்தி எளிதிலே தெரிசிக்கப்பெற்ற அமரர்கோமான் அடியற்ற மரம்போற் பூமியில்விழுந்து பலமுறை வணங்கி எழுந்து நின்று அப்பெருமானது திருவடி மலர்களை அன்பினோடு தோத்திரஞ் செய்வானாயினான்.

இந்திரன்பூசித்தச்சருக்கமுற்றிற்று.

பன்னிரண்டாவது

இந்திரன் அருள்பெற்றசருக்கம்.

"ஓ நின்மல மேனியனே, நித்தியானந்தனே, ஞானசொரூபியே, நான்மறைமுடியிற் றுலங்கும் நன்மணியே, அளவில்லாத அருட்குணங்கள் குடிகொண்ட முதல்வனே, உலகங்கள் அனைத்திற்கும் தலைவனே, ஒப்பு

யர்வற்ற தனிப்பொருளே, அந்தர்யாமீ, பார்வதிநாதா, அடியார்க்கடியே, வெள்விடைக்கொடியாய், கருணைக் கடலே, பாசமொழிக்கும்பரமபதியே, அன்பர்துயரமக ற்றும் பிரபுவே, மரகதாசலநாதனே, நின்திருவடிகளைப் பணிந்தேம்; என்பாவத்தை யொழித்தருளல்வேண்டும். புதல்வர்செய்த பிழையைப்பெற்றோர் பொறுத்தல் கட மையன்றோ" என்று இவ்வாறு விண்ணகராளும் இந்திர னனவன் தோத்திரஞ்செய்ய, அப்பொழுது சிவபிரான் கருணைகூர்ந்து முகமலர்ந்து ஓ இந்திரனே! நின்னன்பு க்கு அகமகிழ்ந்தோம். உனக்குவேண்டிய வரத்தைக் கேட்பாயாக என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகே ட்ட இந்திரன் கரங்களைச் சிரசின்மேற்கூப்பி அஞ்சலி செய்து, எம்பெருமானே! தேவரீரது திருவருளால் தமியேன் அகலியைத்தொட்ட தீயபாவம் ஒழியும்பொ ருட்டு அநுக்கிரகஞ்செய்யவேண்டும். அதுவன்றி அவ் வகலிகையின் நாயகனுகிய கௌதமன் இட்டசாபத்தால் என் அங்கத்திற்றோன்றிய அல்குன்மாலை அனைத்துமொ ழிந்து அவைகண்களாக அமையும்பொருட்டும் அருள் புரிதல்வேண்டும். அடியேன் தேவரீருடைய திருவடி மலர்களை எக்காலத்துமறவாத பெருஞ்செல்வம் தரு தலும்வேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபிரான் இந்தி ரனே! நீ விரும்பியவாறே ஆகக்கடவதென்று திருவாய் மலர்ந்து அவ்விலிங்கத்திற்றனே மறைந்தருளினர்.

அதுமுதற்கொண்டு அவ்விந்திரனுக்கு ஆயிரங்கண்ண னென்னப்பெயருண்டாயிற்று, இங்ஙனம் தன் அங்கத் திலே வெறுப்பொழிந்து விருப்பம்பெற்ற அத்தேவேந் திரன் மிக்க சந்தோஷத்தையுடையவனாய் நாடோறும் மரகதாசலமூர்த்திக்குப்பெரும்பூசைசெய்துபிரகாரம், கோபுர முதலியவற்றை நவரத்தினங்களால் அமைத்து வைகாசிமாசத்திலே மஹோற்சவமும் செய்வித்தான். இவையன்றிப் பற்பலகொடிகளும், தோரணங்களும் வீ திகளிலே பிரகாசிக்க அருமலர்களால் அலங்கரித்துப் பூரணையினன்று சிறப்புடைய தீர்த்தோற்சவமும் புரி வித்தான்.

முனிவர்களே! இன்னும் அதன் பெருமைகளைச் சொல்லப் புகின்மிகப்பெருகுமாதலால் சிறிதுசுருக்கிச் சொல்லுகின்றேன். அமாவாசை பூரணைகளிலேனும், சந்திரசூரியகிரகணங்களிலேனும், சிவராத்திரியிலேனும் பிரதோஷகாலத்திலேனும், சங்கிரமணத்திலேனும், இவ் வீங்கோய்மலையின் கண்ணே மரகதாசலமூர்த்திக்குத் தேன் அல்லது பாலினால் அபிஷேகஞ்செய்விப்பது மிகு ந்தபுண்ணியமாம். அப்புண்ணியத்தின்பயனை இவ்வள வினதென்று அயன்றானும் எடுத்துரைக்க ஆற்றலு டையவனல்லன். அம்மலையின்கண்ணே யிருந்துசெய் யும் புண்ணியம் அணுத்துணையதாயினும் அது மேரு போல் வளர்ந்தோங்குமென்பது சத்தியமொழியாம்.

புண்ணியமுதல்வர்களே ! நாம்செய்த முற்றவப் பயனால் இன்று இம்மான்மியத்தினை ஓதவும் கேட்கவும் பெற்றோம். நாம்செய்த தவமன்றோதவம். இன்னும் இம்மான்மியத்தினை ஆலயங்களிலேனும் மற்றைப்பெரியோர் ஆசிரமங்களிலேனும் அன்பினோடு படிப்பவரும் அதனைக்கேட்பவரும் அம்மரகதாசலமூர்த்தியினது திருவருளால் இம்மையிலே தாம்விரும்பிய எல்லாப்பேறுகளையும் குறைவின்றிப்பெற்று மறுமையிலே அவரது திருவடி நீழலில் வீற்றிருந்து பரமானந்தசுகம் அனுபவித்தலாகிய முத்தியின்பத்தினையும் தப்பாது பெறுவாரென்று கூறியருளினார்.

இந்திரன் அருள்பெற்றசருக்க முற்றிற்று.

மரகதாசலமான்மியம் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.
